# ஈழத்துத்
# தமிழ் நூல் வரலாறு



அரசு

வெளியீடு

வித்துவான் F.X.C. நடராசா

# ஈழத்துத்
# தமிழ் நூல் வரலாறு

வித்துவான் F. X. C. நடராசா



அரசு வெளியீடு,
231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13 (இலங்கை).

அரசு வெளியீடு: 20

முதற் பதிப்பு: ஜூலை

விலை: ரூ. 5-50

# ILATHTHU THAMIL NOOL VAR̊ALARU

(A History of Tamil Literary Works in Ceylon - Part One)

Author: VIDHWAN F. X. C. NADARAJAH
Supt. of Translations,
Official Language Department,
Colombo.

Published by: ARASU PUBLICATIONS,
231, Wolfendhal Street,
Colmbo-13 (Ceylon).

First Edition: 21st July, 1970.

ரெயின்போ பிரின்டர்ஸ் 231 ஆதிருப்பள்ளித் தெரு கொழும்பு-13

# சமர்ப்பணம்



எந்தையைத் தாயை என்னுடன் பிறவிகளை
சிந்தையி லிருத்தித் தீந்தமிழ் அன்னைக்கு
முந்தையோர் கண்ட முதுநூல் எல்லாம்
கந்தமலர் நாடும் அஞ்சிறைத் தும்பியின்
செந்தேன் மாந்திச் சீர்பெற யாத்த
இந்நூல் தன்னை என்னுயிர்க் குயிராம்
தன்னையும் தண்டமிழ் செய்யெனப் பணித்த
அன்னைக்கே சூட்டுவன் அணிபெற என்றே.

# பதிப்புரை

ஈழத்து இலக்கியத்தின் பல் வகைகளையும் வண்ணங்களையும் எடுத்து நிறுத்தும் தரமான நூல்களை வெளியிடுதல் வேண்டுமென்ற நமது இலட்சியத்தினை முற்றுவிக்கும் நமது பணி தொடருகின்றது. காரிய சாதனையைப் பின்னோக்கிப் பார்க்கும் பொழுது பெருமையாகவும் இருக்கின்றது.

புதுமையின் பூரிப்பினையும், பழைமையின் செழுமையையும் நமது வெளியீடுகள் செவ்வனே இணைக்கின்றன. நவீன ஆற்றல் இலக்கியங்களிலே சுவைப்பினை வளர்ப்பதிலே நமக்கு எவ்வளவு ஆர்வம் உண்டோ, அவ்வளவு அக்கறை மரபு நிலையும் வரலாற்று நேர்மையும் பேணப்படல் வேண்டும் என்பதிலும் இருக்கின்றது. 'தோணி' என்ற நமது முதலாவது நூல் சிறுகதைக் கோவையாகும். நமது இருபதாவது நூலாக அமைவுறும் 'ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு' மரபு சார்ந்து எழுந்த இலக்கிய வரலாற்று நூலாகும்.

ஈழத்தின் தற்கால இலக்கிய வரலாற்றைக் கூறும் முதனூலாக, 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்னும் நூலை நமது ஆருவது வெளியீடாக வெளியிட்டோம். அதுவே இளைய பரம்பரையினருக்கு மரபு நிலைகாட்டும் தற்கால இலக்கிய வரலாற்று நூலாகவும், ஆராய்வாளருக்கு உதவும் உசாத்துணை நூலாகவும் இன்றளவும் பயிலப்பட்டு வருகின்றது. 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' குமாரசுவாமிப் புலவர் அவர்களது காலத்திற்குப் பிற்பட்ட வரலாற்றையே விரித்துரைக்கின்றது. அவ்வாறு எல்லை வகுத்தே இரசிகமணி

கனக - செந்திநாதன் அந்நூலினை எழுதி முடித்தார். ஆனால், குமாரசுவாமிப் புலவர் அவர்களுக்கு முற்பட்ட நூல்களின் வரலாறு பற்றிய ஆதாரபூர்வ மான நூல் ஒன்றுதானும் வெளிவராமல் இருந்தது பெருங் குறையே என்பதை அறிந்தோர் அறிவர். இப்பெருங் குறையைக் களைந்தெறியும் வகையில், ஆதாரபூர்வமான நூல் வரலாறாக 'ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு' என்னும் இந்நூலினை வித்து வான் F. X. C. நடராசா அவர்கள் மிகுந்த சீர்மை யுடன் சமைத்துள்ளார்.

வித்துவான் F. X. C. நடராசா அவர்களை அறி யாத தமிழ் இலக்கியகாரர் ஈழத்தில் இலர் எனலாம். ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் துணை மகிமையா ளர் என்னும் விருது பெறும் முதல் வாய்ப்பு இத்தமி ழறிஞருக்கே சித்தித்தது. தணியாத இலக்கிய ஆர்வம் மிக்கவர். தமிழறிஞர் பலருடன் தொடர்பு வைத்து, பெறுவதற்கரிய பல நூல்களை அரிதின் முயன்று சேர்த்து வைத்துள்ளார். அரிய தமிழ் நூல்கள் உள்ள தனியார் நூல்நிலையங்களுள் வித்துவான் F. X. C. நடராசா அவர்களுடையதே முதன்மையானது என் பது மிகைப்படு கூற்றாக அமையமாட்டாது. அந் நூல்களைத் தாம்மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும் என்ற குறுகிய மனப்பான்மை இல்லாதவர். ஈழத்தில் வெளிவந்த பழம் நூல்கள், ஏட்டுப் பிரதிகள், கை யெழுத்துப் பிரதிகள் முதலியவற்றைப் பார்க்க வேண்டுமென்று நினைப்பவர்களுடைய உள்ளங்களிலே முதலில் தோன்றுபவர் வித்துவான் F. X. C. நடராசா அவர்களே. அத்தகையவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, தேவையான தகவல்களைக் கொடுத்து உதவு வதில் முந்தி நிற்கும் இனியர்.

இத்தகைய பெற்றியரே ஆதாரபூர்வமான ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு எழுதவல்ல தக்காரும் ஆவர் என்பதை இந்நூல் செப்பமாக நிறுவுகின்றது.

கிழக்கிலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் என்ற முறையிலே சிலாபம், மூதூர் ஆகிய பல இடங்களிலே நடைபெற்ற தமிழ் விழாக்களிலே அவர் கலந்து கொண்டபொழுது, அவருடன் பிரயாணம் செய்யும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன. அப்பொழுதெல்லாம் பழந்தமிழ் நூல்களைச் சேர்ப்பதிலே அவர் காட்டிய அசாதாரண அக்கறையும், விடாமுயற்சியும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. பட்டிதொட்டிகளிலே மறைந்து கிடக்கும் நூல்களைப் பற்றிய விபரங்களைக்கூட மிகவும் நுண்ணியதாக அறிந்து வைத்திருந்தார். அந்நூல்களை நாடிப் பல மைல் தூரம் நடைப்பயணம் மேற்கொள்ளவும் அவர் தயங்கியது இல்லை. நூலின் பெறுமானம் கருதி ஒரு சிறு நூலுக்கும் நூற்றுக் கணக்கான ரூபாய் கொடுத்துத் தமது சொத்தாக்கிக் கொள்ளவும் அவர் தயங்கியதில்லை. இவ்வாறு அவர் சேமித்துள்ள நூல்களைத் தக்க முறையிலே, பல்லாண்டு காலமாக உரிய வகையில் ஆராய்ந்து இந்த வரலாற்று நூலை ஈழத்து இலக்கிய வரலாற்று மாணுக்கருக்கும் சுவைஞருக்கும் பெரிதும் பயன்படும் உயரிய நூலாக ஆக்கித் தத்தமையினுலும் ஈழத் தாய் பொலிவுறுகின்ருள்.

'ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றறிஞர் தமிழ் இலக்கியப் பரப்பினை வகுத்தவாற்றை எடுத்து விளக்கி, அரசியலடிப்படையிலே அப்பாகுபாடு அமைய வேண்டியிருப்பதனையுணர்த்தி, ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பினை நான்காக வகுத்து, ஒவ்வொரு பிரிவின் இயல்புகளையும் உரைத்துள்ளார்'

என இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள பேரா சிரியர் ஆ.சதாசிவம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று முற்றிலும் உண்மை.

மரபு நிலை என்னும் நிலைக்களனின் நின்று, புதிய குணமாய்வு இயல்புகளுக்கும் இசைந்தொழுகி இந்நூல் எழுதப்பட்டிருப்பது சத்தும் சுவையும் ஊட்ட வல்ல உபாயமாகும்.

நமது நூல்களைப் பெரிதும் ஆதரிக்கும் தமிழ் வாசகர் பெருமக்கள் இந்நூலுக்கும் தமது பேராதரவை நல்குவார்களென நம்புகின்றோம்.

**எம். ஏ. ரஹ்மான்**

**அரசு வெளியீடு**

# என்னுரை

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தேழாம் ஆண்டு என்னால் வெளியிடப்பட்ட ''ஈழமுந்தமிழும்'' என்ற வெளியீட்டிற் சுட்டிக் காட்டப்பட்ட நூல்களின் வரலாறு இந்நூலில் எடுத்தாளப்படுகின்றது. ''ஈழ முந்தமிழும்'' என்றே இந்நூலுக்குப் பெயரிட வேண்டுமென்று முப்பது ஆண்டுகளுக்கு முன் எழுந்த என் வேணவா இக்கால அறிஞர், ஆராய்ச்சியாளர் இவர்களின் போக்கிற்கும் வாக்கிற்கும் இசைய ''ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு' என்ற மகுட நாமத்துடன வெளிவருகின்றது.

ஈழத்தெழுந்த அத்தனை நூல்களும் கிடைத்தற் பாலனவல்ல; சில பல கிடைத்தாலும் அவை முற்றும் முழுவதுமாய்ப் பெறுமாறுமில்லை. நூலாசிரியர் பெயர் வரலாறு அற்றவை சில; முகவுரையற்றவை பல; பதிப்பாசிரியர் பெயர், பதிப்பித்த ஆண்டு, அச்சுக்கூடம் என்ற விபரங்களில்லாதவை இன்னுஞ் சில. இவை இவ்வாறிருக்க, நூல்கள் பெற்றுக்கொள்ள முடியவில்லையே என்ற கவற்சிமேலிடக் கிடைக்கப் பெற்ற நூல்களின் வரலாற்றைக் கைநெகிழவிடல் அடுப்புந்நெருப்புமிழந்து வாய்த்தவிடும் போனது போலாகுமென்று நினைத்தும் எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்க வேண்டுமென்று நினைத்தும் இவ் வளவிலாகுதல் வெளியிடுவதை மேற்கொள்ளலானேன்.

ஈழத்து நூல்களின் வரலாற்றை எழுதவேண்டு மென்று என்னை அடிக்கடி தூண்டினார், இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள். எழுதத் தூண்டினதுமன்றி இந்நூல் நன்முறையில் முற்றுப்பெற இலக்கிய வர

லாற்றில் அயரா ஆர்வமும் ஆராய்ச்சியும் மிக்க கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்களை எனக்கு உறுதுணையாக இருந்து உதவி புரியுமாறும் வேண்டிக் கொண்டனர். கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்கள் செய்த உதவி ஒத்தாசை மதிப்பிடற்குரியதன்று. விரிக்க வேண்டிய இடங்களைச் சுட்டியும், திருத்த வேண்டிய இடங்களைக் காட்டியும், தமது அளப்பரிய ஆராய்ச்சித் திறன்கொண்டு நோக்கிச் சேர்க்க வேண்டிய நுண்குறிப்புகள், மேற்கோள்கள், அடிக்குறிப்புகள் ஆகியவற்றைத் தொட்டும் பல்வாறு தம்மாலியன்ற மட்டும் பேருபகாரியாகத் தமிழ்த் தொண்டு புரிந்துள்ளார். கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றி. பேராசிரியர் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் இந்நூல் வெளிவரப் பல்லாற்றானும் உதவியதுமன்றி உழுவலன்புக் கெழுதகைமையானும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தமக்குள்ள பேரார்வத்தானும் இந்நூலிற்குச் சிறந்ததோர் அணிந்துரை தந்து என்னைப் பெருமைப்படுத்தியுள்ளார். அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் தரமான நூல்களை, அழகிய முறையிலே பதிப்பித்து வெளியிடுவதை அரசு வெளியீட்டினர் தமிழ்த் தொண்டாகவும் அருங்கலையாகவும் பயின்று வருகின்றனர். அரசு வெளியீட்டு நிறுவன அதிபர், இளம்பிறை ஆசிரியர், ரெயின்போ பிரிண்டர்ஸ் உரிமையாளர், என் உற்ற நண்பர், அன்பர் எம். ஏ. ரஹ்மான் அவர்களுக்கும் எனது நன்றியும் கடப்பாடும் உரியதாகும்.

F. X. C. நடராசா

53, மத்திய வீதி,
மட்டக்களப்பு,
21-7-70.

# அணிந்துரை

யாழ்ப்பாணத் தமிழ்வேந்தர் காலந் தொடக்கம் இன்றுவரை ஈழத்தெழுந்த நூற்றுக்கணக்கான தமிழ் நூல்களின் வரலாற்றைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறும் நூல்கள் அண்மைக் காலத்தில் எழலாயின. 'தமிழ் புளூராக்', பாவலர் சரித்திர தீபகம், தமிழ்ப் புலவர் சரித்திரம், ஈழமண்டலப் புலவர் சரித்திரம், ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம், இலங்கையில் இன்பத் தமிழ், ஈழத்து இலக்கிய வளர்ச்சி, ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், ஈழநாட்டின் தமிழ்ச் சுடர் மணிகள் முதலியன இவ்வரிசையில் அமைந்த நூல்களாகும். இவற்றுட் பல, நூல்களின் வரலாற்றையன்றிப் புலவர்களின் வரலாற்றைக் கூறுவன; ஏனைய நூல்கள் இலக்கியங்களின் பண்பை உரைப்பன.

வித்துவான் திரு. F. X. C. நடராசா அவர்களால் எழுதப்பட்ட 'ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு - முதலாம் பாகம்' என்னும் இந்நூல் புதியதோர் பாதையிற் செல்கின்றது. ஈழத்துத் தமிழ் இலக்கியப்புரப்பு என்னும் இயலிலே இலக்கிய வரலாற்றறிஞர் தமிழ்

இலக்கியப் பரப்பினை வகுத்தவாற்றை எடுத்து விளக்கி, அரசியலடிப்படையிலே அப்பாகுபாடு அமையவேண்டியிருப்பதனையுணர்த்தி, ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பினை நான்காக வகுத்து, ஒவ்வொரு பிரிவின் இயல்புகளையும் உரைத்துள்ளார். காவியங்கள், புராணங்கள் என்னும் இயல்களிலே அவ்வகைகளில் அடங்கக் கூடிய ஈழத்து நூல்களைப் பற்றிய செய்திகளைத் தந்துள்ளார். காவியங்களுக்கும் புராணங்களுக்கும் தரப்பட்டுள்ள தோற்றுவாய்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளமை கவனிக்கப்பாலது. ஒவ்வொரு நூலையும் பற்றி எழுதும் போது நூலாசிரியர் வரலாறு, நூலின் செய்திகள், நூலாசிரியரின் ஏனைய படைப்புகள் என்ற முறையினை ஆசிரியர் பின்பற்றியுள்ளார். நூலின் செய்திகள் பற்றிக் கூறுமிடத்து நூற்பொருள், நூலமைப்பு, நூலின் தன்மை, நூலின் பதிப்பு என்பன பற்றிய செய்திகளைத் தந்துள்ளார். நூலின் தன்மை பற்றி ஆசிரியர் விரித்துக் கூறுமை நூலின் இயல்பினையொட்டிப்போலும்.

முன்னோர் நூல்களிற் கருகலாகக் கிடக்கும் கருத்துக்களின் ஐயங்களைப் போக்குவதும் முன்னோர் கூறத்தவறிய இடங்களை விரித்தாய்

வதும் ஆசிரியரின் நோக்கமாகத் தெரிகின்றது. இவற்ருல் இந்நூல் ஒரு விழுமிய ஆராய்ச்சி நூலாகத் திகழ்கின்றது எனலாம். மேல்வரும் கூற்றுக்கள் எம் கருத்தை வலியுறுத்தும்: 'பின்னவர் கூற்றே பொருத்தமுடைத்தாம்' (பக். 76); 'எனவே சிறப்புப் பாயிரச் செய்திகளைச் சித்தாந்தமாகக் கொள்வது கடினமாகும்' (பக். 97); 'இவர் வாழ்ந்த காலம் பற்றி அறிஞர் முரண்பட உரைப்பர்' (பக். 108); 'இப்பாடல் நாட்டுப் படலத்திற்கு உரியது என்று திடமாகக் கூறமுடியாது' (பக். 145). இன்னேரன்ன கருத்துக்கள் ஆக்கியோனின் ஆராய்ச்சி மனப்பான்மையையும் நடுவுநிலை மாருப் பண்பையும் எடுத்து விளக்குவனவாகும்.

திரு. நடராசா அவர்கள் சென்ற முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்தின் நாளு பக்கங்களுக்குஞ் சென்று அரிதிற் றேடிப் பெற்றுப் பாதுகாத்து வைத்திருந்த பழந்தமிழ் ஏடுகளை இந்நூலாய்வுக்குச் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளனர் எனலாம். இந்நூல் வரிசையின் இரண்டாம் பாகமாகிய 'பிரபந்தங்கள்' பற்றிய ஆய்வு நூலும் காலந்தாழ்க்காது வெளிப்படுத்தப்படுமென எதிர்பார்க்கிறேம்.

ஈழத்து நூல்களைப் பற்றிய இச்சிறந்த ஆராய்ச்சி நூல் பல்கலைக்கழக மாணவர்க்கும்

பிறர்க்கும் மிக்க பயன்தரு நூலெனலாம். ஆசிரியர் நீடு வாழ்ந்து மேலும் பல நூல்களை ஆக்கித் தமிழிலக்கிய வுலகுக்கு விருந் தளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

ஆ. சதாசிவம்
தமிழ்ப் பேராசிரியர்

இலங்கைப் பல்கலைக் கழகம்
கொழும்பு
4.7.1970

# ஈழத்துத்
# தமிழ் நூல் வரலாறு

## —பகுதி ஒன்று

உள்ளே .....

1. ஈழத்து இலக்கியப் பரப்பு
2. காவியங்கள்
3. புராணங்கள்

# ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பு

'தமிழ் இலக்கியப் பரப்பு மிகவும் விரிவானது; கிறித்து சகாத்தத்திற்கு முன்ருெடங்கி இக்காலம் வரை விரிந்துள்ளது; மேலும் விரிந்து செல்லும். காலவளவில் மட்டுமன்றி இலக்கிய வகைகளிலும் இலக்கண வகைகளிலும் எண்ணிக்கையிற் பரந்ததாகும். இப்பெற்றித்தாய தமிழ் இலக்கியத்தினைப் பாகுபடுத்தினலன்றி இதன் வரலாற்றினை அவதானிப்பது கடினமாகும். இக்காரணத்தினல் அறிஞர் பலர் தமிழ் இலக்கியத்தினைப் பகுதிகளாக வகுக்க முற்பட்டனர்.

ச. பவானந்தம்பிள்ளை பதிப்பித்த பேரகத்தியத்திரட்டின் பின்னிணைப்பாகக் காணப்படும் 'பேரிசைச் சூத்திரம்' தமிழ் மொழியின் காலங்களை வகுத்துக் கூற முற்படுகின்றது.[1] மேல்வரும் நூற்பாக்களை நோக்கின் இவ்வுண்மை புலனகும்.

---

1. பேரகத்தியத்திரட்டு. சென்னை, எஸ். பி. ஸி. கே. அச்சுக்கூடம் (1912). பக். 83 - 86. பேரிசைச்சூத்திரம் அகத்தியரின் மாணக்கர் கழாரம்பரால் இயற்றப்பட்டதாக வழங்குகின்றது. இக்கூற்றின் உண்மை துணிதற்கியலவில்லை.

மொழியுளத் தாலறி யாச்சிவ வுணர்வாற்
றனியியன் மறைமுன் சாவாக் கல்வியாய்
ஐந்தக் கரத்தி லமையுந் தமிழ்மொழி
ஒலிவடி வாகி யுலவு மநாதியில்.[2]

அம்மு தற்சிவம் அம்மைக்கும் சேய்க்கும்
உயிர்கள் ஞானத் துவந்தாங் கொளிர
உரைத்த தக்கரக் கால மாகும்.[3]

மகத்துவ ஞான சித்துவல் லவனும்
அகத்தியன் றவத்தா லருந்தமிழ் பெற்றிங்
கியலிசை நாடகங் களுக்கீ ராறின்
இயலாய் வகுத்த திலக்கணக் காலம்.[4]

மோனையாந் தெய்வத் தமிழ்மொழி நிறீஇய
சங்கத் தலைவர்கள் தலைமை பூண்டங்
கறம்வள ரவையில் அரங்கே றியநாள்
வழுதியர் வளர்த்தது சங்க காலம்.[5]

சித்தெலா நிறைந்து சித்தா யமர்ந்த
தேசிகர் மரபில் சிறந்து விளங்கும்

---

2. இக்காலத்தை அபோதகாலம் என்பர் சி. வை. தாமோதரம் பிள்ளை.

3. 'அகத்தியரால் நெடுங்கணக்கு ஏற்பட்டது முதல் அகத்தியம் நிறைவேறியது வரைக்குஞ் சென்ற காலத்தை அக்ஷரகால மென்றும்' என்பர் சி. வை. தாமோதரம்பிள்ளை.

4. அகத்தியரது மாணாக்கர்கள் பன்னிருவரும் இலக்கணங்கள் இயற்றிய காலம் இலக்கணகாலம் என்பர் சி. வை. தாமோ தரம்பிள்ளை.

5. இதனைச் சமுதாயகாலம் என்பர் சி. வை. தாமோதரம்பிள்ளை.

மடாதி பதிகளா மாண்பமை ஞானியர்
அளவிற் படுவதவ் வதீன காலம்.[6]

கொல்லா விரதம் பூண்ட நலத்தோர்
அறிவா னிறைந்த வறமாண் புடையோர்
தமிழின தருமை தனியா யுணர்ந்தோர்
கருவிநூற் காவியங் கழறும் பெரியோர்
கால கதியாற் கடைநிலைப் படுவோர்
தம்வயப் படுவது சமண காலம்.

தெய்வ மறையாம் செந்தமிழ்ப் பிதாமொழி
ஆரிய நங்கையோ டிணைந்து கலந்து
காவிய நடையால் கவிகள் பொழிய
பொலிவுபெற் றிருப்பது புராண காலம்.[7]

தமிழினை யறியார் சார்பினிற் பட்டுப்
பெருமை முற்றும் பிறழ்ந்து நோய்பட்டு
அந்நியர் வசப்பட் டழிந்து பிற்பட்
டாதர விலாம லாகுங் காலத்
தறனிகழ் அதம காலம் சென்றபின்
உண்மதச் செல்வரும் உயர்ஞா னியரும்
கொல்லா விரதங் கொளுமந் தணரும்
உலகிற் பரவி யுவந்தாங் கொளிரவும்
தமிழே சிவமாய்த் தழைத்து வளரவும்
அற்புதச் சிற்சபை யண்ணல் விளையாட்
டருளாற் றழைக்கு மதுசத் தியமே.

---

6. இந்நூற்பா இடம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகக் கருத இடமுண்டு. ஆதீன காலத்தைச் சி. வை. தாமோதரம்பிள்ளை அநாதாரகாலம், சமணர்காலம், இதிகாசகாலம் ஆகிய மூன்றிற்கும் பின் அமைப்பர்.

7. இதனை இதிகாசகாலமென்பர் சி. வை. தாமோதரம்பிள்ளை.

சி. வை. தாமோதரம்பிள்ளை தமது வீரசோழியப் பதிப்புரையிலே "தமிழ்ப்பாஷையின் கால வருத்தமானம் அபோதகாலம், அக்ஷரகாலம், இலக்கண காலம், சமுதாயகாலம், அநாதாரகாலம், சமண காலம், இதிகாசகாலம், ஆதீனகாலமெனக் கூறுபடும்", எனக் கூறி அக்கூறுகளை விளக்குவர்.[8] பேரிசைச் சூத்திரத்திற் காணப்படும் நூற்பாக்களை விளக்கித் திருத்தியமைத்தது போன்று தாமோதரம்பிள்ளையின் பகுப்புக் காணப்படுகின்றது. தாமோதரம்பிள்ளையின் பகுப்பின் விளக்கத்தை அவதானிப்போம்.

1. அபோத காலம்: வரிவடிவின்றி ஒலிவடிவு மாத்திரமாய்த் தமிழ் நிகழ்ந்த காலம். இது அகத்தியர்க்கு முன் சென்ற காலம்.

2. அக்ஷர காலம்: அகத்தியரால் நெடுங்கணக்கு ஏற்பட்டது முதல் அகத்தியம் நிறைவேறியது வரைக்குஞ் சென்றகாலம். தமிழுக்கு ஆதியிலக்கிய காலம்.

3. இலக்கண காலம்: அகத்தியரது மாணுக்கர்கள் பன்னிருவரும் தத்தம் பெயரால் வேறுவேறிலக்கணமும் அனைவரும் ஒருங்கு சேர்ந்து புறப் பொருட் பன்னிருபடலமும் எழுதிய காலமாம்.

4. சமுதாய காலம்: இது மதுரைச் சங்கத்தார் காலமாகும். மூன்று சங்கத்திற்குங் காலம் பதினுயிரம் வருஷமென்ப. உக்கிரப்

8. வீரசோழியம். சென்னபட்டணம், வித்தியாவர்த்தனி அச்சுக்கூடம் (விசு வருடம் - 1881). பதிப்புரை, பக். 11 - 22

பெருவழுதி காலத்திலே (கி. மு. 120வரை) சங்கத்தார் தம் நெறி பிசகினபோது தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாராலும் ஔவை இடைக்காடராலும் அவமானப்பட்டுக் கர்வபங்கமடைந்து அத்தோடே சங்கமும் முடிய ஏதுவாயிற்று. சங்கத்துள் அரங்கேறினவற்றுட் தேவர் குறளே கடைசியானது.

5. அநாதார காலம் அல்லது புத்தர் காலம்: கடைச்சங்கம் அழிந்த பின்பு ஏறக்குறைய 200 வருடங்கள் தமிழ் ஆதரவற்றிருந்தது.

6. சமணர் காலம்: இவர்களிடம் தமிழ் பரிபாலனம் பெற்றது ஏறக்குறைய முந்நூறு வருடம். சிந்தாமணி, வீரசோழியம் தோன்றிய காலம்.

7. இதிகாச காலம்: அப்பால் முன்பின் 800 வருடம் கொண்ட காலப் பிரிவு; நைடதம், பாரதம் இராமாயணம், இரகுவமிசம் என்பன தோன்றிய காலம். வடமொழியிலிருந்து புராணம், இதிகாசம், சமய சாஸ்திரம், தலமான்மியம், கணிதம், சோதிடம் முதலியன தமிழில் பெருமளவு இடம் பெற்ற காலம். அதிவீரராமன், புகழேந்தி ஒட்டக்கூத்தர், கம்பர், அம்பிகாபதி, தமிழ்த்தண்டி, வில்லிபுத்தூரர், வரந்தருவார், கச்சியப்ப சுவாமிகள், சேக்கிழார், அரசகேசரி, செகராசசேகரர் முதலிய தமிழ் வல்லோர் தலைப்பட்ட காலம்.

8. ஆதின காலம்: சித்தாந்த சமய சாஸ்திரங்கள், கோவிற்புராணம், இலக்கணக்கொத்து,

நன்னூல் விருத்தி, பறியலூர்ப்புராணம், தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, காஞ்சி புராணம், திராவிடமகாபாஷியம் முதலி யனவற்றின் காலம். குமரகுருபரசுவாமிகள், வைத்தியநாதநாவலர். குகைநமச்சிவாயர், ஞானப்பிரகாசசுவாமிகள், பரஞ்சோதி முனி வர் முதலியவர்கள் வாழ்ந்த காலம்.

சி.வை.தாமோதரம்பிள்ளையின் பாகுபாட்டை எம். ஸ்ரீநிவாச ஐயங்கார் வன்மையாகக் கண்டித்துள் ளார்.[9] எஸ்.வையாபுரிப்பிள்ளையும் சி.வை.தாமோ தரம்பிள்ளையின் பகுப்பைக் கண்டித்துள்ளார்.[10] வரலாற்றுணர்ச்சி பரவாதகாலத்திலே தாமோதரம் பிள்ளை பாகுபாடு செய்ய முயன்றார். இவர் 'சமுதாய காலம்' பற்றிக் கூறுவன தற்கால ஆய்வாளரால் முற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டவையல்ல. வீரசோழி யம், நைடதம், இரகுவம்மிசம் முதலியன இவர் வகுத்தமைத்த காலப் பிரிவுகளுக்குரியனவல்ல என்பது இக்கால அறிஞர் கருத்தாகும். அகத்தியர தும் அவர் மாணாக்கரினதும் காலங்களோ அவர் களது செய்திகளோ இன்னமும் தெளிவாகவில்லை.

கால்ட்வெல் அவர்கள் தமது திராவிட மொழி களின் ஒப்பியல் இலக்கண முன்னுரையிலே[11] தமிழ்

---

9. Tamil Studies - Madras: The Guardian Press (1912) PP. 198 - 200.

10. தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம். தமிழ்ப்புத்த காலயம், சென்னை - 5. (1957) பக். 28.

11. 1913ம் ஆண்டில் வெளிவந்த மூன்றாம் பதிப்பிலே திராவிட இலக்கிய வரலாறு பற்றிய செய்திகளைத் தரும் பகுதிகள்

இலக்கிய வரலாற்றைப் பாகுபடுத்த முற்பட்டார். இவர் ஏழு பிரிவுகளாகத் தமிழ் இலக்கியப் பரப்பினைப் பாகுபடுத்தியுள்ளார். பின்வந்த ஆங்கில அறிஞர் இவரைப் பெரும்பாலும் பின்பற்றுவதால் இப் பகுப்பினை நாம் விரிவாக நோக்குவோம்.

1. சமணகாலம் அல்லது மதுரைச் சங்ககாலம்: (கி. பி. எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை) குறள், நாலடியார், சிந்தாமணி, திவாகரம், நன்னூல் முதலியன தோன்றிய காலம்.

2. இராமாயண காலம்: (பதின்மூன்றாம் நூற்றாண்டு) கம்பன், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், ஔவையார் முதலியோரது காலம்.

3. சைவ மீட்சிக்காலம்: (பதின்மூன்றாம் பதினான்காம் நூற்றாண்டுகள்) தேவாரம், திருவாசகம் முதலியவற்றின் காலம்.

4. வைணவகாலம்: (பதின்மூன்றாம் பதினான்காம் நூற்றாண்டுகள்) நாலாயிரத் திவ்விய பிரபந்தம் தோன்றிய காலம்.

5. இலக்கிய மீட்சிக்காலம்: (பதினைந்தாம் பதினாறும் நூற்றாண்டுகள்) ஞானவாசிட்டம், சைவ சித்தாந்த நூல்கள் தோன்றிய காலம்; அதிவீரராம பாண்டியன், வில்லிபுத்தூரார் வாழ்ந்த காலம்.

---

நீக்கப்பட்டுள்ளன; நீக்கப்பட்ட பகுதிகளைச் சென்னைப் பல்கலைக்கழகம் 1956ஆம் ஆண்டு வெளியிட்ட பதிப்பிற் சேர்த்துக் கொள்ளாதது வருந்தத்தக்கதாகும்.

6. பிராமண எதிர்ப்புக் காலம்: (பதினேழாம் நூற்றாண்டு) அகத்தியர், சிவவாக்கியர், திருமூலர், பத்திரகிரியார், பதினெண்சித்தர்கள் வாழ்ந்த காலம்.

7. தற்காலம்: (பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகள்) பட்டணத்தார், தாயுமானவர், சிவப்பிரகாசர், வீரமாமுனிவர் வாழ்ந்த காலம்.

கால்ட்வெல் அவர்களது பகுப்பின்படி கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பதாகத் தமிழில் இலக்கியம் இருந்ததாக அவர் கொள்ளவில்லை. இக்கூற்றுப் பொருந்தாதென்பதைக் கூறவேண்டியதில்லை. மூவேந்தர் காலத்திலெழுந்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய தொகை நூல்களோ தொல்காப்பியமோ அன்றிச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியனவோ இப்பகுப்பில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பண்டைத் தமிழரின் இலக்கிய பாரம்பரியத்தையுணராது கால்ட்வெல் அவர்கள் தமிழ் இலக்கியப் பரப்பினைப் பாகுபடுத்த முற்பட்டமைக்கு முக்கிய காரணமாய் விளங்குவது இவர் காலத்தில் இந்நூல்களிற் பல அச்சுவாகனம் ஏறாமையேயாகும். கல்வெட்டாராய்ச்சியின் ஆரம்ப தசையில் கால்ட்வெல் அவர்கள் கல்வெட்டுச் சான்றுகளைப் பயன் படுத்த முற்பட்டமையும் அவர் பாகுபாடு வரலாற்றுணர்ச்சி குன்றியமைவதற்கு ஒரு காரணமாகும். ஆழ்வார்களை இராமானுசரின் சீடர்களாகக் கொண்டமை கால்ட்வெல் ஏனைய சமயத்தவரின் வரலாறுகளை அறியவில்லை என்பதைச் சுட்டுகின்றது. இவர் கூன்பாண்டியன் பற்றி நிகழ்த்தும் ஆய்வும் இவர் காலத்தில் வரலாற்றுணர்ச்சி பரவாத நிலையைக் குறிக்கின்றது.

இத்தகைய பாகுபாட்டினைப் பின்பற்றி மேனாட்டு அறிஞர் தமிழ் இலக்கிய வரலாறு பற்றிக் கருத்து ரைத்தனர். வில்லியம் ஹண்டர், கிரையர்சன், ரோஸ்ட் முதலிய அறிஞர் பலர் கால்ட்வெல் அவர் களைப் பின்பற்றியுள்ளனர்.[12] பி.சுந்தரம்பிள்ளை மேனாட்டறிஞர் கருத்துக்களை வன்மையாகக் கண்டித்த போதும்[13] அவர்கள் தங்கள் கருத்துக்களை மாற்றி யமைத்துக் கொள்ள முயலவில்லை. அண்மைக் காலத் திலேயே இத்தகைய நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

வி.கோ.சூரியநாராயணசாஸ்திரியார் தமது 'தமிழ் மொழியின் வரலாறு' எனும் நூலிலே தமிழ் நூற்பரப்பினைப் பாகுபாடு செய்ய முயன்றார்.[14] தமிழ்நூற் பரப்பினை ஆதிகாலம், இடைக்காலம், பிற்காலம் என மூன்று பிரிவாகச் சாஸ்திரியார் பகுத்துள்ளார். முப்பெரும் பிரிவாக அமையும் இப் பகுப்பு தமிழ் இலக்கிய வரலாற்றின் கதியை நன்கு புலப்படுத்துவதன்று. வரலாற்றுணர்ச்சி குன்றிய இயல்பினை 'ஆதிகாலம்' என்ற பிரிவு தெளிவுபடுத்து கின்றது. கர்ணபரம்பரைச் செய்திகளை ஆதாரமாகக்

---

12. **M.Srinivasa Aiyangar: Tamil Studies (1914)pp. 204-210.**

13. **"The age of Tirugnana Sambander" Madras Christian College Magazine (1891);** *இக்கட்டுரை பின்பு* **"Some Milestones in the History of Tamil Literature"** *என்ற தலைப்பில் நூலுருவம் பெற்றது (1895).*

14. *தமிழ்மொழியின் வரலாறு, பத்தாம் பதிப்பு (1958) பக். 106-126.*

கொண்டு ஆதிகாலத்தையமைத்துள்ளார் சாஸ்திரி யார். இன்று கிடைக்கின்ற அகத்தியச் சூத்திரங்கள் தொல்காப்பியத்திற்கு முற்பட்டவை என்று கூற அறிஞர் ஒப்பமாட்டார். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் காலம் கி. பி. 100க்கு முற்பட்டது என்பது தற்கால ஆய்வாளர் கருத்திற்கு முரணானது. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை ஆகியன ஆதிகாலத்திற்கு உரியனவாகக் கூறல் பொருந்தாக் கூற்றாகும். கி. பி. 100 முதற் கி. பி. 600 வரையுமுள்ள இடைக்காலத்தின் முற்பகுதியில் ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள், திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவையா , மேருமந்தரபுராணம், முத்தொள்ளாயிரம், திவாகரம், பிங்கலம், அணியியல் முதலியன எழுந்தன என்று சாஸ்திரியார் கூறுவர். இந்நூல்களுட் பல கி. பி. 600க்குப் பின்பு எழுந்ததாகத் தற்கால ஆராய்ச்சிகள் சுட்டுகின்றன. இடைக் காலத்தின் பிற்பகுதி (கி. பி. 600—கி. பி. 1400) பற்றியும் பிற்காலம் (கி. பி. 1400—) பற்றியும் சாஸ்திரியார் கூறும் நூற்செய்திகளும் புலவர் செய்திகளும் பெருமளவிற்குப் பொருத்தமுடையனவாகக் காணப்படினும் இவற்றிற்குத் தரப்பட்டுள்ள காலநீட்சியின் காரணமோ பகுப்பிற்குரிய அடிப்படையோ தெளிவாகவில்லை. இலக்கிய கதியை அடிப்படையாகக் கொண்டு சாஸ்திரியார் பகுக்கவில்லை என்பது மட்டும் தெளிவாகின்றது.

எம். ஸ்ரீநிவாச ஐயங்கார் தமது தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள் என்ற ஆங்கில நூலிலே15 தமிழ்

---

15. Tamil Studies or Essays on the History of the Tamil people, Language, Religion and Literature. Madras: The Guardian press (1914) PP. 210-226.

இலக்கியப் பரப்பினை ஐந்து காலப்பிரிவுகளாகப் பகுத்துள்ளார். சி. வை. தாமோதரம்பிள்ளை, வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார், கால்ட்வெல் முதலியோரின் பகுப்புகளை ஆராய்ந்து மதிப்பிட்ட ஐயங்காரின் பாகுபாடு வருமாறு:-

1. **சங்ககாலம் (கி. மு. 500 — கி. பி. 500):** எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு,[16] சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், தொல்காப்பியம், பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை, மார்க்கண்டேயனார் காஞ்சி, நாலடிநூல் (நக்கீரர்), தேசிகமாலை, ஊசிமுறி (இடைக்காடர்) முதலிய நூல்கள் தோன்றிய காலம். திருவள்ளுவர், சீத்தலைச்சாத்தனார், இளங்கோவடிகள், கபிலர், பரணர், நல்லந்துவனார், நக்கீரர், மாங்குடிமருதனார், கல்லாடனார், நல்லூர் நத்தத்தனார், கடியலூர் உருத்திரங்கண்ணனார், நப்பூதனார், பெருங்கௌசிகனார், கோதமனார், முடத்தாமக்கண்ணியார், பேயனார், மயேச்சுரர், அவிநயனார், பல்காயனார், கையனார், காக்கைபாடினியார், நற்றத்தனார் முதலியோர் வாழ்ந்த காலம்.

2. **பத்தி இலக்கிய காலம் (கி. பி. 500 — கி. பி. 950)** அறுபத்துமூன்று நாயன்மாரும் பன்னிரு ஆழ்வார்களும் திகழ்ந்த காலம்; மாணிக்கவாசகர், கபிலதேவர், பரணதேவர், நக்கீரதேவர், கல்லாடனார் முதலியோர் வாழ்ந்த காலம்;

---

16. ஐயங்கார் நாலடியாரையும் பழமொழியையும் பத்தியிலக்கிய காலத்திலெழுந்தனவாகக் கூறுவது காண்க.

குண்டலகேசி, வளையாபதி, சிந்தாமணி, ஐஞ்சிறுகாப்பியங்கள், நாலடியார், பழமொழி, நேமிநாதம், காரிகை (யாப்பருங்கலக்காரிகை), சூடாமணிநிகண்டு, திவாகரம், பிங்கலந்தை முதலியன தோன்றிய காலம்.

3. **மொழிபெயர்ப்புக்காலம்** (கி. பி. 950—கி. பி. 1200) கம்பர், ஒட்டக்கூத்தர், கச்சியப்பர், பெரும்பற்றப்புலியூர்நம்பி, பரஞ்சோதி முனிவர், புகழேந்தி, தண்டி, புத்தமித்திரர், பவணந்தி முதலியோர் வாழ்ந்த காலம்; நம்பியாண்டார் நம்பி பதினெரு திருமுறைகளைத் தொகுத்த காலம்; நாதமுனிகள் நாலாயிரப் பிரபந்தத்தைத் தொகுத்த காலம்; சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் எழுதிய காலம்; வைணவர் திவ்யசூரி சரிதை, குருபரம்பரை எழுதிய காலம்; சோழர் செல்வாக்குப் பெற்ற காலம்; கலிங்கத்துப்பரணி, 'மூவருலா' முதலியன தோன்றிய காலம்.

4. **வியாக்கியான காலம்** (கி. பி. 1200 — கி. பி. 1450): அருணந்திசிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாசாரியார், பேராசிரியர், இளம்பூரணர், சேனுவரையர், பரிமேலழகர், நச்சினர்க்கினியர், அடியார்க்குநல்லார் முதலியோர் வாழ்ந்த காலம்.

5. **தற்காலம்** (கி. பி. 1450 — கி. பி. 1850): ஆதீனங்கள் தமிழ் வளர்த்த காலம்; வில்லிபுத்தூரர், பிள்ளைப்பெருமாளையங்கார், தாயுமானவர், அதிவீரராமபாண்டியன், உமறுப்புலவர், வீரமாமுனிவர் முதலியோர் வாழ்ந்த காலம்; நன்னெறி, நீதிநெறி விளக்கம்,

பிரபுலிங்கலீலை, காசிகாண்டம், முகையதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ், திராவிட மாபாஷியம், இலக்கணக்கொத்து, இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் தோன்றிய காலம்.

ஐயங்காரின் பாகுபாடு முன்னவர் வகுத்தனவற்றிலும் பார்க்கப் பொருத்தமாகக் காணப்படினும் குறைபாடுகள் இல்லாதது என்று கூறுவதற்கில்லை. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலப் பிரிவில் இவரடக்கும் நூல்களிற் பல பிற்பட்ட நூற்றாண்டுகளுக்குரியனவாகத் தற்கால ஆய்வாளராற் கொள்ளப்படுகின்றன. ஊசிமுறி கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்ற கருத்துத் தற்கால ஆய்வாளருக்கு உடன்பாடானதல்ல.[17] அறுபத்து மூன்று நாயன்மாரும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்ற கருத்தை ஆதரியாதவரும் உளர்.[18] நேமிநாதம், யாப்பருங்கலக்காரிகை முதலியன கி. பி. 950க்குப் பிற்பட்டனவாகக் கருதப்படுகின்றன. தற்காலம் என்ற பிரிவு இலக்கிய கதியை நன்கு புலப்படுத்துவதாகக் கூறுவதற்கில்லை.

எம். எஸ். பூரணலிங்கம்பிள்ளை தமிழ் இலக்கியம் என்னும் தமது ஆங்கில நூலிலே[19] சங்ககாலம், பௌத்த-சமணகாலம், சமயமீட்சிக்காலம், இலக்கிய

---

17. எஸ்.வையாபுரிப்பிள்ளை; இலக்கிய தீபம் (இரண்டாம் பதிப்பு, 1955) பக். 82.

18. எம்.இராசமாணிக்கம்: பெரியபுராண ஆராய்ச்சி (இரண்டாம் பதிப்பு, 1960) பக். 79-97.

19. Tamil Literature. The Bibliothica, Munnirpallam (1929)

மீட்சிக்காலம், ஆதீனகாலம், ஐரோப்பிய பண்பாட்டுக் காலம் என ஆறு பொதுப்பிரிவுகளை ஏற்றுக்கொள்ளுகிறார். எம்.ஸ்ரீநிவாச ஐயங்காரின் பாகுபாட்டிலும் பார்க்கப் பிள்ளையவர்களின் பாகுபாடு பொருத்தமுடையதாகக் காணப்படினும் 'சங்ககாலம்' பற்றிய செய்திகள் கர்ணபரம்பரைச் செய்திகளாகவே காணப்படுவதும் இக்காலத்திற்களிக்கப்பட்டுள்ள கீழெல்லை (கி. பி. 100) தற்கால ஆய்வாளரால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதல்ல என்பதும் குறிப்பிடத்தக்கன. மேலும் பூரணலிங்கம்பிள்ளை தமது கால ஆராய்ச்சிக்குப் பெரும்பாலும் கர்ணபரம்பரைச் செய்திகளையே நம்பினார் என்பதும் ஈண்டு சுட்டற்பாற்று.

வி.செல்வநாயகம் தமது 'தமிழ் இலக்கிய வரலாறு'[20] என்னும் நூலிலே முன்னோர் வழியிலே நின்று தமிழ் இலக்கியப் பரப்பினைச் சங்க காலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், இருபதாம் நூற்றாண்டு (முடிவுரை) எனப் பகுத்துள்ளார். சி.பாலசுப்பிரமணியன், எம்.ஆர்.அடைக்கலசாமி முதலியோர் எழுதிய இலக்கிய வரலாற்று நூல்களிலும் இப்பாகுபாட்டினைக் காணலாம். 'சங்கமருவிய காலம்' என்ற காலப்பிரிவிலே அடக்கப்பட்டுள்ள நூல்கள் பலவற்றின் காலம் தெளிவாகாத நிலையிலேயே இதனுள் இடம்பெறுகின்றன. அரசியலடிப்படையிலே பல்லவர் காலம் முதலாக வகுத்த வி.செல்வநாயகம் முதலிரு காலப்பிரிவுகளையும் வேறு அடிப்படையிலே அமைத்தனர்.

---

20. தமிழ் இலக்கிய வரலாறு (சுருக்கம்) அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம் (1951).

எஸ்.வையாபுரிப்பிள்ளை தமது 'தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம்' என்னும் நூலிலே[21] பதினொரு பிரிவுகளாகத் தமிழ்நூற் பரப்பினைப் பாகுபாடு செய்துள்ளார். பிள்ளையவர்களின் பாகுபாடு வருமாறு:-

1. **முற்சங்க காலம் (கி. பி. 100— 350):** தொகைச் செய்யுள்கள், பத்துப்பாட்டிற் பல தோன்றிய காலம் (பண்டைத்தமிழ்).

2 **தொகைசெய் காலம் (கி. பி. 400—500)** முற்சங்கப் பாடல்கள் தொகையாகத் தொகுக்கப்பட்ட காலம்: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு தொகுக்கப்பட்ட காலம்.

3. **பிற்சங்க காலம் (கி. பி. 600 — 750):** கலித்தொகை, பரிபாடல்.

4. **பக்திநூற் காலம் (கி. பி 600—900):** தேவாரம், திவ்யபிரபந்தம், திருமுருகாற்றுப்படை, திருவாசகம் முதலியன.

5. **நீதிநூற் காலம் (600—850:)** திருக்குறள் முதலிய கீழ்க்கணக்கு நூல்கள் (3, 4, 5 பிரிவுகள் முன்-இடைக்காலத்தமிழ்).

6. **முற்காவிய காலம் (கி. பி. 750—1000):** பஞ்சகாவியங்கள்.

---

21. முதற் பதிப்பு (1957) பக். 34-36.

7. **பிற்காவிய காலம் (கி. பி. 1100—1300):** பாரதம், இராமாயணம் முதலியன.

8. **தத்துவநூற் காலம்: (கி. பி 1000—1350):** மெய்கண்ட தேவர், வைஷ்ணவப் பெரியார்கள் முதலியோரது தத்துவநூல்கள்.

9. **வியாக்கியான காலம் அல்லது உரையியல் காலம் (கி. பி 1200—1500):** இளம்பூரணர், குணசாகரர், பேராசிரியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் முதலியோரது உரைகள் (6, 7, 8, 9, பின்-இடைக்காலத் தமிழ்).

10. **புராண-பிரபந்த காலம் (கி பி. 1500—1850):** குமரகுருபரர், பிள்ளைப்பெருமாளையங்கார், சிவப்பிரகாச முனிவர் முதலியோரின் நூல்கள், கந்தபுராணம், திருவிளையாடல் முதலியன தோன்றின (பிற்காலத் தமிழ்).

11. **தற்காலம் (கி. பி. 1850):** இராமலிங்கசுவாமிகள், நாவலர், பி. சுந்தரம்பிள்ளை, உ. வே. சாமிநாதையர், பாரதி முதலியோர்.

வையாபுரிப்பிள்ளையின் பாகுபாடு பெருமளவிற்கு நூல்களின் தன்மையை யொட்டி அமைக்கப்பட்டுள்ளது என்று கருத, பக்திநூற் காலம், நீதிநூற் காலம், தத்துவநூற் காலம், வியாக்கியான காலம், புராணபிரபந்த காலம் முதலிய பிரிவுகள் இடமளிக்

கின்றன.[22] ஆயினும் இத்தகைய பாகுபாடு வேண்டற்பாலதோ என்று எண்ண அவருடைய பகுப்பு நம்மைத் தூண்டுகின்றது. பத்திநூற் காலம் (கி. பி. 600-900) என்னும் பிரிவின் கால எல்லைக்குள்ளேயே பிற்சங்க காலம் (கி. பி. 600-750), நீதிநூற் காலம் (கி. பி. 600-850) ஆகிய இரண்டும் அடங்கி விடுகின்றன. முற்காவிய காலமும் (கி. பி. 750-1000) பெரும்பாலும் பத்திநூற் காலப்பிரிவுக்குள்ளேயே அடக்கமாகின்றது. ஒரு காலப்பிரிவாகக் கொள்ளாது நான்கு காலப்பிரிவுகளாகப் பிள்ளையவர்கள் கொண்டமை இலக்கிய வரலாற்று மாணுக்கர்களுக்குத் தெளிவையேற்படுத்தும் செயல் என்று கூறல் கடினமாகும். ஒரு காலப்பிரிவில் எழுந்த நூல்கள் யாவும் ஒரே தன்மையனவாய் அமையவேண்டும் என்ற கருத்து வலிந்துரையாக விளங்குகின்றது. தமிழிலக்கிய நெறியினை அவதானிப்போர் அதனில் ஒரு தொடர்ச்சியையுஞ் சிற்சில காலப்பிரிவுகளிற் சில பண்புகள் மேலோங்குவதையும் அதே நேரத்தில் மருவிய காலப் பண்புகள் சில முன்னைய செல்வாக்குடன் விளங்காத போதும் இடம் பெறுவதையுஞ் சுட்டுவர். முற்காவிய காலம், பிற்காவிய காலம் என்று பிள்ளையவர்கள் கொண்ட இரு பிரிவுகளும் இலக்கிய கதியின் வேறுபாடுகளைச் சுட்டுவதாகக் கூறல் பொருந்தாது.[23] இரு

---

22. எஸ். வையாபுரிப்பிள்ளை, "பொதுப்பட, இலக்கிய சரிதத்தில் ஒரு காலத்திலே எழுந்த நூல்கள் அமைப்பு நெறியில் ஒரு தன்மையவாய் பெரும்பாலும் இயன்று விடுதல் இயற்கை" (இலக்கிய மணிமாலை, 1957) பக். 139.

23. தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம் (1957) பக் 141-143: ஈண்டு வையாபுரிப்பிள்ளை இரு காலப் பிரிவுகளுக்குக் காவியங்கள் தோன்றுத இடையீடு ஒன்றினைச் சுட்டுகிருர்; இது ஆய்வுக்குரியதாகும்.

பிரிவுகளிலும் எழுந்த காவியங்களை நோக்கும்போது இவ்வுண்மை புலனாகும். பிள்ளையவர்களின் முதன் மூன்று காலப்பிரிவுகளும் பிரச்சினைக்குரியனவாம். 'தொகைசெய்காலம்' (கி. பி. 400-500) அனுமான மாகவே காணப்படுகின்றது.[24] இதற்குப் பிற்பட்டது 'பிற்சங்க காலம்' (கி. பி. 600 - 750) என்று பிள்ளை யவர்கள் கூறுவது ஏற்பதற்குரியதன்று. எட்டுத் தொகையில் இடம்பெறும் ஆறு தொகுதிகளிற் காணப்படும் பாடல்கள் எழுந்து 250 ஆண்டுகளுக் குப் பின்பு கலித்தொகை, பரிபாடலிலிடம்பெறும் பாடல்கள் தோன்றின என்று கூறல் இலக்கிய மரபின் கதிக்கு முரணான கூற்றாகும். முற்சங்க காலத்தின் மேலெல்லையும் பொருத்தமானதாகத் தெரியவில்லை. வையாபுரிப்பிள்ளை கொண்ட கருத்து[25] மீண்டும் புனராலோசனை செய்யப்பட வேண்டும் என்ற நிலையை ஐராவதம் மகாதேவன்[26] போன்ற ஆய்வாளர் ஏற்படுத்தியுள்ளனர்.

பேரிசைச்சூத்திர ஆசிரியர் முதலாக வையாபுரிப் பிள்ளை ஈறாகத் தமிழிலக்கியப் பரப்பினைப் பலவாறு பகுத்துக் கூற முற்பட்டுள்ளனர். ஆயினும் அரசியலடிப் படையிலே அமையும் இலக்கிய வரலாற்று நூல்களே பொதுவாக மாணாக்கருக்குக் கிடைக்கின்றன. அரசியல டிப்படையிலே அமையும் இலக்கிய வரலாற்று நூல் களிலே குறைபாடுகள் சில இருப்பினும் பிறவகை

---

24. எஸ். வையாபுரிப்பிள்ளை. இலக்கிய தீபம் (இரண்டாம் பதிப்பு, 1955) பக். 101-103.

25. History of Tamil Language and Literature (First Edition, 1956) PP. 8.

26. "Tamil Brahmi Inscriptions of the Sangam age" IATR, Madras (1968).

யான பாகுபாட்டினை மேற்கொள்ளும் வரலாற்று நூல்களிற் காணப்படும் தெளிவுக்குறைபாடு ஈண்டு குறைந்தே காணப்படுகின்றது. எனவே ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றினை எழுத முயலுவோரும் அரசியலடிப்படையிலே அமைந்த பாகுபாட்டினையே பொதுவாக மேற்கொள்ள முடியும்.[27]

**ஈழத்துத் தமிழிலக்கியப் பரப்பினை:**

1. மகாவம்மிச அரசர் காலம் (— கி.பி. 300).
2. ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் (1240-1620).
3. போர்த்துக்கேயர் - ஒல்லாந்தர் காலம் (1620—1800).
4. ஆங்கிலேயர் காலம் (1800—1950).
5. தற்காலம் (1950—).

என ஐந்தாக வகுத்து ஆராயலாம்.

**I. மகாவம்மிச அரசர் காலம் (—கி.பி. 300).**

ஈழநாட்டுச் சிங்கள இலக்கிய வழக்கில் மகாசேனனும் (கி. பி. 275—301) அவனுக்கு முற்பட்டவர்களும் மகாவம்மிசத்திற்குரியவர்களாகக் கூறப்படுவர்.[28] ஏனெனில், மகாவம்மிசமும் தீபவம்மிசமும் மகாசேனனுடன் முடிகின்றன. இதனால் மகாசேனனுடன் முடிவடையும் காலப்பிரிவை மகாவம்மிச அரசர் காலம் எனக் கூறலாம். இக்காலப்பிரிவில் ஈழத்துத் தமிழ் மக்களின் வரலாறு தெளிவாகாமையாலும்

---

27. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்: சாகித்திய மண்டல வெளியீடு (1966) சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்.

28. History of Ceylon Vol. I Part I. University of Ceylon (1959) P. 193.

மகாவம்மிச அரசர்களிற் சிலர் தமிழருடைய பகுதிகளிலும் தமதாணையை நிலைநிறுத்த முற்பட்டமையாலும் இப்பிரிவு ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பின் பிரிவாக அமைவதாலும் கி. பி. 300க்கு முற்பட்ட காலப்பிரிவை மகாவம்மிச அரசர் காலம் என்று கூறுவது பொருத்தமாகும். தமிழகத்தின் இலக்கிய வரலாறு கூறுபவர்களும் கி. பி. மூன்றும் நூற்றுண்டிற் 'சங்ககாலம்' முடிவதாக வுரைப்பர்.[29] எனவே தமிழக இலக்கிய வரலாற்று நூல்கள் சிலவற்றிற் சங்ககாலம்[30] எனப்படும் காலமும் மகாவம்மிச அரசர் காலமும் கிழெல்லையில் ஒத்தனவாகக் காணக் கிடக்கின்றன.

மகாவம்மிச அரசா காலத்திற்குரிய ஈழத்துத் தமிழிலக்கியம் பற்றிய செய்திகள் விரிவான முறையில் நமக்குக் கிட்டவில்லை. அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய தொகை நூல்களிலே ஈழத்துப் பூதன்றேவனுர்,[31] மதுரை ஈழத்துப் பூதன்றேவனுர்[32] என்ற இரு பெயர்களையுடையவரின் பாடல்கள் காணப்படுகின்றன. இவ்விரு பெயர்களும் புலவர் ஒருவரையே குறிக்கும் என்பர். ஈழத்துப்

---

29. தமிழ் இலக்கிய வரலாறு(கி. பி. 250-கி. பி. 600)-தி.வை.சதாசிவபண்டாரத்தார் (இரண்டாம் பதிப்பு, 1957)பக் 1-9.

30. இதனை 'மூவேந்தர் காலம்' என அழைப்பதே பொருத்தமாகும்.

31. அக. 88: குறுந். 343: அக. 88ஆம் பாடலுக்கு 'ஈழத்துப் பூதன்றேவன்' என்ற பாடபேதமும் உண்டு.

32. அக231,307: குறுந். 189,360: நற்.366.

பூதன்றேவனார் மதுரையில் வாழ்ந்தமையாலே மதுரை ஈழத்துப் பூதன்றேவனார் என அழைக்கப்பட்டனர் போலும்.[33] மதுரை ஈழத்துப்பூதன்றேவனார்,

"... ........................... ........ பொருநர்
செல்சமங் கடந்து செல்லா நல்லிசை
விசும்பிவர் வெண்குடைப் பசும்பூட் பாண்டியன்
பாடுபெறு சிறப்பிற் கூடலன்ன..........''

(அக. 231)

எனப் பசும்பூட்பாண்டியன் ஒருவனைக் குறிக்கின்றார். பசும்பூட்பாண்டியனைப் பரணர், நக்கீரர், மதுரைக் கணக்காயனார் ஆகிய புலவர்களும் குறிப்பிடுகின்றனர்.[34] எனவே பசும்பூட்பாண்டியனைக் குறித்த புலவர்கள் அவன் காலத்திலேனும் அவனுக்குப்பிற்பட்ட காலத்திலேனும் வாழ்ந்தவராதல் வேண்டும். பசும்பூட்பாண்டியனைப் பற்றிய செய்திகள் அகப் பாடல்களிலேயே காணப்படுவதால் மேற்கூறிய புலவர்கள் அவன் காலத்திலேயே வாழ்ந்தனர் என்று திடமாகக் கூறுவதற்கில்லை. பசும்பூட்பாண்டியன் பற்றிய குறிப்பு ஈழத்துப் பூதன்றேவனாரின் காலத்தை வரையறுக்க உதவுவதாகக் கூறுவது கடினமாகும். பசும்பூட்பாண்டியனைக் குறித்ததால் பரணர், நக்கீரர், மதுரைக்கணக்காயனார், ஈழத்துப் பூதன்றேவனார் ஆகியவர்கள் சமகாலத்தவர் என்று கூறுவதும் பொருந்தாது. ஆதலால் ஈழத்துப் பூதன்றேவனாரின் காலம் இன்னதென்று தெளிவாகக் கூறுவதற்கியலாத

---

33. பூதன்றேவனார் எனவேறொரு பெயருடையார் பாடியனவாகக் குறுந். 285, நற். 80 ஆகிய இரு பாடல்கள் காணப்படுகின்றன.

34. அக.162, 253, 338; குறுந். 393.

தொன்றும். பதினெண்மேற்கணக்கு நூல்களில் இடம் பெறும் பாடல்களைப் பாடியவர்களில் ஈழத்துப் பூதன் றேவனார் ஒழிய ஈழத்து வேறு புலவர்கள் இடம் பெறுகிறார்களோவெனத் தெளிவாகக் கூற முடியா மலிருக்கிறது.[35] மூவேந்தர் கால இலக்கிய மர பிற்கிணங்க ஈழத்துப் பூதன்றேவனார் பாலை, குறிஞ்சி ஆகிய இரு திணைகளையும் பாடியுள்ளார். அன்பி னைந்திணையிலமையும் இப்பாடல்கள் ஈழத்துப் பூதன் றேவனாருக்குச் சிறப்பளிக்கும் பெற்றிவாய்ந்தவை.

ஈழத்துப் பூதன்றேவனாருக்குப் பின் சரசோதி மாலை எழுந்த காலம்வரை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை அறிய முடியாமலிருக்கின்றது. இந்நீண்ட கால எல்லைக்குள் ஈழத்தவர் தமிழுக்காற்றிய தொண்டு யாதென அறிய முடியாமலிருப்பது நமது துர்ப்பாக் கியமாகும். பல்லவர் காலத்திலே சைவசமய எழுச் சிக்குக் காரணமாயமைந்த நாயன்மார்களில் இருவர் ஈழத்திலுள்ள திருக்கோணமலை, திருக்கேதீச்சுரம் ஆகிய இடங்களிலுள்ள சிவதலங்கள்மீது திருப்பாடல்கள் பாடியுள்ளனர். தேவாரம் பெறுமளவிற்குச் சிறப்புப் பெற்ற இத்தலங்கள் காணப்படுகின்ற தமிழ்ப் பகுதி களின் இலக்கிய வளம் எத்தன்மைத்து என்று கூற முடியவில்லை. சோழப் பெருமன்னர் தமதாணையை ஈழத்திற் செலுத்திய காலத்திலே தமிழ் நாட்டிலேற் பட்ட இலக்கிய முயற்சிகளின் தாக்கம் இலங்கையிலும்

---

35. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் தமது ஈழமண்டலப் புலவர் சரித்திரம் (நாவலர் அச்சுக்கூடம், யாழ்ப்பாணம், 1922) என்னும் சிறு நூலிலே முரஞ்சியூர் முடிநாகராயர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனக் கூறினார் (பக்.2). அவர் "தகாதாயிற் றள்ளுவதும் தக்கதாயிற் கொள்ளுவதும் சபையார் கடன்" என நயம்படவுரைத்தார்.

இடம்பெற்றிருக்கலாம். ஆனல் இதனைத் தெளிவாக நாம் கூறமுடியாத நிலையில் உள்ளோம்.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திற்கு முற்பட்ட காலம் ஈழத்து இலக்கிய வரலாற்றில் இருண்ட கால மாகக் காட்சியளிக்கின்றது.

## 2. ஆரியச்சக்கரவர்த்திகள் காலம். (கி. பி. 1240—கி. பி. 1620)

கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டின் முற்பகுதியின் கடைக்கூற்றில் யாழ்ப்பாண நாட்டினை மத்திய பகுதி யாகக் கொண்டு ஆரியச்சக்கரவர்த்திகள் ஆளத் தொடங்கினர். ஆரியச்சக்கரவர்த்திகளின் தோற்றம் பற்றிய செய்திகள் இன்னமும் விளக்கமுறவில்லை யென்று கூறலாம்.[36] விசய கூளங்கை (காலிங்க) ஆரியச்சக்கரவர்த்திமுதல் கனகசூரிய சிங்கையாரியன் ஈருகப் பதினெருவரை யாழ்ப்பாணவைபவமாலை கூறு கின்றது. கனகசூரிய சிங்கையாரியனின் பின் வந்த வனை பரராசசேகரனைப் பின் தொடர்ந்தோன் செகராசசேகரனென்பதும், இவன் பின் பரராசசேக ரன் செகராசசேகரனென மாறி மாறி வந்திருப்பதும் போர்த்துக்கேயர்காலச் சரித்திரங்களால் நன்கு துணி யப்பட்டுள்ளன. இதனை எச். டபிள்யூ. கொட்றிங்ரன் அவர்கள் உய்த்துணர்ந்துகொண்டு யாழ்ப்பாண அரசரெல்லாம் ஆதிதொட்டு இவ்வாறே மாறிமாறிச்

36. சுவாமி ஞானப்பிரகாசர்: யாழ்ப்பாண வைபவ விமர்சனம்; அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை (1928) பக். 57-63: சு. நடேசபிள்ளை, "யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கர வர்த்திகள்" கல்கி தீபாவளிமலர் (1959) பக். 79-80; க. கண பதிப்பிள்ளை, இலங்கைவாழ் தமிழர் வரலாறு. கொழும்பு: சுதந்திரன் அச்சகம் (1956) பக் 16–17.

சிங்காசனப்பேர் தரித்துள்ளாரென ஊகிப்பாரா யினர். இவ்வூகம் ஏதுக்கள் பலவற்றால் வலியுறு கின்றது. கோணேசர் கல்வெட்டுடன் தமிழகத்திலே சோழரும் பாண்டியரும் மாறிமாறிவரும் சிங்காசனப் பேர் தரித்தமையும் ஈண்டு கவனிக்கத்தக்கதாம். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் மேல்வரும் இராச முறையைத் தந்துள்ளார்.

| | | |
|---|---|---|
| காலிங்க ஆரியச் சக்கரவர்த்தி | செகராசசேகரன் | I |
| குலசேகரசிங்கையாரியன் | பரராசசேகரன் | I |
| குலோத்துங்கசிங்கையாரியன் | செகராசசேகரன் | II |
| விக்கிரமசிங்கையாரியன் | பரராசசேகரன் | II |
| வரோதயசிங்கையாரியன் | செகராசசேகரன் | III |
| மார்த்தாண்டசிங்கையாரியன் | பரராசசேகரன் | III |
| குணபூஷணசிங்கையாரியன் | செகராசசேகரன் | IV |
| வீரோதயசிங்கையாரியன் | பரராசசேகரன் | IV |
| சயவீரசிங்கையாரியன் | செகராசசேகரன் | V |
| குணவீரசிங்கையாரியன் | பரராசசேகரன் | V |
| கனகசூரியசிங்கையாரியன் | செகராசசேகரன் | VI |

*(கோட்டை அரசு 1450 — 1467)*

| | | |
|---|---|---|
| கனகசூரியசிங்கையாரியன் | செகராசசேகரன் | VI |
| ? | பரராசசேகரன் | VI |
| | *(1467 - 1519)* | |
| சங்கிலி | செகராசசேகரன் | VII |
| | *(1519 - 1561)* | |
| புவிராசபண்டாரம் | பரராசசேகரன் | VII |
| பெரியபிள்ளை | செகராசசேகரன் | VIII |
| எதிர்மன்னசிங்கன் | பரராசசேகரன் | VIII |
| | *(1591 - 1616)* | |

சங்கிலி *(1616 - 1620)*

ஆரியச்சக்கரவர்த்திகளிலே செயவீரசிங்கையாரியனும் எதிர்மன்னசிங்கனும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். ஆரியச்சக்கரவர்த்திகளில் இவ்விருவரும் தமிழையும் தமிழ்ப்புலவரையும் நன்கு பேணினார்கள். புரவலராக விளங்கியதோடு அமையாது, தாமும் புலவராகத் திகழ்ந்தனர் என்று துணிய ஆதாரங்கள் உள.

இவ்விடத்தில் யாழ்ப்பாண வைபவமாலையாலேற்பட்ட மயக்கத்தைப் பற்றிக் கூறுதல் நன்று. சுவாமி ஞானப்பிரகாசர் ''பரராசசேகரனின் (பரராசசேகரன் VI) தம்பி செகராசசேகரனுவானென்றும், இவன் 'வித்துவான்கள் பலரைச் சேர்த்துச் சபைகூட்டிச் சிலநூல்களைச் செய்வித்துத் தானும் சோதிடம் செகராசசேகரம் முதலிய நூல்களைச் செய்தான்' என்றும் 'பரராசசேகரனின் மருமகனாகிய அரசகேசரி என்பவன் இரகுவமிசமென்னும் நூலை வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துப் புராண நடையாய்ப் பாடினான்' என்றும் மயில்வாகனப்புலவர் வரைந்தன, காலவழு பொதிந்த சம்பவங்களாம். செகராசசேகரனும் பரராசசேகரனும் தம்பி தமையனும் என எண்ணியது, இவையிரண்டும் எம் தமிழ் அரசகுடும்பத்தின் சிங்காசனப் பெயரென அறியாமையாலேதான் என முன்னரே கூறினோம் (பக். 79). இனி செகராசசேகரம் ஆதிய நூல்களை, தானல்லன், தன்புலவர்களைக் கொண்டு செய்வித்த செகராசசேகரன் இப்பரராசசேகரனின் தம்பியல்லன்; இவனுக்கு ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்தின் முன் விளங்கிய மகா செகராசசேகரனாகிய ஐந்தாவதானவனும். தமிழ் இரகுவம்மிச நூலியற்றிய அரசகேசரி 8ம் (உள்ளபடி 9ம்) பரராசசேகரன் (1591-1616) ஆண்ட காலத்தில்

விளங்கியவர். ஆகவே இங்கு எழுபது எண்பது வருட வேற்றுமை காணப்படுகின்றது.'' என்று கூறியுள்ளார்.37

சயவீரசிங்கையாரியனும் ஐந்தாம் செகராச சேகரன் காலத்திற் செகராசசேகரம், செகராசசேகர மாலை முதலிய நூல்கள் தோன்றின. தட்சிணாகைலாச புராணமும் கண்ணகி வழக்குரையும் ஐந்தாம் செக ராசசேகரனுல் இயற்றப்பட்டவை என்று கருத ஆதா ரங்களுள. கோணேசர் கல்வெட்டும் இம்மன்னன் காலத்திலெழுந்ததாகக் கூறுவர். எதிர்மன்னசிங்கன் என்னும் எட்டாம் பரராசசேகரன் காலத்தில் வாழ்ந் தவர் இரகுவம்மிசம் இயற்றிய அரசகேசரி. இம்மன் னன் காலத்திலே அந்தகக்கவி வீரராகவர் ஈழம் வந்து தமிழ்பாடிப் பரிசில் பெற்ருர். பரராசசேகரமும் வையாபாடலும் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திற் குரியனவே.

ஆரியச்சக்கரவர்த்திகள் மட்டுமன்றி ஏனைய புரவ லரும் தமிழை ஆதரித்துள்ளனர் என்பதைச் சரசோதி மாலை காட்டுகின்றது. ஈழத்தெழுந்த தமிழ் நூல்களுட் காலத்தால் முந்தியதாகக் காணப்படும் சரசோதிமாலை குருநாகல் என்னும் நகரத்தின் அருகிற் சிங்கள மன் னரின் இராசதானியாய் விளங்கிய தம்பதேனியாவி லிருந்து செங்கோலோச்சிய நாலாம் பராக்கிரமபாகு வின் (பண்டிதபராக்கிரமவாகு II) அவைக்களப் புலவ ராகிய தேனுவரைப்பெருமாள் அல்லது போசராச பண்டிதர் என்பவரால் 1310 ஆம் ஆண்டில் அரங் கேற்றப்பட்டது.

---

37. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் (1928) பக். 110.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலப்பிரிவிலே எழுந்த நூல்களிற் சில சோதிடம், வைத்தியம், சிற்பம் முதலிய கலைகளைப் பேணுபவனவாகக் காணப்படுகின்றன. மக்களின் தேவைக்குரியனவாகிய இக்கலைகள் பற்றிய செய்திகளை விருத்தப்பாக்களிற் பாடியுள்ளனர். தமிழகத்திலே தலபுராணங்கள் பெருமளவிலே தோன்றுவதற்கு முன்பதாகவே தட்சிணகைலாசபுராணம் தோன்றிவிட்டது. தேவாரம் பெற்ற திருக்கோணமலையென்னும் தலத்தின் விசேடங்களைச் சிறப்பித்துக் கூறுகின்றது இப்புராணம் வடமொழி மூலத்தை ஆதாரமாகக் கொண்டு ஆசிரியர் இந்நூலைப்பாடிய போதும் தமது தேசியப் பற்றைத் திருநகரச்சருக்கத்திலே தெளிவாகக் காட்டியுள்ளார். திருநகரச்சருக்கம் மூலம், ஆசிரியர் காலத்துச் சைவசமயத்தின் நிலையினை அறியமுடியும். கண்ணகி வழக்குரை தமிழ்நாட்டுக் கதையை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட போதும் ஈழத்துச் செய்திகளும் சிறப்பிடம் பெறுவதை நாம் காணலாம். தமிழர் தம் மாண்பும் அவர்தம் இலக்கியப் பொருள்களான காதலும் வீரமும் நன்முறையிலமைந்து மக்கள் காப்பியமாக ஏற்றம்பெறும் பெற்றியை இந்நூலிற் காணலாம். மகாகவி காளிதாசர் பாடிய இரகுவம்மிசத்தை அரசகேசரியவர்கள் அதர்ப்பட மொழிபெயர்த்து யாத்தனர். தமிழகத்திலே இவர் காலத்திலே எழுந்த இலக்கியங்களிற் காணப்படும் வித்துவத் தன்மையையும் அலங்காரச் சிறப்பையும் அரசகேசரி நன்குணர்ந்து பேணியமைக்கும் இயல்பினை இரகுவம்மிசத்திற் காணலாம்.

ஈழத்துத் தமிழ் மக்களின் பண்டைய பாரம்பரியத்தை எடுத்துக் கூறும் நூலாக வையாபாடல் விளங்குகின்றது. தமிழகத்தின் கோயில்களிற் காணப்படும் கல்வெட்டுகளின் சாயலைக் கொண்டது கோணேசர் கல்வெட்டு. மேற்கூறிய செய்திகளால் ஆரியச்சக்கர

வர்த்திகள் காலத்திலே புலவர்கள் பல்வேறு இலக்கியத்துறைகளிலும் தங்கள் திறமையைக் காட்டியுள்ளனர் என்பது கூருமலே போதரும்.

### 3. போர்த்துக்கேயர் – ஒல்லாந்தர் காலம் (1620—1800).

ஆரியச்சக்கரவர்த்திகளைத் தொடர்ந்து ஈழத்தின் தமிழர் வாழ்பகுதிகள் முதலிற் போர்த்துக்கேயர் வசமும் பின்பு ஒல்லாந்தர் வசமும் சிக்கின. தமிழ்ப் புரவலர்களாகவும் புலவர்களாகவும் விளங்கிய பரம்பரையினரைத் தொடர்ந்து வேற்றுமொழிகளைப் பேசுபவர் அரசுகட்டிலேறினர். இவர்கள் தமிழ் மொழியை முன்னவர் போன்று சிறப்பாக ஆதரித்தனர் என்று கூறமுடியாது. ஞானப்பள்ளின் ஆசிரியர்,

''பேரான பாராளும் பிடுத்துக்கால் மனுவென்றன்
பிறதானம் வீசவே கூவாய் குயிலே''

என்று போர்த்துக்கேய மன்னனை வழுத்தியபோதும் அதற்கு முக்கிய காரணமாயமைவது சமயமென்பதை நாம் மறுத்தல் கடினமாகும். புலவரவர்கள் தமது சமயத்தை ஈழவள நாட்டிலே பரப்புவதற்கு முயற்சிகள் பலவற்றை மேற்கொண்ட மன்னனை ஈண்டு வாழ்த்துகின்ருரேயொழிய மன்னனின் தமிழ்ப்பற்றுக்காக அவனை வாழ்த்துகின்ருர் என்று கூறுவது பொருந்தாது. தண்டிகைக் கனகராயன்பள்ளு, கரவைவேலன் கோவை முதலிய பிரபந்தங்கள் சில, இக்காலப்பிரிவிலும் தமிழை வளர்த்த புரவலர்கள் சிலர் வாழ்ந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன ஆயினும் இக்காலப் பிரிவில் மேலைத்தேயத்திற் செல்வாக்குப் பெற்று ஈழத்திற்கு வந்த சமயங்களைப் போதிப்பவர்கள் தமது சமயங்களைப் பரப்பத் தமிழைக்கற்று சமயத்தோடு தமிழையும் வளர்த்தார்கள். தமிழகத்திற்குப்

பதினாறாம் நூற்றாண்டிலேயே அச்சியந்திரம் வந்துவிட்ட போதிலும் ஈழத்திற்குப் பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலேயே வந்தது. சமயநூல்கள் மட்டுமன்றி, பாடநூல்கள் சிலவும் அச்சியந்திரம் வந்தடைந்த ஆரம்பகாலத்திற் பதிப்பிக்கப்பட்டன என்று கூறுவர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஈழத்திலே அச்சியந்திரங்கள் பெருகவும் ஈழத்தவர் பதிப்பாசிரியர்களாக மிளிரவும் வழிவகுத்தவர்கள் ஒல்லாந்தர் என்று கூறல் பொருத்தமாகும். சமயக்கல்விக்கு இன்றியமையாதிருந்த அச்சியந்திரம் மேலைத்தேயக் கல்வி முறையையும் வளர்க்க உதவிற்று. தமிழ்க்கல்வி விரிவடையத் தொடங்கிற்று. தத்துவபோதக சுவாமிகளைப் போன்றோ அன்றி வீரமாமுனிவரைப் போன்றோ வேற்றுமொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஈழத்திலே இக்காலப்பிரிவிலே தமிழிற் பாண்டித்தியமடைந்த செய்திகளைப் பெற முடியாமலிருந்த போதும் கிறித்தவர்கள் பலர் இக்காலப் பிரிவிலே தமிழ்த்தொண்டு செய்திருப்பதை மறுக்க முடியாது.

ஞானப்பள்ளு, திருச்செல்வர் காவியம், அர்ச். யாகப்பர் அம்மானை, திருச்செல்வர் அம்மானை, ஞானானந்த புராணம் முதலியன கிறித்தவர் ஆற்றிய தமிழ்த் தொண்டிற்கு ஆதாரமாக விளங்குகின்றன. மேலைத்தேயத்திலிருந்து வந்த சமயங்கள் மக்களிடையே செல்வாக்குப் பெறத்தொடங்கிய இக்காலப் பிரிவிலே ஈழத்தில் வாழ்ந்த ஏனைய சமயத்தவர்களும் தங்கள் சமயக் கருத்துக்களை விளக்கச் சமயநூல்களைப் படைத்தனர். இசுலாமிய படையெடுப்புகளாலே தமிழகத்திலே தலங்கள் முக்கியத்துவம் பெற்றமை போன்று ஈழத்திலும் தலசம்பந்தமாக நூல்கள் இக்காலத்திற் பெருகத் தொடங்கின. கதிரைமலைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, குருநாதசுவாமி கிள்ளை விடுதூது, வெருகல் சித்திரவேலாயுதர் காதல்,

கல்வளையந்தாதி முதலிய பிரபந்தங்கள் ஈழத்துத் தலங்களையும் தலமுறைதெய்வங்களையும் பாடலாயின. தமிழகத்தோடு ஈழநாட்டினர் கொண்ட தொடர் பாலும் தமிழகத்திலே உள்ள தலங்களைத் தரிசித்த மையாலும் இக்காலப்பிரிவிலே புலவர்கள் சிலர் தமிழ கத்துக் கோவில்களையும் பாடியுள்ளனர். மறைசையந் தாதி, புலியூர்யமகவந்தாதி முதலியன காண்க. திருக் கரசைப்புராணம் முதலிய தலபுராணங்களோடு விரத மகிமைகளை எடுத்துரைக்கும் புராணங்களும் இக் காலத்திலெழுந்தன. மக்களிடம் சமய பத்தியை வளர்க்க இத்தகைய புராணங்கள் உதவின. சிவராத் திரி புராணம், ஏகாதசி புராணம் முதலியன காண்க. சீமந்தனி புராணம், கந்தசட்டி புராணம் முதலியன பின்னெழுவதற்கு வரதபண்டிதர் முன்னோடியாக விளங்கினார்.

இக்காலப் பிரிவிலே பொதுமக்களுக்குரிய பாவகை களாற் பிரபந்தங்கள் சில பாடப்பட்டன. தமிழகத்தி லும் இக்காலத்தையொட்டிப் புதிய இலக்கிய வடிவங் கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியமையும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், அம்மானை முதலியன தமிழகத்திற் செல் வாக்குப் பெற்றமை போன்று ஈழத்திலும் போற்றிப் பேணப்பட்டன. கிறித்தவர்களுக்குச் சமயத் தொண் டாற்ற இத்தகைய இலக்கிய வடிவங்கள் சிறப்பாக உதவின. பொதுமக்கள் விரும்பக் கூடிய பாவகை களால் அமைந்த இவ்விலக்கிய வடிவங்களில் அவர் கள் மொழியும் இடம்பெற்றது. கோவை, தூது, அந்தாதி முதலிய பிரபந்த வகைகளில் புலவரின் வித்துவத் தன்மையைக் கண்டால் இத்தகைய இலக் கிய வடிவங்களில் அவர்களின் 'எளிமை'யையும் தமி ழின் 'இனிமை'யையுங் காணலாம்.

பொதுமக்களுக்குரிய மொழி இலக்கியத்தரம் பெற்ற இக்காலப்பிரிவிலே வேற்றுமொழிச் சொற்களும் தமிழில் பெருமளவில் இடம்பெறத்தொடங்கின. இக்காலத்துத் தமிழகத்திலே எழுந்த நூல்களிற் காணப்பட்ட வடமொழிச் செல்வாக்கை ஈழத்து நூல்களிலும் காணலாம். வடமொழி சைவரின் சமய மொழியாக அமைந்திருந்தமை மட்டுமன்றி வடமொழிக் கருத்துக்களும் நூல்களும் பேணப்பட்டமையும் இந்நிலைக்குரிய முக்கிய காரணங்களிற் சிலவாம். சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம், அமுதாகரம் முதலியவற்றை நோக்கின் இஃது புலனாகும். கிறித்தவர்களும் தமிழகத்திலெழுந்த சமயநூல்களை யொட்டித் தங்கள் சமய நூலகளை ஆக்கிக் கொண்டமையும் வடமொழிச் செல்வாக்கிற்கு ஒரு காரணமெனலாம். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலே அவர்கள் பேசிய மொழிகளுக்குரிய சொற்களும் தமிழிற் கலந்தன. ஞானப்பள்ளு பிறமொழிச் சொற்கள் பலவற்றைத் தமிழ் மயமாக்கிப் பயன்படுத்தியதைக் காண்க.

இக்காலப் பிரிவில் குறிப்பிடத்தக்க பிறிதொரு பண்பு நாடக வளர்ச்சியாகும். பள்ளு, அம்மானை முதலிய இலக்கிய வடிவங்கள் சிலவற்றில் நாடகப் பண்பு ஏனைய இலக்கிய வடிவங்களிலும் பார்க்கச் சிறப்பாக அமைந்த போதும் அவற்றை முற்றுசு நாடகங்கள் என்று கூறுவதற்கில்லை. வட்டுக்கோட்டைக் கணபதி ஐயர், இணுவைச் சின்னத்தம்பிப்புலவர் முதலிய நாடகாசிரியர்கள் இக்காலப் பிரிவிலே வாழ்ந்தவர்கள்.

இக்காலப் பிரிவிலே வசனநூல்களும் பல எழுந்தன. கிறித்தவர்கள் தமது சமயக் கருத்துக்களை துண்டுப் பிரசுரங்கள் மூலமும் சிறு நூல்கள் மூலமும்

வெளிப்படுத்தினர். வசனம் முக்கியத்துவம் பெறத் தொடங்கிய இக்காலப் பிரிவிலே மாதகல் மயில் வாகனப் புலவர் 'யாழ்ப்பாண வைபவமாலை' என்னும் வசன நூலை இயற்றினர். வையாபாடல், இராசமுறை, கோணேசர் கல்வெட்டு, கைலாயமாலை முதலிய முன்னெழுந்த நூல்களிலுள்ள ஈழத்தவர் பற்றிய வரலாற்றுச் செய்திகளை எடுத்துத் தம் காலத்துக் கர்ண பரம்பரைச் செய்திகளையும் இணைத்து ஈழத்துத் தமிழர் வரலாற்றின் ஒரு பகுதியை வசனமாக்கித் தந்தார் மயில்வாகனப் புலவர்.

## 4. ஆங்கிலேயர் காலம் (1800—1950).

ஒல்லாந்தர் வசமிருந்த தமிழ்ப் பகுதிகள் 1795 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டன. தனியரசாக விளங்கிய கண்டியரசும் 1815ஆம் ஆண்டு முதலாக ஆங்கில அரசாக மாறிற்று. எனவே ஈழநாடு முழுவதும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஒரேயரசின் ஆணையின்கீழ் அடங்கிக் கிடந்தது.

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலப்பிரிவினிலே போதாகிய இலக்கிய வடிவங்கள் ஆங்கிலேயர் காலப் பிரிவிலே மலர்ந்தன எனலாம். பிள்ளைத்தமிழ், தூது, உலா, கோவை, கலம்பகம், மடல், குறவஞ்சி, அந்தாதி, இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, சதகம், அம்மானை, பதிகம், ஊஞ்சல் முதலிய பிரபந்த வகைகளும் புராணங்களும் ஆங்கிலேயர் காலப்பிரிவிலே பெருமளவிற்றோன்றின.

இசைத்தமிழும் நாடகத்தமிழும் இக்காலப் பிரிவிலே சிறப்பாகப் பேணப்பட்டன. இசைக்கலை, நாடகவாசிரியர்களால் மட்டுமன்றி ஏனைய புலவர்

களாலும் வளர்க்கப்பட்டது. இறைவழிபாடு, இசைப் பாடல்கள் பல தோன்றுவதற்குக் காரணமாய் அமைந்தது. சைவர்களும் கிறித்தவர்களும் இசுலாமியரும் கீர்த்தனங்கள், பதங்கள் முதலியவற்றைப் பாடி இசைத்தமிழைப் போற்றினர். வண்ணார்பண்ணை சி.விநாயகமூர்த்திச் செட்டியார் பாடிய கதிரை யாத்திரை விளக்கம் நொண்டிச்சிந்தாற் பாடப்பட்டதாகும். அசனலெப்பைப் புலவர் இயற்றிய நவரத்தினத் திருப்புகழ், அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் இயற்றிய சந்தத் திருப்புகழ் முதலியன வண்ணப்பாக்களாம். சுவாமி விபுலானந்தர் இயற்றிய யாழ்நூல் இசைக்கலை வரலாற்றில் இன்றியமையாத இடத்தினைப் பெற்றுத் திகழ்வதாம். பதினேழாம் நூற்றாண்டு முதலாக ஈழத்தில் நாடகங்கள் சிறப்பிடம்பெறத் தொடங்கிவிட்டபோதும் ஆங்கிலேயர் காலத்திலேயே அவை பெருமளவில் எழுந்தன. நல்லூர் ப.கந்தப்பிள்ளை இருபத்தொரு நாடகங்களை இயற்றியதாகக் கூறுவர். அராலி முத்துக்குமாருப் புலவர், மானிப்பாய் அ.சுவாமிநாதர், சுதுமலை வ.இராமலிங்கம், வட்டுக்கோட்டை இ.நாகேசையர், மாதோட்டம் கீத்தாம்பிள்ளை முதலிய நாடகவாசிரியர்கள் பலர் இக்காலப் பகுதியிலே சிறப்புடன் திகழ்ந்தனர். பாரதம், இராமாயணம் முதலியவற்றிலுள்ள கதைகள் மட்டுமன்றி கிறித்தவர்களுடைய கதைகளும் நாடக வளர்ச்சிக்கு உதவின என்பதை எம்பிறதோர் நாடகம், ஏரோது நாடகம், சந்நீக்கிலார் நாடகம், தேவசகாயம்பிள்ளை நாடகம் முதலியன எடுத்துக் காட்டுகின்றன.

முன்னைய காலப்பிரிவில் முக்கிய இலக்கியப் பொருளாக விளங்கிய சமயமே ஆங்கிலேயர் காலப்

பிரிவிலும் தனிப் பொருளாக ஆட்சி செலுத்தியது என்று கூறல் மிகையாகாது. மேலைத்தேயங்களிற் செல்வாக்குப் பெற்ற சமயங்கள் ஈழத்திலும் செல்வாக்குப் பெற முயன்றதால் ஏற்பட்ட விழிப்பும் தமிழகத்தின் இலக்கிய நெறியின் தாக்கமும் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்து இலக்கியப் பொருளைச் சமயப்பொருளாகக் கொள்ள வழிவகுத்தன. இந்நிலை ஆங்கிலேயர் காலத்திலும் தொடர்ந்து செயற்பட்டு வந்தது. ஆயினும் ஆங்கிலேயர் காலப்பிரிவிலே சமயத்தின் தாக்கம் இலக்கியத்தில் முன்னைய காலப் பிரிவிலும் அதிகமாகப் படிந்திருந்தது. கிறித்தவர்கள் இக்காலப்பிரிவிலே ஈழத்தின் பழைய சமயங்களை வன்மையாக எதிர்க்க முற்பட்டனர். அவர்களின் எதிர்ப்பு ஆறுமுகநாவலர், சங்கரபண்டிதர், சபாபதி நாவலர், காசிவாசி செந்திநாதையர் முதலியவர்களை, சைவத்தைப் பல வழிகளாலும் பேணத் தூண்டிற்று. சமயக் கருத்துக்களை விளக்கும் நூல்களும் தலசம்பந்தமான நூல்களும் ஆங்கிலேயர் காலப் பிரிவிலே முன்னைய காலத்திலும் பெருமளவிற்றோன்றின. கதிர்காமபுராணம், திரிகோணசல புராணம், நகுலமலைக் குறவஞ்சி, அடைக்கலங்கோவை, திரிகோணமலையந்தாதி, நெல்லியவோடையம்மாள் பிள்ளைக்கவி, நல்லூர்க் கந்தசுவாமி கிள்ளைவிடு தூது, வல்லைக் கலித்துறை, கதிரேசர் பதிகம், சுன்ஞகம் ஐயஞருஞ்சல், நல்லை வெண்பா, நீராவிக்கலிவெண்பா, நல்லைக் கந்தரகவல் முதலியவை தல சம்பந்தமான இலக்கிய வடிவங்களேயாம். ஈழத்துத் தலங்கள் மட்டுமன்றித் தமிழ் நாட்டின் தலங்களும் ஈழத்துப் புலவர்களால் ஆங்கிலேயர் காலத்திற் போற்றப் பட்டுள்ளன. இளசைப்புராணம், சிதம்பரசபாநாத புராணம், திருக்கழிப்பாலைப் புராணம், புலியூர்ப் புராணம், நெல்லைவேலவருலா, திருவிடைமருதூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, மறைசைக்கலம்பகம், சிதம்

பரபாண்டியநாயக மும்மணிக்கோவை, திருத்தில்லைப் பல்சந்தமாலை முதலியன காண்க. ஈப்போ தண்ணீர் மலை வடிவேலர் மும்மணிக்கோவை மலாயாவிற் சிறப்பிடம் வகிக்கும் தலசம்பந்தமான பிரபந்தமாகும். தலங்களைப் பாடுவதோடமையாது விரதங்களையும், முன்னைய காலத்திற் போன்று, இலக்கியப் பொருளாகக் கொண்டு ஆங்கிலேயர் காலத்திற் பாடியுள்ளனர். சீமந்தனி புராணம் சோமவாரத்தின் மகிமையைக் கூறுவது; கந்தசட்டி புராணம் கந்தசட்டி விரதத்தின் மாண்பினை உரைப்பது. திருவாக்குப் புராணம், ஞானனந்த புராணம், யேசுநாதர் பிள்ளைத்தமிழ், அஞ்ஞானக்கும்மி, பஞ்சபட்சித்தூது, அந்தோனியார் பதிகம் முதலியன இக்காலப்பிரிவிற் கிறித்தவர்கள் சமயப்பொருளைப் பாடியதற்குரிய சான்றுகளாம். பக்கீர்ப் புலவர், அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர், அசனுலெப்பைப் புலவர், அப்துல் றகுமான் முதலிய இசுலாமிய புலவர்களும் தமது சமயக்கருத்துக்களுக்கு இலக்கிய வடிவங் கொடுத்த காலமும் ஆங்கிலேயர் காலமாகும்.

சமயம் இலக்கியப் பொருளாக விளங்கிய ஆங்கிலேயர் காலப் பிரிவிலே குறிப்பிடத்தக்க செய்திகளிலொன்று கண்டன நூல்களின் பெருக்கமாகும். வீரமாமுனிவர் காலம் முதலாக ஒரு சமயத்தினர் இன்னொரு சமயத்தவரையும் அவர்கள் சமயக்கொள்கைகளையும் உரைநடைவாயிலாகக் கண்டிக்கும் மரபு வளர்ந்து வந்திருக்கின்றது. பிறரைத் தாக்கிக்கூறும் வகையிலே உணர்ச்சியோடு கூடிய விறுவிறுப்பான நடையையுடைய கண்டனநூல்கள் ஈழத்திலே ஆறுமுகநாவலர் காலமுதலாகச் சிறப்பாக வளர்ந்தன. கிறித்தவர்கள் 'குருட்டு வழி' முதலிய நூல்களாற் சைவத்தைக் கண்டித்துத் தமது சமயத்தைப் பரப்புவதைக் கண்ட ஆறுமுகநாவலர், சங்கரபண்டிதர்

முதலியோர் அம்மதத்தைக் கண்டிக்க முற்பட்டனர். ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம், சைவதூஷண பரி காரம், சுப்பிரபோதம், விவிலிய குற்சிதம், சைவ மகத்துவம், சைவமகத்துவதிக்காரமகத்துவம், சைவ மகத்துவபானு, சைவமகத்துவ ஆபாச விளக்க மறுப்பு, சைவமகத்துவபானுபாலம், சைவமகத்துவதிக்கார நிக் கிரகம், கிறிஸ்தவமத கண்டனம், மிலேச்சமத விகற் பம், சிவதூஷண கண்டனம், யேசுமத சங்கற்ப நிரா கரணம் முதலியன கிறித்தவர்களையும் அவர்கள் சமயக் கொள்கைகளையும் மறுத்துரைத்த கண்டன நூல்களாம். சுப்பிரதீபம், அஞ்ஞானக்கும்மி, விவிலி யகுற்சிதகுடாரம், சைவமகத்துவதிக்காரம், சைவ மகத்துவதிமிரபானு, சைவ மகத்துவதிக்கார நிக்கிரக எதிரேற்று முதலியன கிறித்தவர்கள் தமது கண்டன ஆற்றலைப் புலப்படுத்திய நூல்களாம்.

சமயத்தினை நோக்கமாகக் கொண்ட கண்டன நூல்கள் பெருகிய ஆங்கிலேயர் காலப்பிரிவிலே பிறிதொரு வகையான கண்டன நூல்களும் தோன் றின. சமயக் கண்டன நூல்களின் பயிற்சியுடைய ஈழத்தவர் பலர் இலக்கிய கண்டனங்களும் இக் காலப் பிரிவிற் செய்துள்ளனர். உ.வே.சாமிநாதை யரின் சீவகசிந்தாமணிப் பதிப்பிற் கண்ட பிழைகளை யெடுத்து முருகேச பண்டிதர், அ.குமாரசுவாமிப்புல வர் முதலியோர் கண்டித்தனர். சபாபதி நாவலரின் திராவிடப் பிரகாசிகை அ.குமாரசுவாமிப்புலவரால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. சி.வை.தாமோ தரம்பிள்ளையின் இலக்கண விளக்கப் பதிப்புரையை மறுத்துச் சபாபதி நாவலர் கண்டனம் எழுதினார்கள். சுவாமிவேதாசலம் எழுதிய திருவாசகவுரையினை மறுத்து யாழ்ப்பாணம் சைவசித்தாந்த சமாசத்தார் கண்டனம் செய்தார்கள். தில்லைநாதபிள்ளையவர்களின் திருவிளையாடற்புராணவுரையை மறுத்து ந.ச.வைத்

தியலிங்கமவர்கள் கண்டனம் எழுதினர்கள். இலக்கிய சம்பந்தமான இக்கண்டனங்களாலே திருத்தங்கள் பல ஏற்பட்டன என்று கூறுவது மிகையாகாது.

சமயக் கல்வியின் வளர்ச்சியால் ஏற்பட்ட பிறி தொரு வகைப்பெருக்கம் மொழிபெயர்ப்பு நூல்களாகும். முன்னைய காலப்பகுதிகளிலும் ஆங்கிலேயர் காலப் பிரிவிலே மொழிபெயர்ப்பு நூல்கள் பல தோன்றின. சங்கதமொழி சைவர்களுக்கும் கிறித்த வர்களுக்கும் சமயப் பிரசாரத்திற்குச் சிறப்பாகப் பயன்பட்டது. மேலைத்தேய மொழிகளும் இக்காலப் பிரிவிற் கிறித்தவர்களாற் சிறப்பாகப் பேணப்பட்டன. இலத்தீன் மொழியும் ஆங்கில மொழியும் சமயக் கல்விக்குப் பலவழிகளிலும் உதவின. சங்கதம், இலத் தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலுள்ள சமயநூல் களும் சமயக் கருத்துக்களும் தமிழ்மொழிக்கு வளஞ் சேர்த்தமை, ஆங்கிலேயர் காலமாகும். சமயத்தின் அடிப்படையிற் பேணப்பட்ட இம்மொழிகளிலுள்ள அறிவியற்றுறை சார்ந்த ஏனைய நூல்களும் தமிழாக் கப்பட்ட காலமும் இக்காலமேயாகும். வடமொழி யிலுள்ள நூல்களை மொழிபெயர்த்தவர்களுட் சுன்ன கம் அ.குமாரசுவாமிப்புலவர், கோப்பாய் சு சபாபதி நாவலர், பன்னாலை ச.சிவானந்தையர், புலோலி வ.கணபதிப்பிள்ளை, திருக்கோணமலை த.கனகசுந்தரம் பிள்ளை, அம்பலவாணர் நாவலர், வட்டுக்கோட்டை சிவசுப்பிரமணிய சிவாசாரியர் முதலியோர் குறிப் பிடத்தக்கவர்கள். ஆங்கில நூல்களை மொழிபெயர்த் தவர்களில் முதன்மையும் பெருமையும் வாய்ந்தவர் எஸ்.எப்.கிறீன் வைத்தியராவர். சுகாதாரம், வைத் தியம், விஞ்ஞானம் முதலிய துறைகளிற் பத்து நூல் கள் கிறீன் வைத்தியராலும் அவர்களுடைய மாணாக் கராலும் மொழிபெயர்க்கப்பட்டு அச்சேற்றப்பட்டுள் ளன. கரோல் விசுவநாதபிள்ளை வீசகணிதம் எழுதி

யுள்ளார். நெவிஞ்சு சிதம்பரப்பிள்ளை நியாய இலக்கணம் இயற்றினர். மேலைத்தேயக் கல்வி முறையைப் பின்பற்றிய யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை ஆங்கிலக்கல்லூரி மொழிபெயர்ப்புத் துறைக்குச் சிறந்த தொண்டாற்றியுள்ளது என்று கூறல் மிகையாகாது. சுவாமி விபுலானந்தர் ஆங்கிலத்திலுள்ள சில பாடல்களையும் நாடகப் பகுதிகளையும் தமிழாக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாம்.

சமயப் பொருளே இலக்கியத்தின் தனிப்பொருளாக விளங்கிய ஆங்கிலேயர் காலப்பிரிவிலே உலகியல் சம்பந்தமான இலக்கிய நூல்களும் எழுந்துள்ளன. அருளம்பலக்கோவை, அழகர்சாமிமடல், பாற்கர சேதுபதி கல்லாடக் கலித்துறை, பாற்கரசேதுபதி நான்மணிமாலை, பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலை, இராமநாதமான்மியம், அருணைசலமான்மியம் முதலியனவற்றின் பாட்டுடைத்தலைவர் உலகியற்றலைவர்களேயாம். புலவர்கள் தம்மை யாதரித்த புரவலரைப் பாடிய போதும் தமது நாட்டை ஆட்சி செய்த ஆங்கிலேயரைப் போற்றிப் பிரபந்தம் பாடியதாகத் தெரியவில்லை.

ஆங்கிலேயர் காலத்துப் புலவர்களிற் சிலர் பாடிய பாடல்கள் மூலம் அவர்களின் வித்துவச் சிறப்பை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. முன்னைய காலத்துடன் தொடர்புடைய இப்பண்பு, இக்காலப் பிரிவிலே, தமிழகத்திலெழுந்த பாடல்களிலுஞ் சிறப்பாகக் காணப்படுவதை ஈண்டு குறிப்பிடலாம். சுன்ஞகம் அ. முத்துக்குமாரகவிராசர், மாவிட்டபுரம் பூ. பொன்னம்பலபிள்ளை, வறுத்தலைவிளான் க. மயில்வாகனப்புலவர், சுன்ஞகம் பூ. முருகேச பண்டிதர் முதலியோர் பாடிய பாடல்கள் மூலம் ஈழத்துப் புலவர் கையாண்ட சொல்லலங்காரம், பொருளலங்

காரம் ஆகியனவற்றை நாம் தெளிவாக உணரலாம். இவ்வலங்காரங்களைத் தமது வித்துவத் தன்மையை யெடுத்துக் காட்டச் சிறப்பான முறையிற் பயன் படுத்தியுள்ளனர் என்பதை முன்பு கூறப்பட்டவர் களின் பாடல்களை நோக்குவார் தெற்றென உணர்வர்.

ஆங்கிலேயர் காலப்பிரிவிலே, தமிழகத்திலே இதே காலப் பிரிவிலே எழுந்த இலக்கண நூல்களை யொப்ப, இலக்கண நூல்கள் சில எழுந்துள்ளன. பவணந்தி முனிவரின் நன்னூல் தமிழகத்திற் செல்வாக் குப் பெற்றமை போன்று ஈழத்திலும் பேணிக் கற்கப் பட்டு வந்தது. ஒல்லாந்தர் காலப்பிரிவினிலே வாழ்ந்த கூழங்கைத் தம்பிரான் நன்னூலுக்கு உரையெழுதியுள் ளார் என்பர். ஆயினும் அவ்வுரை இன்று கிடைப் பதற்கில்லை. ஆங்கிலேயர் காலப்பிரிவிலே புலோலி வ.குமாரசுவாமிப் புலவர் நன்னூல் காண்டிகை உரை விளக்கம் எழுதியுள்ளார். சவுந்தரநாயகம்பிள்ளை நன்னூற் சுருக்கச் சார்பு என்னும் நூலை ஆக்கித் தந்துள்ளார். ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை நன்னூல் இலகுபோதம், நன்னூல் உதாரண விளக்கம் ஆகிய நூல்களைப் படைத்துள்ளார். சுன் னாகம் அ.குமாரசுவாமிப் புலவரியற்றிய வினைப்பகுபத விளக்கம் என்னும் நூல் நன்னூலின் 'நடவாமடிசீ' என்னுஞ் சூத்திரத்தின் விளக்கமாகக் காணப்படுகின் றது. பொ. இராமநாதன் அளித்த 'செந் தமிழ் இலக்கணம்' நன்னூலின் வழிநூலாகவே அமைந்து விளங்குகின்றது. யாப்பருங்கலக்காரிகையும் தண்டியலங்காரமும் சுன்னாகம் அ. குமார சுவாமிப் புலவரின் புத்துரை பெற்று இக்காலப் பிரிவிற் பவனி வந்தன. நெவிஞ்சு சிதம்பரப்பிள்ளையின் தமிழ் வியா கரணமும் த. கைலாசபிள்ளையின் வசனத்தொடையும் வசன இலக்கணத்தை யெடுத்துரைப்பன. தொடரியல் இலக்கணத்தின் முக்கியத்துவத்தையுணர்ந்து இவர்கள்

தனிநூல்களை இயற்றினார்கள். சுன்னாகம் அ. குமார சுவாமிப்புலவரின் இலக்கண சந்திரிகை முன்னைய இலக்கண நூல்கள் எடுத்துரையாத சங்கதச் சொற்களுக்கு உரிய விதிகளையும் அரியனவாகிய பல தமிழ்ப்பதங்களுக்கு உரிய இலக்கணங்களையும் விளக்குவதாகும். மானிப்பாய் ம.ந.ஞானமுத்து இயற்றிய இலக்கண சங்கிரகம், ஞானச்சகோதரர் சவரிமுத்து எழுதிய இலக்கண தீபம் ஆறுமுகநாவலர் அளித்த இலக்கண வினு விடை முதலியனவும் குறிப் பிடத் தக்கனவாம். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அளித்த தமிழ் அமைப்புற்ற வரலாறு, தமிழ்ச் சொற்பிறப்பாராய்ச்சி முதலிய நூல்களும் ஆங்கிலத்தில் எழுதிய மொழியியற் கட்டுரைகளும் தற்கால மொழியியல் ஆய்வினருக்கு முன்னோடியாக விளங்குவன.

பண்டைய இலக்கண நூல்களை விளக்குமுகமாகப் புதிய இலக்கண நூல்கள் எழுந்த ஆங்கிலேயர் காலத்திலே பண்டைய இலக்கிய நூல்களுக்கும் உரை யெழுதிப் போற்றினர். கந்தபுராணத்தின் சில பகுதி கள் அல்லது முழு நூலுக்கு உரையெழுதியவர்களிற் குறிப்பிடத்தக்கவர்கள் சுப்பிரமணிய சாஸ்திரிகள், வல்வை வைத்தியலிங்கபிள்ளை, காரைநகர் கா.சிவ சிதம்பரஐயர் முதலியவர்களாவார். திருவாதவூரர் புராணத்திற்கு ம.க.வேற்பிள்ளை, அ.குமாரசுவாமிப் புலவர் ஆகியோர் உரையெழுதியுள்ளனர். பெரிய புராணத்திற்கு ஆறுமுகத்தம்பிரானவர்கள் இயற்றி யவுரை தமிழறிஞராற் போற்றப்பட்ட பெருமை வாய்ந்ததாகும். கோயிற்புராணம், கூர்மபுராணம், சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம், திருக்கரை சைப் புராணம், திருச்செந்தூர்ப்புராணம், மயூரகிரிப் புராணம் முதலிய புராணங்களுக்கும் ஆங்கிலேயர் காலப்பிரிவில் உரைசெய்துள்ளனர். பாரதத்தின் சில

பகுதிகளுக்கு வ.குமாரசுவாமிப்புலவர், ந.ச.பொன்னம்பலபிள்ளை ஆகியோர் சிறந்த உரை தந்துள்ளனர். திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி, மறைசையந்தாதி முதலியனவற்றிற்கும் இக்காலத்திலே ஈழத்தவர் உரைகண்டுள்ளனர். உலகியல் விளக்கத்திற்கு மட்டுநகர் ச.பூபாலபிள்ளையெழுதிய உரையும் சிவஞான சித்தியாருக்கு மு.திருவிளங்கம் வரைந்த உரையும் இக்காலப் பிரிவிற்றோன்றிய ஏனைய உரைகளுட் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

தமிழ்மொழிக்கும் இலக்கியத்திற்கும் அச்சியந்திரம் ஆற்றிய தொண்டு மதிப்பிடற்கரியதாகும். தமிழகத்திலே கி.பி.பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தமிழ் நூல்கள் அச்சிடப்பட்ட போதும் ஈழவளநாட்டிலே கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே தமிழ்மொழியிலெழுந்த பிரசுரங்களை நாம் காணமுடிகின்றது. ஆங்கிலேயர் காலப்பிரிவிற் பல அச்சியந்திரங்கள் ஈழத்திலே நிறுவப்பட்டன. 'முத்திவழி' முதலாகப் பலநூல்கள் ஈழத்தின் வடபகுதியில் அச்சுவாகனம் ஏறின. மானிப்பாயில் அமரிக்கன் மிசனரிமார் நிறுவிய அச்சியந்திரம் ஈழத்தின் தமிழ்நூற் பதிப்பு வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற் பதிப்பிக்கப்பட்ட பல நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் வெளிவருவதற்கு இவ்வச்சகமே மூல காரணமாயிருந்தது. ஆறுமுகநாவலர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நிறுவிய வித்தியாநுபாலனயந்திரசாலை சைவமக்களுக்கு வேண்டிய பலநூல்களைப் பதிப்பிக்க உதவியது. இவற்றைவிட வல்வையிற் பாரதீநிலைய முத்திராட்சரசாலை, அச்சுவேலியில் ஞானப்பிரகாசயந்திர

சாலை, வயாவிளானில் ஜயசிறீ சாரதாபீடேந்திர சாலை, கொக்குவிலிற் சோதிடப்பிரகாசயந்திரசாலை, பருத்தித்துறையிற் கலாநிதியந்திரசாலை, யாழ்ப் பாணத்திற் சூசையப்பர் கத்தோலிக்க அச்சியந்திர சாலை முதலிய பல அச்சகங்கள் தோன்றித் தமிழ் நூல்களையும், துண்டுப் பிரசுரங்களையும் பத்திரிகை களையும் வெளியிட்டு வந்தன.

ஆங்கிலேயர் காலப்பிரிவிலே ஈழத்திலே பல அச் சகங்கள் நிலவியதனுற் பல பத்திரிகைகளும் சஞ்சிகை களும் தோன்றித் தமிழ்த் தொண்டு புரிய முடிந்தது. பழைமையின் தொடர்ச்சியைச்சுட்டும் ஆங்கிலேயர் காலப்பிரிவு புதுமையின் வழியிற் செல்ல அச்சகங்கள் இன்றியமையாத தொண்டாற்றின. பிரசுரவசதியினுற் ருேன்றிய பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தமிழ் இலக் கியத்தைப் புதுவழியில் விட்டுச் சென்றன. உதயதா ரகை, சத்தியவேத பாதுகாவலன், இந்து சாதனம், சன்மார்க்க போதினி, ஞானுமிர்தம், சுதேச நாட்டி யம், முஸ்லிம் நேசன், ஈழகேசரி முதலிய பத்திரிகை களும் ஞாயிறு, கலாநிதி, மறுமலர்ச்சி முதலிய சஞ் சிகைகளும் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு நன்முறை யிற் சேவை செய்தன.

ஆங்கிலேயர் காலப்பிரிவிலே அச்சகங்கள் பல தோன்றவே பண்டைய நூல்களையும் தம் காலத்து நூல்களையும் ஏடுகளிற் போற்றிப் பேணி வந்த அறி ஞர்க்கு அச்சுவாகனம் ஏற்றக்கூடிய வாய்ப்பு ஏற்பட் டது. இக்காலப் பிரிவிற் பதிப்பாசிரியர்கள் பலர் தோன்றி ஈழத்திலும் தமிழகத்திலும் எழுந்த நூல் கள் பலவற்றை அச்சேற்றினர். ஈழத்தவருட் சிலர் தமிழகத்திலுள்ள அச்சகங்களிலும் தாம் வேண்டிய நூல்களைப் பதிப்பித்துள்ளனர். சி.வை.தாமோதரம் பிள்ளை, ஆறுமுகநாவலர், திரிகோணமலை த.கனகசுந்

தரம்பிள்ளை, சுன்னுகம் அ.குமாரசுவாமிப் புலவர், அச்சுவேலி தம்பிமுத்துப்பிள்ளைப்புலவர், வண்ணூர் பண்ணை சி.சுவாமிநாதபண்டிதர் முதலியோர் ஆங்கிலேயர்காலப் பிரிவில் விளங்கிய பதிப்பாசிரியர்களுட் குறிப்பிடத்தக்கவராவார்.

அச்சியந்திரவசதிகள் அருகியிருந்த காலை நிகண்டுகள் தமிழ்ச் சொற்களின் பொருளை அறிய உதவின. அச்சியந்திரங்கள் பெருகிய ஆங்கிலேயர் காலப்பிரிவிலே அகராதிகள் புது முறையிற் பல்கிப் பெருக ஆரம்பித்தன. மேலைத்தேயக்கல்வி முறையும் இத்தகைய அகராதிகள் தோன்றவுதவின. ''மானிப்பாய் அகராதி'', தமிழ்ச் சொல்லகராதி (மதுரைத் தமிழ்ச் சங்கவகராதி), தமிழ்ப் பேரகராதி, இலக்கியச் சொல்லகராதி, சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி முதலிய தமிழகராதிகள் ஆங்கிலேயர் காலப் பிரிவிலே தோன்றின. உவிஞ்சுலோ, பேர்சிவல் ஆகியோர் பதிப்பித்த ஆங்கிலம் - தமிழ் அகராதிகளின் ஆக்கத்திற்கு ஈழத்தவரின் சேவை இன்றியமையாததாயிருந்தது. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை ஆங்கிலம்- தமிழ் அகராதி ஒன்றினை இக்காலப் பிரிவிலே தொகுத்தளித்துள்ளார். உவிஞ்சுலோ, பேர்சிவல், டன் முதலியோர் வெளியிட்ட தமிழ் - ஆங்கிலம் அகராதிகள் ஈழத்து அறிஞர் உழைப்பினுல் உருப் பெற்றவையேயாம். புதுமுறையிற் தமிழ்ச் சொற்களுக்குப் பொருளுரைத்த அகராதிகள் எழுந்த ஆங்கிலேயர் காலப்பிரிவிலே பழைய முறையைப் பின்பற்றியும் நிகண்டுகள் தோன்றின. வல்வை ச. வயித்தியலிங்க பிள்ளை சிந்தாமணி நிகண்டு என்னுந் நூலை யளித்துள்ளார்.

அகராதி வளர்ச்சியைச் சுட்டுபவர்கள் தவிர்க்க முடியாத இரு நூல்களை ஈண்டு குறிப்பிடலாம். பேர்சிவல் அவர்கள் பழமொழிகளைத் தொகுத்து 'பழ

மொழியகராதி' யென வெளியிட்டுள்ளார். அச்சிடப் பட்ட இவ்வகராதியின் ஆக்கத்திற்கு ஈழத்தவர் பலர் உதவியவராதல் வேண்டும். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை இயற்றிய 'அபிதானகோசம்' இக்காலத்தில் வெளி வந்த கலைக்களஞ்சியத்திற்கு முன்னோடியாகும்.

மேலைத்தேயக் கல்வி முறையின் காரணமாக மேலைத்தேய இலக்கிய வடிவங்களும் தமிழிற்கு வளஞ் சேர்த்தன. இத்தகைய புதிய இலக்கிய வடிவங்களிற் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை சிறுகதையும் நாவலு மாகும். ஊசோன் பாலந்தை கதை, மோகனாங்கி, வீரசிங்கன் அல்லது சன்மார்க்கஜயம், இரத்தின சிங்கம், சந்திரகாசன் கதை, அழகவல்லி, சுந்தரன் செய்த தந்திரம் முதலிய பல நாவல்கள் பத்தொன் பதாம் நூற்றாண்டின் கடைக்கூறு முதலாகத் தோன்றி ஈழத்து இலக்கியப் பரப்பினை விரிவடையச் செய் திருக்கின்றன. ஆங்கிலேயர் காலப் பிரிவிலே வெளி வந்த ஈழகேசரி, மறுமலர்ச்சி முதலியவற்றிலே பல சிறுகதைகள் இடம்பெற்றன. இக்காலப் பிரிவிற் சிறு கதைத் தொகுப்புகள் அருகியே வெளிவந்தன.

ஈழத்துத் தமிழறிஞர் சிலர் ஆங்கில மொழியைப் பயின்று அம்மொழியிலே தமிழர் தம் நாகரிகம், பண்பாடு, இலக்கியம் முதலியவற்றை விளக்க முற் பட்டனர். இவர்களுள் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கவர் புத்தளம் கற்பிட்டியைச் சேர்ந்த சைமன் காசிச் செட்டியவர்களாம். வி. கனகசபைப்பிள்ளை யவர்களின் கட்டுரைத் தொகுதியான 'ஆயிரத்தெண் ணூறு வருடங்களுக்கு முற்பட்ட தமிழர்' என்னுந் நூல் தமிழர் தம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் எடுத்தாராய முற்படும் அறிஞர்களுக்கு அருவிருந் தாக அமைந்து விளங்கும் பெற்றி வாய்ந்தது. தமிழ் மொழியிலுள்ள அரிய நூல்களைப் பிற மொழிகளில்

மொழிபெயர்த்த ஈழத்தவர் தொண்டும் ஈண்டு நினைக் கற்பாற்று. ஜே. வி. செல்லையா மூவேந்தர் காலத்துத் தொகை நூலாகிய பத்துப்பாட்டை ஆங் கில மொழியிற் கவிதை வடிவில் யாத்தளித்தார். கிங்ஸ்பரி தேசிகர் ஜி. இ. பிலிப்பு என்பவருடன் சேர்ந்து நாயன்மாருடைய திருப்பாடல்கள் சில வற்றை மொழிபெயர்த்துள்ளார். ஐசாக்கு தம்பையா அவர்கள் தாயுமான சுவாமிகளுடைய பாடல்களை மொழிபெயர்த்துத் தந்துள்ளார். பொ. அருணாசலம் அவர்களும் பல நூல்களிலிருந்து சில பாடல்களைத் தெரிந்து மொழிபெயர்த்துள்ளார். யாழ்ப்பாண வைபவமாலையை சி. பிறிற்றோவும் கைலாயமாலையை ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையும் கோணேசர் கல் வெட்டை சைமன் காசிச்செட்டியும் மொழி பெயர்த்துள்ளனர்.

அறிவியற்றுறைகளாகிய சோதிடம், கணிதம், வைத்தியம், தருக்கம், வரலாறு முதலியன பற்றியும் ஆங்கிலேயர் காலப்பிரிவிலே நூல்கள் பல எழுந் துள்ளன.

# 2. காவியங்கள்

பிரபந்த இலக்கணங் கூறும் பாட்டியல் நூல்கள் காவிய இலக்கணத்தையுமுள்ளடக்கிக் கூறுவன; எனவே பெருங்காப்பியம், காப்பியம் என்பனவும் பாட்டியலாசிரியர்களாற் பிரபந்தங்களாகக் கருதப் பட்டன என்பதை அறியலாம். இது முற்கால வழக்கு. தற்காலத்தில் பெருங்காப்பியம், காப்பியம், புரா ணம் ஆகியன ஒழிந்த ஏனைச் செய்யுளிலக்கியங் களையே பிரபந்தம் என்று வழங்குவர்.

'காவிய' என்னும் வடமொழிப்பெயரே தமிழிற் 'காவியம்' எனவும் 'காப்பியம்' எனவும் வழங்குகின் றது. அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியரும் இவ்வாறே கொண்டனர். சிலர் காப் பியம் தமிழ்ச் சொல்லேயெனச் சாதிக்க முயல்வர்.

மணிமேகலை,[1] பெருங்கதை,[2] சீவகசிந்தாமணி[3]

---

1. 'நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்' 19 : 80
2. 'காப்பிய வரிசை' (4. 3. 41–2); 'காப்பியக்கோசமும்' (1. 38. 167)
3. 'காப்பியக்கவிகள்' (1585)

ஆகிய காவியங்களிற் 'காப்பியம்' என்ற சொல் லாட்சி இடம் பெறுகின்றது. பதினோராந் நூற்றாண் டியிற்றப்பட்டதாகக் கருதப்படும் வீரசோழியத்தில் முதன்முதலாக இலக்கணகாரர் 'காப்பியம்' என்னுஞ் சொல்லையாண்டுள்ளமை புலப்படுகிறது.[4] புத்தமித்திர னார் காப்பியம் என்ற சொல்லைப் பயன்படுத்தியவிடத் திலே தண்டியலங்காரமுடையார் 'தொடர்நிலை' என் னுஞ் சொல்லையாண்டுள்ளார்.[5] தண்டியலங்காரம் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகலாம் என ஆய்வாளர் கூறுவர். தொல்காப்பியர் 'தொடர்நிலை' என்னுஞ் சொல்லைப் பொருளதிகாரத்தில் ஓரிடத்திலே தான் வழங்கியுள்ளார்.

''மாட்டும் எச்சமும் நாட்ட மின்றி
உடனிலை மொழியினும் தொடர்நிலை பெறுமே''
(செய்யுள். 203)

என்னுஞ் சூத்திரங் காண்க. ஈண்டு தொடர்நிலை யென்பது செய்யுளில்வரும் அடியையேனுந் தனிநிலைப் பட்ட செய்யுளையேனுங் குறிப்பதாகும். இக்கருத்துப் பேராசிரியர் தந்துள்ள உதாரணங்களாலும் வலியுறு கின்றது. எனவே, 'தொடர்நிலை' என்ற குறியீட்டி னாலே தண்டியலங்காரமுடையார் போன்று தொல் காப்பியருங் 'காவியம்' என்பதனைக் கருதினர் எனல் பொருந்தாது. பேராசிரியர் முதலியோர் தண்டி யலங்காரத்திலிருந்தே 'தொடர்நிலை' என்ற சொல்லை எடுத்து வழங்கினர் எனலாம்.

தண்டியலங்காரத்தின் பழையவுரைகாரர் ''கவி யாற் பாடப்படுவனவெல்லாங் காப்பியமன்றோ,

---

4. அலங்காரப் படலம். 36.

5. பொதுவணியியல். 2.

பொருட்டொடர்நிலையைக் காப்பியமென்றதென்னை யெனின் சேற்றுள் தோன்றுவனவெல்லாம் பங்கய மெனப் பெயர் பெறுமாயினும் அப்பெயர் தாமரை யொன்றன் மேற்றேயாயினவாறு போல இப்பெயர் பொருட்டொடர் நிலைக்கேயாயிற்று'' என்பர். இக்கூற் றினுற் பொதுவாகச் செய்யுளெல்லாங் காவிய மென்றே கூறத்தகுமாயினும் தமிழ் வழக்காற்றிற் பெரும்பாலும் பொருட்டொடர் நிலைக்கே அப்பெயர் வழங்குவதாயிற்று என்பது புலப்படுகின்றது.

அடியார்க்கு நல்லார் ''சொற்றொடர்நிலை, பொருட் டொடர்நிலை என்னுந் தொடர்நிலைச் செய்யுட்கும் காப்பியம் என்று பெயர் கூறுதலும் ஆசிரியர் கருத் தெனவுணர்க'' என்று கூறியுள்ளார். புத்தமித்திரனர் சொற்றொடர் நிலை, பொருட்டொடர் நிலையெனப் பகுக்காது பொதுவாகக் காப்பியமெனவுரைத்தார். எனவே சொற்றொடர் நிலையையும் காப்பியமா கக்கொள்ள இடமேற்பட்டது. தண்டியலங்காரமுடை யார் சொற்றொடர் நிலையைக் காப்பியத்துளடக்காது விட்டனர்.

மணிமேகலையில், ''நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்'' (19:80) என்னுமடி மூலம் நாடகமும் காப்பியமாகக் கருதப்பட்டமை தெரிகின்றது. தண்டியலங்காரத்தின் பழையவுரைகாரர் ''இரண் டென்றது இயலுமென்றமிகையான் பத்துவகைப்பட்ட நாடகச் சாதியும் கோவையும் பொருட்டொடர்நிலை பாற்படுமெனக் கொள்க'' என்பர். நாடகத்தை மட்டு மன்றி கோவை யென்னும் பிரபந்தத்தையும் பொருட் டொடர் நிலையாக, காப்பியமாகக் கொண்டுள்ளார் உரைகாரர். சங்கதத்தில் மகாகவி காளிதாசனின் மேகசந்தேசம் . காவியமாகக் கொள்ளப்படுவது

ஈண்டு கருதற்பாற்று. தக்கயாகப்பரணியின் பழைய வுரைகாரர் அதனைத் 'தொடர்நடைச் செய்யுள்' என்பர்.[6]

சிதம்பரப்பாட்டியலுடையார்,

''அறையுமிதிற் சிலகுறைபா டெனினுங் குன்று
தறம்பொருளின் பம்வீட்டிற் குறைபா டாகப்
பெறுவதுகாப் பியமாகும் புராண மாகும்''
(மரபியல். 16)

என்று கூறுவதன் மூலம் காப்பியத்தினுட் புராணத்தினையும் அடக்கியுள்ளார் என்று பெறப்படுகின்றது.

தமிழிலுள்ள இலக்கண நூல்கள் இதிகாசம் எனத் தனியாக ஒருவகையைக் கொள்ளவில்லை. பெருங்காப்பியம் என்ற பகுதியிலேயே இதிகாசத்தையும் அமைத்தனர்.

காவியம் என்ற சொல்லும், பொருட்டொடர்நிலை என்ற தொடர்மொழியும் ஒன்றினையே குறிக்கும் இரு சொற்களாகக் கொள்ளப்பட்டதனால் மயக்கம் ஏற்பட்டது என்பது மேற்கூறியவற்றாலே தெளிவாகின்றது. காவியத்திற் பொருட்டொடர்ச்சி உண்டெனினும் பொருட்டொடர்நிலைச் செய்யுள் அனைத்துங் காவியம் என்று கூறுவது பொருந்தாது. இவ்வாறு கொள்ளாவிடின் பொருட்டொடர்ச்சி பெற்று, கதை தழுவாது வரும் மலைபடுகடாம் முதலிய பத்துப் பாட்டுச் செய்யுள்களும் பொருட்டொடர்புடைய பரணி, கோவை போன்ற பிரபந்தங்களும், புராணங்களும் காவியங்கள் எனப்படல்வேண்டும்.

---

6. தாழிசை 633 உரை.

தொல்காப்பியத்தில் முதனூல், வழிநூல் என்ற பாகுபாடும்[7] பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல், பண்ணத்தி என்ற பாகுபாடும்[8] காணப்படுகின்றன. ஆற்றுப்படை முதலிய நூல்கள் சிலவும் தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய நூல் வகைகளாம். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் தொல் காப்பியர் முற்பட இருபத்தாறு செய்யுளுறுப்புக்களைக் கூறி அம்மை, அழகு முதலிய எட்டு வனப்புக்களையும் தனிப்படக் கூறுதலினாலே இவை தனிநிலைச் செய் யுட்கு அன்றித் தொடர்நிலைச் செய்யுட்கே சிறப்பாக வுரியன என்றனர். ஆனால் இளம்பூரணர் இவ்வனப் புகள் தனிநிலைச் செய்யுட்கு உரியன என்றே கருதுமாறு உரையியற்றியுள்ளார். தொல்காப்பியர் இலக் கணம் வகுப்பதற்குக் காரணமாய நூல்கள் உரையா சிரியர் காலத்திற் கிடைக்கவில்லை. எனவே இலக் கணத்தைப் புலப்படுத்தவேண்டித் தம் காலத்தில் வழங்கிய நூல்களை உரையாசிரியர் உதாரணங் காட் டினர். நச்சினார்க்கினியர் சிலப்பதிகாரத்தைத் தொன் மைக்கும், சீவக சிந்தாமணியைத் தோலுக்கும் உதா ரணங் காட்டுவர். ஆனால் உரையாசிரியர் கூற்றை ஏற்றுத் தற்காலத்து அறிஞர் சிலர் தொன்மை, தோல், இயைபு, புலன் முதலியவற்றாற் கூறப்படுவன காவியங்களாகிய தொடர்நிலைச் செய்யுளேயென மயங் குவர். அவர் கூற்றை ஏற்பதற்குப் போதிய ஆதார மில்லை.

வீரசோழியமுடையார் ''காப்பியம் மாநூல்'' என்று கூறுவதோடு அமைதியுற்றார். தண்டியலங்கார ஆசிரியர் நால்வகைச் செய்யுளிலொன்றாகிய தொடர்

---

7. மரபியல் – 70.

8. செய்யுளியல் 75, 173, 174.

நிலையை இரண்டாகப் பகுத்து அதன் இலக்கணங் களைக் கூறுவர்.

பெருங்காப் பியமே காப்பிய மென்றாங்
கிரண்டா யியலும் பொருட்டொடர் நிலையே.

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகட லாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழி லுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்க மிலம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப.

கூறிய வுறுப்பிற் சிலகுறைந் தியலினும்
வேறுபா டின்றென விளம்பினர் புலவர்.

அறமுத னான்கினுங் குறைபா டுடையது
காப்பிய மென்று கருதப் படுமே.

அவைதாம்,

ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாடையும் விரவியும் வருமே.

பாவிக மென்பது காப்பியப் பண்பே.

எனவரும் நூற்பாக்கள் மூலம் காப்பிய இலக்கணம் கூறுகிறூர் தண்டியலங்கார முடையார்.

தண்டியலங்காரங் கூறுங் காவிய இலக்கணத்திற் குறைபாடுகள் சிலவுள என்று வாதிடும் அறிஞரும் உளர். இக்குறைபாடுகளிற் சில இதன் மூல நூலாகிய காவியாதர்சத்திற் காணப்படவில்லை எனச் சங்கத மொழியுணர்ந்தோர் கூறுவர். தண்டியலங்காரத்தைப் பின்பற்றிப் பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், மாறனலங்காரம், சிதம்பரப்பாட்டியல், இலக்கணவிளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம் முதலியன காவிய இலக்கணம் கூறுவன. தண்டியலங்காரம் முதலாக எழுந்த காவிய இலக்கண நூல்கள் யாவும் நாற்பொருள் அமைதி குறைந்தவற்றைக் காவியம் என்று கொண்டன. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரம் வீடு கூருமையின் அது பெருங்காப்பிய மன்றெனவும் அறனும் வீடுங் கூறும் மணிமேகலையையும் சேர்த்து ஒரு பெருங் காப்பியமாகக் கருதவேண்டும் எனவும் கூறினுர். அறம் முதலிய நான்கும் பெருங் காப்பியத்திற்கு இன்றியமையாதன என்ற கருத்து மரபிலே வேரூன்றியுள்ளதை இது காட்டுகின்றது.

தமிழிலக்கியத்திலே ஐம்பெருங் காப்பியம், ஐஞ் சிறுகாப்பியம் என்ற பாகுபாடு காணப்படுகின்றது. இவ்விரு தொடர்களிற் பின்னையது முன்னையதை நோக்கி அண்மைக் காலத்திலேற்பட்ட வழக்காம்.

ஐம்பெருங்காப்பியம் என்ற வழக்கு எக்காலத்திலே தொடங்கியது என்று தெரியவில்லை. தமிழ் விடுதூதிற்,

''பற்றும் இலக்கணநூற் பாவும்நூற் பாவறிந்து
கற்றோர் வழங்குபஞ்ச காப்பியமும்'' (53)

எனப் 'பஞ்சகாப்பியம்' வழங்கப்பட்டுள்ளது. நன்னூல் உரையாசிரியருளொருவராகிய மயிலைநாதர் 'ஐம்பெருங்காப்பியம்' என்ற தொடரையாளுகின்றார் (சூ 387 உரை.) 'பஞ்சகாவியம்' என்ற தொடர் பெருந்தொகையென்ற தொகுப்பிற் காணப்படுகின்றது. ஆனால் மேற்காட்டிய இடங்களில் அப்பஞ்ச காவியங்கள் இன்னவையென்று கூறப்படவில்லை. திருத்தணிகையுலா, பொருட்டொகை நிகண்டு என்ற நூல்களிலே சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்ற முறையில் ஐந்து நூல்கள் பஞ்ச காவியங்களாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வைந்து நூல்களையும் பெருங்காப்பியங்கள் என்று கூறுவதில் அறிஞர் முரண்பட்டு நிற்கின்றனர். இத்தகைய தன்மையுடைய தொகுதியை நோக்கி 'ஐஞ்சிறு காப்பியம்' என்ற ஒரு தொகுதியையும் சிலர் ஏற்படுத்தியுள்ளனர். உதயணன் காதை, நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி என்னும் நூல்களை அத்தொகுதியிலடக்குவர் இவற்றுள் சூளாமணி ஒழிந்தனவற்றைக் காவியமென்று கூறல் பொருந்தாது என்பர்.

ஈழத்திலெழுந்த நூல்களிற் சில 'காவியங்கள்' என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தையொட்டியெழுந்த கண்ணகிவழக்குரை காவியகதியை உணரவிழைவோருக்கு அருவிருந்தாகும். சங்கதத்திலே பஞ்சகாவியம் என்ற தொகுதியிலே அடங்குவது மகாகவி காளிதாசர் இயற்றிய இரகுவம்சம். அதனைத் தமிழிலே அதர்ப்பட மொழிபெயர்த்து யாத்தார் அரசகேசரி. வம்சசரிதையாக விளங்கும் இந்நூலிற் காவியப் பண்புகள் பல மிளிர்ந்து

காணப்படுகின்றன. திருச்செல்வர் காவியம் காவிய வுணர்ச்சியுடன் இயற்றப்பட்டதொன்ருகும். கஞ்சன் காவியம் பற்றிய செய்திகள் தெளிவாகவில்லை; அந் நூல் வெளிவரவுமில்லை. இருதுசங்காரகாவியம் காவிய மெனப் பெயர் தாங்கினும் காவியமெனக் கொள்ள இட மளிப்பதொன்றன்று. மாணிக்ககங்கைக் காவியம் எவ் வாற்ருனும் அப்பெயர் தாங்கமுடியாத சிறுநூலாகும். மாணிக்ககங்கைக் காவியம் போன்ற அமைதியுடை யன சில, காவியம் என்ற பெயர் தாங்கி எழுந்துள் ளன. கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியம் எழு பத்திரண்டு விருத்தங்களாலானது. இந்நூல் உடுகுச் சிந்து எனவும் வழங்கப்படும். காப்புப் பாடல்களையும் கண்ணகியம்மன் தலங்கள் பற்றிய வாழ்த்துப் பாடல் களையும் கொண்டது இந்நூல். மழைக்காவியம் என்ற பெயரில் இரு நூல்கள் மட்டக்களப்பில் வழங்குகின் றன. தம்பிலுவில் என்னும் ஊரில் எழுந்தநூல் வெளி வந்துள்ளது; அது ஆதியாக விநாயக வணக்கமும் அந்தமாக வாழிப் பாடலும் கொண்டது. இடை நடுவே பதின்மூன்று பாடல்களில் மழைவேண்டிப் பாடப்பட்டுள்ளது. மருதமுனை சின்ன ஆலிம் அப்பா (மீராலெப்பை) என்பவர் பாடிய மழைக்காவியம் வெளிவந்ததாகத் தெரியவில்லை. அக்கரைப்பற்றைச் சேர்ந்த சேகுமதாறுசாகிப் புலவரவர்கள் 'புசற்காவி யம்' 'பிள்ளைக்காவியம்' என்பனவற்றைப் பாடியுள் ளார் என்ப. கடும் புயலினல் ஏற்பட்ட நிலையை வருணிப்பது புசற்காவியம்; பிள்ளைப்பேறு வேண்டி மங்கையொருத்தி இறையருளை வேண்டுவதாக அமை வது பிள்ளைக்காவியம். கந்தளாய்க் குளக்கட்டுக்காவி யம் என்ற நூல் பதிப்பிக்கப்பட்டதாக அறிகிறேம். அதன் தன்மை தெரியவில்லை. வயிரவ சுவாமி பேரில் காவியம் என்ற சிறு நூலும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

## கண்ணகி வழக்குரை

ஆரியச்சக்கரவர்த்திகளில் ஒருவனுன சயவீரசிங்கையாரியன் (செகராசசேகரன்V) என்பவன் கண்ணகி வழக்குரை என்னும் காவியத்தைப் பாடியவனுவான்.

''கோவலனுர் கதை''யின் பதிப்பாசிரியர் ''இந்நூலை ஆக்கியவர், முன்குடாரிப்பு என்னுங் கிராமத்தில் வசித்துவந்த வெற்றிவேலுச்சட்டம்பியார் என்றும், அவர் போர்த்துக்கீசர் இலங்கையை அரசாட்சி செய்த காலத்திற் பகைவர் சிலரின் தூண்டுதலால் அரசாங்கத்தாரின் கோபத்துக்காளாகிச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார் என்றும், அவர் சிறைச்சாலையிலிருந்து கொண்டே இதைப் பாடிச் சிறைவிடப்பட்டாரென்றும் ஒருகதை தொன்றுதொட்டு வழங்கி வருகிறது; ஆனுல் இந்நூலிற் 'காங்கேசன்றேவையர்கோன்' (அரங்கேற்றுக்கதை, 2 ) என்பவராற் பாடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது'' என்றுங் கூறியுள்ளார். எனவே பதிப்பாசிரியர் கர்ணபரம்பரைக் கதைக்கு நூலின் அகச்சான்று முரணுன செய்தியைத்தருவதை உணர்ந்தமை புலனுகின்றது.

'கண்ணகி வழக்குரை'யின் பதிப்பாசிரியர் பண்டிதர் வி.சீ.கந்தையா ''எப்படியும் காங்கேயன் என்ற பெயரே நூலுட் பலவிடத்தும் இந்நூலாசிரியரின் தொடர்பாகப் பயின்றுவரக் காண்கிறேம்'' என்பதனுலே காங்கேசன் என்பதே நூலாசிரியர் பெயராகலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிற் கண்ணகி வழக்குரை அல்லது கோவலனுர் கதை என்னுங் காவியத்தின் ஆசிரியர் யாரென நாம் ஆராயவேண்டியுள்ளது. இந்நூலின் அகத்தே காணப்படும் செய்திகள் மூலமே இதன் ஆசிரியனை

அறியவேண்டிய நிலைமையுள்ளது. நூலாசிரியர் தங் கூற்றுக அமைந்துள்ள பாடல்கள் சிலவற்றின் மூலம் தம்பெயரை அறியத்தந்துள்ளார். ஆரியர்கோன், அதியரசன், தேவையர்கோன், காங்கேசன், சகவீரன் என்றபெயர்கள் ஆசிரியரை இனங்காண உதவுங் குறிப்புகளாக விளங்குகின்றன.

''திருவிருக்கும் மணிமார்பன் சிறந்ததமிழ்
ஆரியர்கோன்
மருவிருக்கும் மார்பணிந்த மண்டலத்தில்
வணிகர்மைந்தன்
தருவிருக்கும் கைத்தலத்தான் தந்திவண்ணப்
பெருமாள்காண்
குருகுலத்தோர் கொண்டாட இக்கதையைப்
பாடிவைத்தேன்.''

என்ற பாடலில் ஆசிரியர் தம்மை 'ஆரியர்கோன்' எனச்சுட்டுகிறார். இதனால் நூலாசிரியர் ஆரியச்சக்கர வர்த்திகளில் ஒருவர் என்று கருதமுடியும். மேலும்,

''மழையனைய கொடைக்கரத்தோன் வருணகுலந்
தனிலுதித்தோன்
பழையமறை முனிமரபோன் பவளமனைக்
காவலவன்
அழகன்வழி அரசுகொண்ட அதியரசன்
அன்புடனே
வழுதியுடன் கண்ணகையார் வழக்குரையைப்
பாடினனே''

என்ற பாடலும் ஆசிரியர் அரச மரபினர் என்பதை வலியுறுத்துகின்றது. 'அதியரசன்' என்ற சொற் காண்க. தேவையர்கோன், காங்கேசன் என்ற இரு பெயர்களும் தெளிவாக இந்நூலாசிரியர் ஆரியர் கோன் என்பதை அறியவுதவுகின்றன.

"அவனிபயில் குடிநயினுப் பணிக்கனெனு
பவம்மிகுந்தோன்
கவளமந்தக் களிற்றண்ணல் காங்கேசன்
தேவையர்கோன்
தவனனென விளங்குபுகட் சகவீரன் முரணியிற்
சிவனருளா லிக்கதையைச் செந்தமிழ்ப்பா
மாலைசெய்தான்."

என்ற பாடலிலே தேவையர்கோன், காங்கேசன், சகவீரன் என மூன்று முக்கிய பெயர்கள் வருகின்றன.

ஆரியச்சக்கரவர்த்திகள் இராமேசுரத்தோடு மிகவுஞ் சம்பந்தம் பூண்டுள்ளவர்கள் என யாழ்ப்பாண வரலாற்றறிஞர் கருதுவர். இவர்கள் 'சேது' எனும் மொழியோடு தஞ்சாசனங்களை ஆரம்பித்தனர். 'சேது' என்னும் வாசகத்தையே தம் முத்திரைக்காசுக்கு வழங்கினர். முன்னுளிற் சேதுபதிகள் 'தொண்டியந்துறை காவலர்' எனவே அறியப்பட்டுள்ளார் எனவும் யாழ்ப்பாணத்தரசர்கள் வலிகுன்றியிருந்த காலத்தே அன்னோர் வலிபடைத்தனர் எனவும் ஆதிச் சேதுகாவலர் யாழ்ப்பாண அரசர்களேயெனவும் சுவாமி ஞானப்பிரகாசர் கூறியுள்ளார்.[9] வரலாற்றறிஞர் கூற்றுக்கு ஆதாரமளிப்பனவாக இலக்கியச் சான்றுகளும் காணப்படுகின்றன.

"சேதுகாவலவன் விஞ்சை விஞ்சுசெக
ராசசேகரன்"

(செகராசசேகரமாலை)

---

9. யாழ்ப்பாண வைபவ விமர்சனம். அச்சுவேலி: ஞானப்பிரகாச யந்திரசாலை, (1928) பக். 62.

''சிங்காசாரியன் சேதுகாவலன்''
(தட்சிண கைலாசபுராணம், அரசகேசரி
பாடிய சிறப்புப்பாயிரம்)

அம்புயத்துதரத் தண்ணலமைத்த வாரியர்
தங்கோமா
னும்பர் வந்திறைஞ்சுஞ் சேதுவுயர்கரைக்
காவல்வேந்தன்
செம்பொன் மாமவுலிச் சென்னிச்செகராச
செகரேசன்
றும்பையஞ்சடையான் சைவந் தோன்றிடத்
தோன்றினுன்.
(தட்சிண கைலாசபுராணம் திருநகரச்சருக்கம்,
108; வைத்தியலிங்கதேசிகர் பதிப்பு)

தேவையென்பது இராமேசுரத்திற்காய வேருேர் பெயுராகும்.

ஆரியச்சக்கரவர்த்திகளே வரலாற்றுச் செய்திகளும் இலக்கியச்சான்றுகளும் சேதுகாவலராக எடுத்துரைப் பது போலவே கங்கை வமிசத்தவர் என்றுங் கூறுவன. ஆரியச்சக்கரவர்த்திகள் கீழ்த்திசைக்கங்கர் வமிசத்த வரேயெனவும் அக்கங்கரது தலைநகருள் ஒன்ருன சிங் கபுரப்பெயரைத் தம் தலைநகருக்கிட்டுச் சிங்கைநகர் என வழங்கினுரெனவும் வரலாற்றறிஞர் கூறுவர். இக்கூற்றிற்கு இலக்கியங்களும் வலுவளிக்கின்றன.

''செகராசசேகரமன் கங்கைநாடன்''
(செகராசசேகரமாலை, சிறப்புப்பாயிரம்)

''மன்றுகண்டருளுங் கங்கையாரியன்''
(இரகுவம்மிசம், மலை.107)

''கங்கைநாடன் கறறவர்திலகன்''
(தட்சிண கைலாசபுராணம், அரசகேசரி பாடிய சிறப்புப்பாயிரம்)

தேவையர்கோன், காங்கேசன் ஆகிய பெயர்கள் சிறப்புப் பெயர்களல்ல; பொதுப்பெயராகும். கங்கை குலத்து ஈசன் என்று பொருள்பட்டு நிற்கும் காங்கேசன் என்ற பெயர். இந்நிலையிற் சகவீரன் என்ற சிறப்புப்பெயர்பூண்ட ஐந்தாம் செகராசசேகரனே கண்ணகி வழக்குரையைப் பாடினுன் என்று கருத வேண்டியுள்ளது.

சயவீரசிங்கையாரியன் என்பவன் செகராசசேகரன் என்ற பட்டப் பெயர்பூண்ட ஆரியச்சக்கரவர்த்திகளில் ஐந்தாமவன் என்பர். இவன் கி.பி. பதினுலாம் நூற்ருண்டின் கடைக்கூற்றில் அரசுகட்டிலேறிப் பரிபாலனஞ் செய்தவன். செகராசசேகரன், பரராசசேகரன் என்ற இரு பெயர்களும் பட்டப் பெயர்களாக மாறிமாறி வந்துள்ளமையை உணராது அறிஞர் சிலர் இவ்விரு பெயரையுஞ் சிறப்புப்பெயராகக் கொண்டு இடர்ப்பட்டுள்ளனர்.[10] சயவீரசிங்கையாரியன் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் கீர்த்தியில் உச்சநிலையை அடைவதாயிற்று என்பர். புலவனுகவும் புரவலனுகவும் சயவீரன் திகழ்ந்தான் என்று அறியமுடிகின்றது. இவன்ருனே நூலாசிரியராக விளங்கியதோடு அமையாது பிற நூலாசிரியரையும் ஊக்குவித்துள்ளான் என்று கருதச்சான்றுகளுள. செகராசசேகரம் என்ற

---

10. பாவலர் சரித்திரதீபக ஆசிரியர் கனகசூரிய சிங்கையாரியனுகிய ஆரும் செகராசசேகரனே சயவீரசிங்கையாரியனின் தந்தையாகக் கூறுவது காண்க. கனகசூரியசிங்கையாரியன் ஏழாம் செகராசசேகரனுகிய சங்கிலியின் . தந்தையாம். அவர் கூற்றையே வித்துவான் F. கணேசையரும் அ. குமாரசுவாமிப் புலவரும் பின்பற்றிப் புலவர் சரிதங் கூறுகின்றனர்.

வைத்திய நூலும் செகராசசேகரமாலை என்ற சோதிட நூலும் இவன் இயற்றுவித்த நூல்கள் என்ப.[11]

> ''இயம்பிய குடலு மூனு மென்புநா டிகளு மற்றுஞ்
> செயம்பெறு சிங்கை நாடன் செகராச சேக ரன்று
> னுயர்ந்தவாள் வடக்க ராக முருட்டிய களத்தின் மீதே
> அயஞ்சிறி துளது தீர அளந்துகண் டறிந்த தாமே.''

என ஆக்குவித்தோனைப் புகழுகின்றது செகராச சேகரம். சோமசன்மா

> ''ஐந்தருவு நவநிதியுங் குலமணியும் பொன்துகிலு மாவு மொன்றாய்
> வந்தனைய கொடைக்குரிசில் வரியளிக ளிசைகுலவு வனசத் தாமன்
> சந்ததமுந் தருமநெறி கோடாத தவப்பெருமான் றழைத்த கீர்த்திக்
> கந்தமலை யாரியர்கோன் செகராச சேகரமன் கங்கை நாடன்.''

என செகராச சேகரமாலையிலே இயற்றுவித்தவனைப் போற்றுகின்றார்.

கண்ணகி வழக்குரை என்னுங் காவியம் இளங் கோவடிகள் பாடிய சிலப்பதிகாரக் கதையைப் பின் பற்றுவதாகும். ஆயினும் சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டத்து நிகழ்ச்சிகள் ஈண்டு இடம்பெறவில்லை. மதுரையின் தகனத்தோடு கண்ணகியின் மாண்பு

---

11. பாவலர் சரித்திர தீபகம். ''இவர் செகராசசேகரம் என்னும் ஓர் அரிய வைத்திய நூலையன்றிச் சோதிட நூலும் ஒன்றை இயற்றினர்'' பக் 161.

உச்சநிலையை அடைகின்றது. கண்ணகி வழக்குரையாசிரியர் அதன் பின்பு இளங்கோ கூறும் நிகழ்ச்சிகளைக் கூருது விட்டுவிட்டார். இளங்கோவின் குறையைக் கண்ணகி வழக்குரையாசிரியர் உணர்ந்தார் போலும்.

கண்ணகி வழக்குரை 'கோவலனுர் கதை' யெனவும் 'கண்ணகி வழக்குரை' எனவும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. கோவலனுர் கதைப் பதிப்பாசிரியர் மேல்வரும் பிரிவுகளுடன் நூலைப் பதிப்பித்துள்ளார்:

(1) கோவலர் கண்ணகையம்மன் வரலாறு.

(2) தூரி ஓட்டம்.

(3) கடலோட்டுக்கதை.

(அ) வெடியரசன்போர்.
(ஆ) நீலகேசரி புலம்பல்.
(இ) வீரநாராயண தேவன்போர்.
(ஈ) விளங்குதேவன்போர்.

(4) மணமாலை.

(5) அரங்கேற்றுக்கதை.

(6) கோவலரைப்பொன்னுக்கு மறித்தகதை.

(7) சிலம்புகூறல்.

(8) உயிர்மீட்சிக்கதை.

(9) வழக்குரை.

மதுரைதகனம்.

(10) குளிர்ச்சி.

'கண்ணகி வழக்குரை' என்ற பதிப்பில் மேல்வரும் பிரிவுகள் காணப்படுகின்றன:

1. வரம்பெறு காதை.

(அ) கோவலனூர் பிறந்த கதை.

(ஆ) அம்மன் பிறந்த கதை.

2. கப்பல் வைத்த காதை.

(அ) மீகாமன் கதை.

(ஆ) தூரியோட்டு.

(இ) கப்பல் வைத்தல்.

3. கடலோட்டு காதை.

(அ) வெடியரசன்போர்.

(ஆ) நீலகேசி புலம்பலும் வீரநாரணன் கதையும்.

(இ) மணிவாங்கின கதை.

(ஈ) விளங்குதேவன் போர்.

4. கலியாணக் காதை.

5. மாதவியரங்கேற்று காதை.

6. பொன்னுக்கு மறிப்புக் காதை.

(அ) பொன்னுக்கு மறிப்பு.

(ஆ) இரங்கிய காதல்.

7. வழிநடைக் காதை.

(அ) வயந்தமாலை தூது.

(ஆ) வழிநடை.

8. அடைக்கலக் காதை.

9. கொலைக்களக் காதை.

(அ) சிலம்பு கூறல்.
(ஆ) கொலைக்களக் கதை.
(இ) அம்மன் கனாக்கண்ட கதை.
(ஈ) உயிர்மீட்புக் கதை.

10. குளிர்ச்சிக் காதை.
(அ) குளிர்ச்சி.
(ஆ) வழக்குரைக் காவியம்.

இரண்டு பதிப்புக்களும் வைப்புமுறையில் ஒரே ஒழுங்கில் அமையாமல் மாறுபட்டுக் காணப்படுகின்றன. ஆசிரியர் ஒருவர் இயற்றிய இந்நூல் இரண்டு முழுப்பதிப்புகளிலும் அமைப்பு முறையில் மாறுபடுவதற்குப் பல காரணங்கள் கூறலாம். இந்நூலியற்றப்பட்ட காலமுதலாக ஏட்டுவடிவில் இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமுள்ள கண்ணகி கோயில்களில் விழாக்காலங்களிற் படிக்கப்பட்டு வந்துள்ளது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலுள்ள கண்ணகி கோவில்களில் இந்நூல் ஏட்டு வடிவத்துடன் போற்றப்படுவது இன்றுங் காணக்கூடிய செயலாகும். ஏட்டு வடிவத்தில் அமைந்திருந்தமையால் இந்நூலில் மாற்றங்கள் பல ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் எழுந்தன. இதனைப் படித்தவர்கள் வெளிப்பாடல்கள் பலவற்றைச் சேர்க்கவும் அதனமைப்பை மாற்றிக்கொள்ளவும் தயங்கவில்லை. எனவே ஊருக்கு ஊர் மாற்றங்களுடனும் எழுத்து வழுக்களுடனும் எழுதப்பட்டு, பிரதி பேதங்கள் உடையனவாக ஏட்டுப் பிரதிகள் காணப்படுகின்றன. இவ்வேட்டுப்பிரதிகளை ஒப்பிட்டுப் பழைய அமைப்பு முறையை அறிதல் பதிப் பதிப்பாசிரியர்களுக்கு இடையூறு மலிந்த தொழிலாகும். இவ்விரு பதிப்புக்களின் அமைப்பு முறையை நோக்குமிடத்து அவற்றில் முரண்பாடும் மயக்கமும் தோன்று

கின்றபடியால் இந்நூல் மேலும் ஆராயப்பட்டுத் திருந்திய வகையில் வெளிவரவேண்டும் என்று கூறுதல் பிழையாகாது.

இளங்கோவடிகள் பாடிய சிலப்பதிகாரம் தமிழ் மக்களை ஈர்ந்த கதையினையுடைய காவியமாகும். நெஞ்சையள்ளுஞ் சிலப்பதிகாரம் எனப் போற்றப் பட்ட பெற்றிவாய்ந்தது. தமிழகத்திலே 'கோவலன் கதை'யென அம்மானையிலமைந்த நூல் பொதுமக் களிடையே செல்வாக்குப் பெற்றதாகும். ஈழத்தி லெழுந்த கண்ணகி வழக்குரை சில இடங்களிற் கோவலன் கதையைப் பின்பற்றியபோதும் பொது வாக இளங்கோவின் காவியத்தையே பின்பற்றுகின் றது.[12] ஆயினும் கண்ணகி வழக்குரையிற் குறிப்பி டத்தக்க அம்சங்கள் சிலவுள. வஞ்சிக்காண்டம் சிலப் பதிகாரத்தின் சிறப்பினைக் குறைக்கும் பிரிவாக அமைந் துள்ள தென்று ஆய்வாளர் கூறுவர். கண்ணகியின் கதை மதுரைக்காண்டத்தோடு முடிவதே பொருத்த மாகுமெனவும் வஞ்சிக்காண்டம் இக்கதைக்கு புறம் பான பிரிவு எனவுங் கருதுவர். கண்ணகி வழக் குரை ஆசிரியர் இதனை உணர்ந்து வஞ்சிக்காண் டத்தை நீக்கிவிடுகிறார். மாதவியின் கதாபாத்திரச் சிருட்டி கண்ணகி வழக்குரையில் வேறு விதமாக அமைகின்றது. இளங்கோவின் மாதவி உன் னத சிருட்டியாக அமைகிறாள். கண்ணகியின் காற் சிலம்புக்காக நாகமணி தேடிச்செல்லுஞ் சந்தர்ப்பத்தை

---

12. "தென்மலையத் திருமுனிவன் செய்தவருந் தமிழ்தன்னை
மூன்றுதவப் பயனாலே மொழிந்தனர்மூ தறிவாணர்
அன்னதுகொண் டேஇளங்கோ அடிகள்மொ ழிந்தகதையது
தன்னிலேஒன் றிறப்புகல்வேன் தண்டமிழோர்க் கேசரணம்"
(கண்ணகி வழக்குரை, மாதவி அரங்கேற்று காதை.)

நூலாசிரியர் உருவாக்கி ஆங்கு மீகாமன் வெடியரசன் ஆகிய இருவீரர்களைத் தோற்றுவித்து அவர்கள் புரிந்த போரை வருணிக்குமுகமாக ஈழவளநாட்டின் மாண்பினை விதந்தோதித் தம் தேசிய அபிமானத்தை வெளிப்படுத்தியுள்ளார் இந்நூல் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் போற்றப்படுவதற்குரிய காரணங்களில் முக்கியமானவற்றுள் அதன்மொழிநடையும் யாப்பும் குறிப்பிடத்தக்கவை. இலகுவாக அமைந்த ஓசைமுறையும் அதற்கேற்ற மொழியும் இந்நூலைப் பொதுமக்கள் தம் செல்வமாகப் பேணக்காரணமாக அமைந்துள்ளன.

தென்புலோலியூர் மா.சே. செல்லையா 'கோவலனூர் கதை' யென்னும் பதிப்பைப் பருத்தித்துறை, கலாபவன அச்சகத்திற் பதிப்பித்து 1962 ஆம் ஆண்டு வெளியிட்டார். இவர் பதிப்பித்த ஏடு யாழ்ப்பாணத்துப் புலோலியூர் மந்திகை கண்ணகியம்மன் கோயிலிற் பாராயணஞ் செய்யப்பட்டு வருவதாகும். 1965 ஆம் ஆண்டு அரசுபதிப்பக அச்சகத்திலே கண்ணகி வழக்குரையின் முதலிரு காதைகளாகிய வரம்பெறுகாதை, அம்மன் பிறந்த காதை என்பனவற்றை அச்சிட்டு யாமும் வெளியிட்டுள்ளோம். மட்டக்களப்பு வித்துவான் பண்டித வி.சீ. கந்தையா 1968 ஆம் ஆண்டு சுன்னாகம், திருமகள் அழுத்தகத்திலே அச்சிட்டு, காரைதீவு இந்துசமய விருத்திச் சங்க வெளியீடாகக் 'கண்ணகி வழக்குரை' யென்னும் காவியத்தைத் தந்துள்ளார்.

சயவீரசிங்கையாரியன் தட்சிண கைலாசபுராணம் என்ற நூலினையும் இயற்றியுள்ளாரென அறிகிறோம்.

## இரகுவம்மிசம்

யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரையில் வந்த அரசகேசரியே முதன் முதலாக ஈழத்திற் காவியஞ் செய்தவராவார். இவர் இயற்றித் தந்த நூலே 'இரகுவம்மிசம்' ஆகும்.

அரசகேசரி யாழ்ப்பாணத்து நல்லூரிற் பிறந்து வளர்ந்து வாழ்ந்தவர். சமயத்தாற் சைவர்; மரபால் அரசர். ஆரியச் சக்கரவர்த்திகள் மரபில் வந்த எதிர்மன்னசிங்க பரராசசேகரனின் தமையன் என்று போர்த்துக்கீச சரித்திரங் கூறுகின்றது. தமிழ்ச் சரித்திர நூல்கள் மருகன் என்று கூறுகின்றன. எதிர்மன்னசிங்க பரராசசேகரன் 1616-ஆம் ஆண்டில் மரணத்திரையால் மறைக்கப்பட்டனன். மரணப்படுக்கையிலிருக்கும் போது தன்னேக புத்திரனை அரசகேசரி வசம் ஒப்புவித்து அச்சிறுவன் வயதுடையவனுகும் வரை இராச்சிய பாரத்தைத் தாங்கிக் கொள்ளுமாறு வேண்டினன். அரசபரிபாலனஞ் செய்துவருகையிற் சங்கிலியனுற் கொலையுண்டார்.

எதிர்மன்னசிங்க பரராசசேகர அரசனே இரகுவம்மிசம் பாடுமாறு இவரைத் தூண்டினுர் போலும். மேல்வரும் பாயிரச் செய்யுள் அவ்வாறு கூறுகின்றது.

இன்ன காதை யியன்ற விரும்பொருட்<br>
டுன்னு செஞ்சொற் றுகடபு தூயநூல்<br>
பன்னு செஞ்சொற் பரராச சேகர<br>
மன்ன னின்ப மனங்கொள வாய்ந்ததே.

வடமொழியிலே காளிதாச மகாகவி இயற்றிய இரகுவம்சம் என்னுங் காவியத்தைத் தமிழிலே அதர்ப்

பட மொழிபெயர்த்து யாத்தனர் என்பது பின்வரும் பாயிரச் செய்யுளால் விளங்குகின்றது.

வன்றி சைக்காளி தாசன் வடமொழி
தென்றி சைத்தமி ழானனி செப்புகே
னன்றி சைக்கு முரைவழி நன்னெடுங்
குன்றி சைப்பது போலுங் குறிப்பரோ.

ஆகவே அரசகேசரி வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லார் என்பது புலப்படுகிறது. இவர் இராச மாளிகைக்கு அண்மையிலுள்ள செந்தாமரை வாவியினருகே அமைக்கப்பட்ட மாளிகையின் மேன்மாடத்தேயிருந்து நூலினை இயற்றினர் என்பர். இவ்விடத்தினை நாயன்மார்கட்டு என்பர். நாயன்மார் அறுபத்து மூவருக்கு அடியார்க்கு நல்லார் என்ற அமைச்சர் திருமடம் அமைத்து வழிப்பட்டனராகையினுல் இவ்விடம் 'நாயன்மார்கட்டு' எனப்படலாயிற்று. இவர் வாழ்ந்த வளவினை 'அரசகேசரிவளவு' என்று இன்றும் வழங்குகின்றனர். பிள்ளையார் கோயிலொன்று 'அரசகேசரிப்பிள்ளையார்' என்ற நாமத்தால் வழங்கப்படுகின்றது.

இரகுவம்மிசத்திலே திலீபமகாராசன் காமதேனுவை வழிபட்டு இரகு என்பவனைப் புத்திரனுகப் பெற்ற கதையும், இரகுவின் கதையும், இரகுவின் மகன் அயன் கதையும், அயன் மகன் தசரத சக்கரவர்த்தியின் கதையும், தசரதன் மகன் இராமன் கதையும், இராமன் மகன் குசன் கதையும் பிறவுஞ் சொல்லப் பட்டிருக்கின்றன.

இந்நூல் பொதுக் காண்டம், சிறப்புக் காண்டம், பொதுச் சிறப்புக் காண்டம் என முப்பிரிவுகளை உடையது. பொதுக் காண்டம் ஆற்றுப்படல முதலாக

இந்துமதி பிறப்பு நீங்கு படலமீருகப் பதினறு படலங்களை உடைத்து. சிறப்புக் காண்டம் தசரதன் சாபமேற்ற படல முதலாக அவதார நீங்கு படலமீருக ஆறுபடலங்களைக் கொண்டு விளங்குகின்றது. பொதுச் சிறப்புக் காண்டம் எனும் பகுதி குசனயோத்தி செல் படல முதலாகக் குலமுறைப் படல மீருக நான்கு படலங்களை யுடையதாகக் காணப்படுகிறது. மேற்கூறிய இருபத்தாறு படலங்களிலும் ஈராயிரத்து நானூற்று முப்பத்துநாலு பாடல்கள் காணப்படுகின்றன. காப்புச் செய்யுள் ஒன்றினையும் பாயிரச் செய்யுள்கள் ஒன்பதினையும் மேற்சுட்டிய பாடற்றொகையுடன் சேர்க்க இந்நூலின் மொத்தப் பாடலெண் ஈராயிரத்து நானூற்று நாற்பத்துநாலு என்பது புலனுகும். ஆயினும் இந்நூலில் மேற்குறித்த எண்ணிலும் அதிகமான பாடல்கள் இருந்திருக்க வேண்டுமெனக் கருதப் பதிப்பாசிரியர் ச.பொன்னம்பலபிள்ளையின் கூற்று இடமளிக்கின்றது. அக்கூற்று வருமாறு, ''இந்நூலில், குலமுறைப் படலத்துக்குப் பின்னுள்ள சரித்திரங்களும் அக்காலத்தில் இவரால் மொழிபெயர்த்துப் பாடப்பட்டன என்பது கர்ணபாரம்பரியம். 'நல்லோரறிவெனும் வாய்மை தன்னுணிலைப்படாவிவன்றன் வெய்யநீர்மையை நிகழ்த்துகிற்பாம்' என்னுங் குலமுறைப் படலத்திறுதிச் செய்யுளானும் அஃதுண்டென்பது துணியப்படும். அகப்பட்ட பிரதிகளொன்றினுங் காணப்படாமையாற் பிற்காலத்திற் சிதைந்தன போலும்'' (முகவுரை, உ).

அரசகேசரியின் இரகுவம்மிசம் சொல்லணி, பொருளணி நிரம்பி அரிதினுணர்தற்பாலனவாகிய சொற்றொடர்கள் பொலியப் பெற்று விளங்குகின்றது. இச்சொற்றொடர்களும் பிரயோகங்களும் நூலாசிரியர் வடநூல்களிலும் எட்டுத்தொகை முதலிய சங்கச்

சான்றோர் செய்யுள்களிலும் சிந்தாமணி, சிலப்பதி காரம், கம்பராமாயணம் முதலிய காவியங்களிலும் மிக்க பரிச்சயமுடையவரென்பதனை வெளிப்படுத்து கின்றன. பாயிரச் செய்யுள்கள் கம்பராமாயணப் பாயிரச் செய்யுள்களின் போக்கிலும் நோக்கிலும் எழுந்துள்ளன. ஆற்றுப் படலம், நாட்டுப்படலம், நகரப்படலம் இவற்றிலமைந்துள்ள செய்யுள்கள் சிலேடைப் பிரயோகங்களுடையனவாய் பல பொரு ளணிகளுக்கிடனாய் ஆன்ற பொருள் பயந்து பொலி கின்றன.

இந்நூலினை நாவலர் பெருமானின் மருகர் நல்லூர் வித்துவசிரோமணி ச.பொன்னம்பலபிள்ளை, யாழ்ப் பாணம், வித்தியாநுபாலன யந்திரசாலையிலே பதிப்பித்து சர்வசித்து வருடம் ஆவணி மாதம் (1887) வெளியிட்டார்.

இந்நூலினை யாழ்ப்பாணத்து மக்கள், ஆசிரியர் மாணாக்கர் பரம்பரையாகக் கற்று வந்துள்ளனர். இரு பாலை நெல்லைநாத பண்டிதர் மாதகல் சிற்றம்பலப் புலவர் முதலியோர் இந்நூலில் வெகு பரிச்சயமுடைய வர்கள். நல்லூர் வித்துவான் சரவணமுத்து முதலி யார் இந்நூலினை முறையாகப் பாடங் கேட்டுப் பின் னர் நூலுக்கோர் பொழிப்புரை எழுதி வந்ததாகக் கூறுவர். பொழிப்புரை முற்றுப்பெறு முன்னரே அவர் மரணத்திரையுள் மறைந்தனர். அரிதுணர்தற்பாலன வாகிய சில கவிகளுக்கும் பல சொற்றொடர்களுக்கும் உரையெழுதி ''இரகுவமிசக் கருப்பொருள்'' என்ற சிறு நூலாகச் சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவர் வெளியிட்டுள்ளார். இவரெழுதிய ''இரகுவமிச சரிதா மிர்தம்'' எனும் வசன நூல் கு.அம்பலவாணபிள்ளை யால் பார்வையிடப்பட்டுச் சுன்னாகம் தனலட்சுமி புத்தகசாலையாரால் வெளியிடப்பட்டது (1930). பின்

ஞலைக் கட்டுவன் வித்துவான் சி.கணேசையர் முதற் பதினறு படலமுடியப் பதவுரை எழுதி வெளி யிட்டுள்ளார். கொக்குவில் சோதிடப் பிரகாச யந்திர சாலையில் ஆநந்த வருடம் தைமாதம் (1915) திக்கு விசயப் படலம் முடியவுள்ள பாடல்களுக்கு அவர் எழு தியவுரை பதிப்பிக்கப்பட்டு வெளி வந்தது. அயனுதயப் படல முதலாக இந்துமதி பிறப்பு நீங்கு படலமீருக வுள்ள அடுத்து வரும் பாடல்களுக்கு எழுதப்பட்ட பதவுரை ஆங்கீரச வருடம் புரட்டாதி மாதம் (1932) அதே அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டு வெளி யிடப்பட்டது.

அரசகேசரி தட்சிண கைலாச புராணத்திற்குச் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார் என யாழ்ப்பாணத் துக் காரைநகர் கார்த்திகேசையர் பதிப்பு மூலம் அறிகிரும்.

## திருச்செல்வர் காவியம்

யாழ்ப்பாணத்துக் காரைதீவிலே கி.பி. பதினேழாம் நூற்ருண்டிலே பூலோகசிங்க முதலியார் எனவும் அருளப்பநாவலர் எனவும் அழைக்கப்படும் புலவர் பிறந்தனர்[13] பார்வளர் விளைவுகள் பல்கிய தொல்குடித் தெல்லியம் பகுதியில் வாழ்ந்தனர். சமயத்தாற் கத்தோலிக்கர். தண்டமிழ்ச் சாத்திர மெல்லாந் தன்னகத்தே கொண்ட வித்தகராகி சத்திய வேதத் தவநெறி பூண்டோர் ஏத்த முத்தியின்பம் முறையினிற் காட்டத் திருச்செல்வர் காவியமியற்றிப் பெரும் புகழ் கொண்டார்.

செல்வினருள் பெருகுதவச் செல்வரராயன்
கதையைத் தேர்ந்து நுண்ணூற்
றுல்லிப மோர்ந்திடும் புலவர் மகிழ்தூங்க
விருத்தத்தாற் சொற்றிட்டானு
னல்லிசை நாடகமியலின்றமிழ் தெரிநாவினன்
சதுரநாகரீகன்
தெல்லிநகரருளப்பன் தென்காரைப் பூலோக
சிங்கன்ருனே.

என்னும் பாவினையுங் காண்க.

சிறந்து விளங்கும் பூமண்டலத்திலே நிறைந்த பல்வளமும் செறிந்து மண்டிய சிந்து தேசத்திலே கி.பி. எட்டாம் நூற்ருண்டிலே செங்கோல் செலுத்திய "அபினேர்" என்னும் அஞ்ஞான அரசனுக்கு மெய்ஞ்

---

13. திருச்செல்வர் அம்மானையின் முகவுரையிலே "இச்சரிதத்தை முற்காலம் காரைக்காலிலிருந்து வந்து தெல்லிப் பழையிற் குடியேறிய ஸ்ரீ பூலோகசிங்க அருளப்பநாவலர் காவிய ரூபமாகச் செய்து வைத்தார்" என்று கூறப்பட்டுள்ளது.

ஞான மைந்தனுய்ப் பிறந்து இளமையிலேயே அற்புத மாய்ச் சத்திய வேதத்திற் சேர்ந்து ஈற்றிலே வனஞ் சென்று தவஞ்செய்து வீட்டின்பமடைந்த ''திருச் செல்வராயன்'' சரித்திரத்தை அர்ச்சியசிட்ட தமசேனு அருளப்பர் கி.பி. 733 ஆம் ஆண்டு எழுதி வைத்தனர். அச்சரித்திரத்தைச் சத்தியவேதகுருமார் மொழி பெயர்த்துக் கொடுக்க அச்சரித்திரம் உண்மையும் மிக உருக்கமும் உள்ளதென மதித்து அதனை ஒரு காவிய மாகப் பாடின் யாவர்க்கும் இன்பமும் பண்பும் பயனு மாயிருக்குமென நினைந்து கல்வி கேள்விகளிற் சிறந்த நாவலரவர்கள் காவியமாக்கினர்.

திருச்செல்வர் காவியம் காப்புச்செய்யுள் ஒன்றி னையும் கடவுள் வாழ்த்துப்பாக்கள் ஆறினையும் அவை யடக்கச் செய்யுள்கள் பதினென்றினையும் பாயிரச் செய்யுள்கள் பதினேழினையும் இருபத்துநான்கு படலங்களில் ஆயிரத்துத் தொளாயிரத்துப்பன்னிரண்டு பாடல்களையும் பெற்று விளங்குகின்றது. எனவே காப்புச் செய்யுளுடன் இந்நூலின் பாடற்றெகை ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து ஏழாகும்.[14] அருளப்பநாவலர் காவிய அமைப்பினைப் பின்பற்றி இந்நூலினை யாத்துள்ளார் என்பதை நூலினை நோக் குவார் தெற்றென உணர்வர். மேலும்,

காவிய மதனைச் செப்பின் கடவுள்வாழ்த்
தவை யடக்கந்
தாவுபா யிரநாடாதி தகுமிகு செயல்கண் மற்றும்

14. பாவலர் சரித்திரதீபக ஆசிரியர் அ. சதாசிவம்பிள்ளை இருபத்தைந்து படலங்களும் ஆயிரத்து தொளாயிரம் பாடல் களும் உடையதாகக் கூறுவர்.

மேவறம் பொருளோ டின்பம் வீடிவை
விளங்கக் கற்ருேர்
நாவிசை சித்தி ரங்க டம்மையு நவிற்று வாரால்''
(அவையடக்கம். 5)

என்னும் பாவினுலும் தம் நூலின் அமைப்பை அவர் கூறியுள்ளார் கம்பனைப் போன்று ஆற்றுப்படலமெனத் தனியொரு படலமமைக்காவிடினும் திருத்தக்கதேவர் போன்று ஆற்றுச் செய்திகளை நாட்டுப்படலத்திலடக்குகின்ருர். சீவக சிந்தாமணியிலும் கம்பராமாயணத்திலும் மிகுந்த பரிச்சயம் உள்ளவராக நாவலர் காணப்படுகிருர். வீதிகாண்படலம் காவியத்தின் திருப்புமையமாக அமைகின்றது எனின் மிகையாகாது. புத்தபிரான் வீதியிற் கண்ட நிகழ்ச்சிகள் ஆத்தும சிந்தனைக்குக் காரணமாயமைந்தமை போன்று திருச்செல்வன் உலக பேதங்களைப் பவனியின் போது கண்டு உலகவியற்கையைப் பற்றிச் சிந்திக்க முனைகிருன். வறலாம் வரவுப் படலம், உபதேசப்படலம், ஞானஸ்நானப்படலம், தர்க்கசாஸ்திரப்படலம் முதலியன கிறித்துசமய போதனையையும் அதன் மாண்பினையும் சுட்டி நிற்கின்றன. மணிமேகலையின் பிறமத கண்டனப் பகுதியைத் தர்க்கசாஸ்திரப்படலம் ஞாபகமூட்டுகின்றது. யேசுநாதரின் வரலாற்றைத் திருவவதாரப்படலம் கூறுகின்றது. அறமுதன் நாற்பொருளும் பயந்துநிற்கும் இக்காப்பியம் தமிழ் இலக்கியங்களுள் முதன்மையானவையோடு வைத்து எண்ணப்படத்தக்கது. சொற்சுவை, பொருட்சுவை செறிந்தது. அணியலங்காரம் மணி மணியாக பொலிந்து கிடக்கும் நாட்டுப் படலத்தில் வரும் பாடல்கள் பேரின்பம் பயப்பன.

ஆடகச் சிலம்பொலி யரவக் கிண்கிணி
பாடகச் சீறடி பரதப் பண்ணுறச்
சூடகக் கரங்களிற் கண்க டோய்தர
நாடகத் தியல்பெற நாறு நாட்டினர்.

(நாட்டுப்படலம். 32)

தாங்கனிந்து மாதரா ரிரப்பமந்தி தாழையின்
றேங்கனிக ளைத்திருப்பி வீழ்த்தவந்து சேர்ந்துராய்
மாங்கனிகள் சிந்திவண் கமுகினெற்றி வாழையின்
றீங்கனி யுகுத்திழிந்து சம்பிரத்திற் சிக்குமே.

(நாட்டுப்படலம். 73)

இந்நூலினைச் சன்மார்க்க போதினிப் பத்திராதிபர், ச.தம்பிமுத்துப்பிள்ளை தமது யாழ்ப்பாணம், அச்சுவேலி ஞானப்பிரகாசயந்திரசாலையிற் பதிப்பித்து 1896ம் ஆண்டில் வெளியிட்டார். இந்நூற் பதிப்புக்காகப் பல பிரதிகளை ஒப்பிட்டுப் பார்வையிட்டவர் கத்தோலிக்க மிசியோன் தமிழ்ப்பண்டிதராகிய நல்லூர் கா. தியாகராசபிள்ளையவர்கள் ஆவார். இப்பதிப்பிற்குச் சோடசாவதான த. அருளப்பமுதலியார், ப த. செய்யப்ப முதலியார், புதுவை வித்துவான் செ. சவராயலு நாயகர் முதலிய பதினேழு அறிஞர் சாற்றுகவி வழங்கியுள்ளனர். இப்பதிப்பு யாழ்ப்பாணம் ''சத்தியவேத பாதுகாவலன்'' பத்திராதிபராகிய வீ.எப். தம்பு அவர்களுடைய சிறப்புப் பாயிரத்தைக் கொண்டு விளங்குகின்றது.

தம்பிமுத்துப்பிள்ளையவர்கள் பதிப்பிற் காப்புச் செய்யுளுக்குப் பதவுரையும் பொழிப்புரையும் காணப்படுகின்றன கடவுள் வாழ்த்து, அவையடக்கம், பாயிரம் ஆகியனவற்றிற்குப் பொழிப்புரை எழுதப் பட்டுள்ளது. தர்க்க சாஸ்திரப்படலத்திற்குப் பதவுரை

உண்டு. மற்றைய படலங்களிலுள்ள பாக்களின் அரும் பதங்கள் சில குறிப்பால் விளக்கப்பட்டுள்ளன.

திருச்செல்வர் காவியத்தைப் பாடிய நாவலர் அவர்கள் திருச்செல்வர் அம்மானையும் பாடியுள்ளார்.[15] காவியத்தின் காப்புச் செய்யுளையே கொண்டிலங்கும் அம்மானை நூலமைப்பிலும் காவியத்தினையே பின்பற்றுகின்றது.

காவியத்தில் வரும் 24 படலங்களும் அம்மானையிற் காணப்படுவன.

காவியத்தில் வரும் கடவுள்வாழ்த்து, அவையடக்கம், பாயிரம் ஆகிய உறுப்புக்களும் அம்மானையில் இடம் பெறுகின்றன. காவியப் பயிற்சியில்லா மக்களுக்காக இவ்வம்மானை பாடப்பட்டது எனத் திருச்செல்வர் அம்மானையை பதிப்பித்தவர் முகவுரையிற் கூறுகிறார். இவ்வம்மானை 1904 ஆம் ஆண்டிற்கு மேல் அச்சிடப்பெற்றதாக அறிகிறோம்.

---

15. தமிழ்ப் புலவரகராதி ஆசிரியர் ந.சி.கந்தையாபிள்ளை, அருளப்ப நாவலர் சந்தியோகுமையூர் அம்மானையும் இயற்றியதாகக் கூறுவர்.

## கஞ்சன் காவியம்

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையிலுள்ள கிழக்கூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் க. முத்துக்குமாரர் என்பவர்[16]. இவர் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இவரைப் போலவே இவருடைய புத்திரர் சுவாமிநாதர் என்பவரும் வல்ல புலவராயிருந்தார் என்பர்.[17] வட்டுக்கோட்டைப் பழைய சாஸ்திரசாலையிலே தமிழாசிரியராக இருந்த சண்முகச்சட்டம்பியார் என்பவர் சுவாமிநாதரின் மகனாவார்.

இவர் பாடிய கஞ்சன் காவியம் அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. கஞ்சன் காவியம் கடவுள் வாழ்த்தில் ஒரு செய்யுள் வருமாறு:

---

16. தமிழ்ப் புலவரகராதியாசிரியர் ந.சி.கந்தையாபிள்ளை வட்டுக்கோட்டை கிழக்கூரினரான க.முத்துக்குமாரரையும் அராலி முத்துக்குமாருப் புலவரையும் ஒருவராகக் கொண்டுள்ளார்; பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் அ.சதாசிவம்பிள்ளை இருவரையும் வேறுவேறாகக் கொண்டு சரிதம் கூறியுள்ளார்; பின்னவர் கூற்றே பொருத்தமுடைத்தாம்.

17. இருபாலைச்சேனாதிராய முதலியார் மு.சுவாமிநாதரிடம் இராமாயணத்துக்குப் பொருள் கேட்டவராமென பாவலர்சரித்திர தீபக ஆசிரியர் கூற நிற்க, (பக் 123, 159) ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதங் கண்ட சி.கணேசையர் க.முத்துக்குமாரரிடம் சேனாதிராய முதலியார் கம்பராமாயணத்துக்குப் பாடங்கேட்டவரெனப் பழைய சரித்திரமொன்று கூறுவதாகச் சுட்டியுள்ளார் (பக். 224).

''வெயிலேறிரத்தினமகுடம்புனைந்து
வியன்மிக்கசென்னியழகார்
மயிலேறியன்பரிதயத்துலாவிவரு
பத்மபாதமறவேன்
குயிலேறுபோகிதருமாதினொடு
குறமாதுதோயும்புயத்
தயிலேறுசெங்கைமுருகாமுகுந்தன்
மருகவரன்புதல்வனே''

இவர் வலைவீசு புராணம் என்றொரு நூலும் பாடியதாக அறிகிறோம். அந்நூலும் அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை.

## இருது சங்கார காவியம்

யாழ்ப்பாணத்துச் சுன்னுகத்திலே வாழ்ந்தவர், முகாந்திரம் தி. சதாசிவ ஐயர் (1950). ஆசிரியராகவும் வித்தியாதரிசியாகவும் பணியாற்றியவர்; யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும் சுன்னுகம் பிராசீன பாடசாலையும் இவரது முயற்சியால் உருப்பெற்றவை. யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் வெளியீடாகிய 'கலாநிதி' யின்[18] ஆசிரியராகவும் இவர் திகழ்ந்தார்.

வடமொழியில் மகாகவி காளிதாசர் இயற்றிய 'இருதுசங்காரம்' என்னும் நூலை அதர்ப்பட மொழி பெயர்த்து யாத்தார் முகாந்திரம் சதாசிவ ஐயர்.

திருந்து சங்கதத் திருதுசங் காரசிங் கார
விருந்து தந்தனன் காளிதா சக்கவி வேந்து
பொருந்து மன்னதைப் புனேகுவன் தமிழ்க்கவி யாக
முருந்து வாணகை பங்கமர் முன்னவ னருளால்.

என்னும் பாயிரச் செய்யுளைக் காண்க.

இருது என்பது பருவ காலம்; சங்காரம் என்பது கூட்டம். எனவே இருதுசங்காரம் என்பது பருவ வருணனைகள் ஒருங்கமைந்த நூல் எனப்பொருள்படுமாறு காண்க. வடமொழிப்புலவர்கள் இருதினை ஆதாரமாகக் கொண்டு நூல்களை வகுப்பர். தென்மொழிப் புலவர்கள் திணையினை ஆதாரமாகக் கொண்டு நூல்

---

18. 1942 சித்திரையில் முதற் கதிர் வெளி வந்தது. இக்கதிரில் ஐயர் வடமொழி சியாமளா தண்டகத்தை மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்த் சாமளா தண்டகக் கலிவெண்பா வெளிவந்தது.

வகுப்பர். வடமொழியாளர் பருவத்தை மேற்கொண்டு அகப்பொருளினை விரிக்க தென்மொழியாளர் நிலத்தினை மேற்கொண்டு அகப்பொருள் விரித்தனர்.

இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்ற ஆறு இருதுகளையும் வருணிக்கு முகத்தான் அகப்பொருள் தொனிக்க வைத்துள்ளார் காளிதாசர். ஒவ்வோர் இருது வருணனையிலும் காதலன் ஒருவனோ கவிதானோ தன் காதலியை விளித்துச் சொல்வதாக அமைந்த பாக்கள் வந்துள. பருவவருணனை ஈறுதோறும் வருணனை செய்யப்பட்ட இருது காதலிக்கு எல்லா நலன்களையும் நல்குகவென வாழ்த்தும் ஒரு வாழ்த்துச்செய்யுள் காணப்படும். சிருங்காரரசம் பொருந்திய இந்நூலைச் சதாசிவ ஐயர் அவர்களும் தமது மொழிபெயர்ப்பில் முதனூலில் அமைந்த அமைந்தவாறே யாத்துக்காட்டியுள்ளார்.

''ஆரி யத்தின மைந்தவிக் காவியஞ்
சீரி யற்றமிழ்ச் செல்வருந் தேர்கென
நேரி யன்ற தமிழ்க்கவி நேர்ந்தனன்
நாரி யன்ற சதாசிவ நாமனே''

என்னும் பாயிரச்செய்யுளான் இஃது புலப்படுகின்றது.

சதாசிவ ஐயருடைய நூல் இரு பாயிரச் செய்யுள்களையும் ஆறு சருக்கங்களில் நூற்று நாற்பத்து நாலு செய்யுள்களையும் உடையதாகும்.

காவியம் எனப்பெயர் தாங்கி இந்நூல் காணப்படினும் இதனைக் காவியம் எனல் பொருந்தாது. பருவகாலங்களிற் காணும் காட்சிகளின் வருணனையாக அமையுமிந்நூல் பாவிகமின்றி, சிறந்த காவியப்பண்புகள் எனக் கொள்ளப்படுவன பலவின்றி அமைந்துள்ளது. ஆயினும் சதாசிவ ஐயரவர்கள் நயமிக்க பாடல்கள் மூலம் காளிதாசரின் செவ்விய பொருளை எடுத்துக்காட்டியுள்ளார்.

பஞ்சி தோய்ந்ததி செம்மைய பைம்பொனின்
மிளிரும்
அஞ்சி லம்பின அவனியிற் படும்படும் தோறும்
அஞ்ச மென்னவே யரற்றுவ வாயசிற் றடியால்
வஞ்சி யன்னவர் காளையர் மனத்துமால்
வளர்ப்பார்.

(முதுவேனிற் பருவவருணனை. 5)

இந்நூலினை எஸ்.முத்துக்குமாரசுவாமி ஐயர் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்திற் குறிப்புரையுடன் 1950 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

சதாசிவ ஐயர் ஏனைய நூல்கள் சிலவற்றின் ஆசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் காணப்படுகின்ருர். சங்கதமொழியிலமைந்த மூன்று நூல்களுக்கு இவரெழுதிய தமிழுரையையும் தமிழ் மொழிபெயர்ப்புச் செய்யுள்களையும் சென்னை பி.ஜி.பால் அண்டு கம்பெனியார் 'தேவி தோத்திர மஞ்சரி' என்ற தலைப்பில் 1938 ஆம் ஆண்டு வெளியிட்டனர். யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டு 1950 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'தேவி மானசபூசையந்தாதி' யென்பது மொழிபெயர்ப்புச் செய்யுள்களையும் சுயமாக வியற்றிய செய்யுள்களையும் உடையதாகும். இவர் ''பெருமாக்கடவைப் பிள்ளையார் இரட்டைமணிமாலை'' இயற்றியதாகவுமறிகிருேம். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்திற்காக ஐங்குறுநூறு மூலமும் உரையும் (1943) கரவைவேலன் கோவை மூலமும் அரும்பதவுரையும் (1935) ஆகியவற்றைப் பதிப்பித்துள்ளார். மட்டக்களப்பில் வழங்கிவரும் வசந்தன் கவிகளைத், திரட்டி 'மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு எனப்பதிப்பித்துள்ளார் (1940).

## மாணிக்க கங்கைக் காவியம்

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர், மட்டக் களப்புப் பகுதியிலுள்ள செட்டிபாளையத்தைப் பிறப் பிடமாகக் கொண்ட இ.வ.கணபதிப்பிள்ளைப் புலவர். நாட்டு வைத்தியத்திலும் சோதிடத்திலும் ஈடுபாடு மிக்கவர்.

''திருமருவுசிவனு மரியயனு முமையவளும்
திரிபதகை சீதேவி சிவையும் பாரதியும்
உருமருவு குகனும் வாசவனுமாதங்கி
உம்பரொடு பன்னிருவர் பாதமலர்போற்றி
மருமருவுகதிர்காம மாணிக்கக் கங்கைமேல்
மதுரமுறு காவியம் பாட என்னுவில்
கருமருவு வடிவமொடு நடமாடு ஐங்கரக்
கடவுளடி ஒருபொழுதுங் கனவில் மறவேனே.''

என விநாயகப்பெருமானை வேண்டி இச்சிறுநூலைப் பாடத்தொடங்குகிறார் புலவர். ஈற்றிலே,

''ஏழுத லைமுறையிதைப் பாடினோர் வாழ்க
என்றென்றும் மாணிக்கக் கங்கை வாழியதே''

என முடியும் வாழிப்பாடலுடன் நூல் முடிகின்றது. ஆதிச்செய்யுளுக்கும் அந்தச் செய்யுளுக்குமிடையிற் பதினாறு செய்யுள்கள் காணப்படுகின்றன. இச்செய்யுள் கள் மாணிக்க கங்கையைப் பெருகிவரவேண்டும் என அழைக்கு முகமாய்ப் பாடப்பட்டுள்ளன.

மாணிக்க கங்கையென மதியாமல் மானிடர்கள்
வாயெச்சில் கக்கியே துப்புவதினாலோ
காணிக்கை கட்டியே போற்றாததாலோ
கர்மவினை மக்கள் வந்தாடுவதினாலோ

நாணிக்கையில்லாமல் ஆடவர்கள் கூடி
நாரியர்களோடு நின் ருடுவதிலுலோ
பாணிக்கு எக்குற்றமெல்லாம் பொறுத்துப்
பவனிவா மாணிக்கக் கங்கைமாதாவே. (5)

என்ற செய்யுளை உதாரணமாகக் காட்டலாம்.

இச்சிறுநூலை ஆசிரியர் தாமே 'காவியம்' என அழைத்த போதும் நாம் காவியம் என்று கூறமுடியாமலிருக்கின்றது. காவியப்பண்பு எதுவுமில்லாமற் காணப்படுகின்றது இந்நூல். பள்ளுப்பிரபந்தங்களிற் காணப்படும் ஆற்று வரவுப்பாடல்களை இப்பாடல்கள் ஞாபகமூட்டும்.

இச்சிறுநூல் 195J ம் ஆண்டு வெளிவந்தது.

கணபதிப்பிள்ளைப்புலவர் கதிர்காமத்தம்மானை, கதிர்காமசதகம், சங்கமாங்கண்டிப்பதிகம் முதலிய பிற நூல்களையும் இயற்றியுள்ளாரென அறிகிறோம்.

# 3. புராணங்கள்

காப்பிய வரிசையிற் புராணங்களையுஞ் சேர்த்துக் கூறும் வழக்குண்டு. சிதம்பரப்பாட்டியலுடையார்,

> "அறையுமிதிற் சிலகுறைபா டெனினுங் குன்று
> தறம்பொருளின் பம்வீட்டிற் குறைபா டாகப்
> பெறுவதுகாப் பியமாகும் புராண மாகும்"
> (மரபியல். 16)

என்னுங் கூற்று மூலம் காப்பியத்தையும் புராணத்தையும் ஒரே வகையாகக் கொண்டார் என்பது பெறப்படுகின்றது. தொன்னூல் விளக்கமுடையார்,

> "பொருட்டொடர் நிலையே புகலிற் காப்பியம்
> பெருங்காப் பியமெனப் பிரிவிரண் டவற்றுட்
> காப்பிய மறமுத னன்கிற் குறைநவும்
> புராணம் பற்கதை புனைநவு மென்ப"
> (செய்யுள் மரபியல். 5)

என்று 'காப்பியந்தானே பல கதைகளை விளக்கிவரிற் புராணமெனப்படும்' எனக் கருதினர். பெரிய புராணத்தையுங் கந்தபுராணத்தையுங் காவிய வரிசையில் வைத்து இலக்கிய வரலாற்றாசிரியர் சிலர் கூறுவதுங் காண்க. ஆயினுஞ் சங்கதத்திலே புராணத்தினைத் தனிப்பிரிவாகவே கொள்வர். சங்கதத்திலுள்ள இலக்

கிய வடிவத்தை நோக்கியெழுந்த தமிழ்ப் புராணத்தையும் நாம் தனியாக நோக்குவதே பொருத்தமாகும். சில புராணங்களிற் காவியப் பண்புகள் சில காணப்படினும் அவற்றின் உருவம் வேறு; அவை தரும் அனுபவம் வேறு.

புராணம் என்ற சொல் பழைமை யென்னும் பொருள் பயப்பதாகும். சிவபுராணம் என்பதற்கு 'சிவனது அநாதி முறைமையான பழைமை' என்று பொருள் கூறப்படுவதைக் காண்க. தொன்மை, தோல் என்னும் வனப்புகளும் பழைமையோடு தொடர்புடையன. ஆயினும் அவ்வனப்புகளுக்குரிய நூல்கள் யாவை என அறிய முடியாத நிலையில், நாம் புராணத்தின் ஆரம்பகட்டத்தைச் சங்கதமொழியின் புராணநெறியுடன்தான் தொடர்புபடுத்தி நோக்க வேண்டியிருக்கிறது.

புராண இலக்கணம் பாட்டியல் நூல்களில் விரித்துரைக்கப்படவில்லை. வெண்பாப் பாட்டியல்,

'குலவரவு காரிகை யாப்பிற் புராணமே யாம்'
(செய்யுளியல். 43)

என்று கூறுவதோடு அமைதி காண்கின்றது "குலவரவு முதலாயினவற்றை என்றதனுல் உலகத்தோற்ற ஒடுக்கங்களும், மனுவந்தரமும், முனிவர் வரலாறும், அரசர் மரபும், அவர் சரிதமும் கொள்க" என்று அதனை விளக்குவர் உரைகாரர். இவர்கள் கூறுவது சங்கதநூலார் கூற்றுக்கும். 'புராணம் பஞ்சலக்ஷணம்' என்பது அமரம். பஞ்சலஷணம் சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், மந்வந்தரம், வம்சானுசரிதம் என்பனவாம். சர்க்கம் என்பது உலகத்தின் தோற்றம்; பிரதிசர்க்கம் உயிர்த்தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் குறிக்கும்; வம்சம் மன்னர் பரம்பரையைக் கூறுவது; மந்வந்

தரம் காலவரையறையினையும் மநுக்களது ஆட்சிக் காலங்களையும் கூறுவது; வம்சாநுசரிதம் மன்னர் பரம்பரையோடு தொடர்புடைய கிளைக் கதைகளைக் கூறுவது. இப்பஞ்சலஷணம் மத்ஸ்ய புராணம், அக்கினி புராணம், பாகவத புராணம் முதலிய பதினெண் புராணங்களிலேயே காணப்படுவதாகக் கூறுவர். பதினெண்புராணங்களையே முதலிற் குறித்த புராணமென்பது பிற்பட்ட காலங்களிற் பொருள் விரிந்து பத்தர்கள் சரித்திரம், தலமகிமை முதலியவற்றின் சரித்திரமெல்லாம் அடங்கிய வரலாற்று நூலினைக் குறிப்பதாக முடிந்தது. தமிழகத்திற் புராணம் இலக்கிய வடிவமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போது மேற்கூறிய பொருள் விரிந்த நிலையிலேயே அது இருந்தது. தமிழகத்திற் புராணம் என்பது இலக்கணத்தையும் சுட்டப் பயன்பட்டது. மாபுராணம், பூதபுராணம் என்பன இலக்கண நூல்களாம். சங்கதத்திலும் அக்கினி புராணத்தில் ஒரு பகுதியில் அணி இலக்கணம் அமைக்கப் பட்டிருப்பதாகக் கூறுவர். ஆயினும் அக்கினிபுராணம் முழுவதும் இலக்கணத்தைப் பொருளாகவுடையதன்று.

கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப் படை முதலிய பண்டைய இலக்கியங்களிற் புராண இதிகாசங்களிலிடம்பெறும் செய்திகள் சில காணப் படுகின்றன. இவற்றைத் தொடர்ந்து வெளிவந்த பத்தியிலக்கியங்களிற் புராணக் கதைகள் பல இடம் பெறுகின்றன. தாம் வணங்கும் தெய்வத்தின் மகத்துவத்தையும் அருளையும் புலப்படுத்த அடியார்கள் புராணக் கதைகளைப் பயன்படுத்தினார்கள். சைவரும் வைணவரும் புராணக் கதைகள் மூலம் மதப் பிரசாரஞ் செய்ததைக் கண்ட சமணரும் பௌத்தரும் தாமும் கதைகள் மூலம் மதப் பிரசாரஞ் செய்ய முற்பட்டனர். பெருங்கதை, சீவகசிந்தாமணி, குண்டல

கேசி முதலிய பேரிலக்கியங்கள் தோன்றின. பேரிலக்கியங்களின் செல்வாக்கு ஓங்கிய சோழர்காலப் பிரிவிலே தமிழிற் புராணங்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. கன்னிவன புராணம், அஷ்டதச புராணம் ஆகியன முதற் குலோத்துங்க சோழன் காலத்திற்ருேன்றின. இவற்றின் தன்மை தெரியவில்லை. பெரியபுராணம், கந்தபுராணம், கோயிற்புராணம் முதலியன சோழப்பெருமன்னர் ஆட்சிக்காலத்தின் கடைக்கூற்றில் எழுந்தவை யென்பர். பதினுன்காம் நூற்ருண்டு முதலாகப் புராணங்கள் பெருமளவிற் தோன்றின என்று கொள்ள இடமுண்டு. சங்கதத்திலுள்ள பதினெண் புராணங்களின் மொழிபெயர்ப்பும் தலபுராண ஆக்கமும் பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதிவரை புலவர்களின் கவனத்தை ஈர்ந்த தொழில்களாம்.

ஈழத்திலுள்ள திரிகோணமலை, நகுலகிரி, சுரைசையம்பதி, கதிர்காமம், திருக்கேதீச்சுரம் முதலிய தலங்கள்பற்றிப் புராணங்கள் பாடியுள்ளனர், ஈழத்துப்புலவர். சயவீரசிங்கையாரியச் சக்கரவர்த்தியாகிய ஐந்தாம் செகராச சேகரன் காலத்திலெழுந்த தட்சிண கைலாசபுராணமே இன்று கிடைக்கும் ஈழத்துப் புராணங்களில் முன்தோன்றியதாகும்; இது திரிகோணமலையிற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கோணேசப்பெருமானையும் மாதுமையம்மையாரையும் போற்றும் தலபுராணமாகும். திரிகோணமலையின் தலமாண்பினை எடுத்துரைக்கும் பிறிதொரு புராணமாகிய திரிகோணசல புராணம் மா.முத்துக்குமாருப்புலவரால் இயற்றப்பட்டதாகும். நகுலகிரி பற்றிய இரு தலபுராணங்களுளொன்ருகிய நகுலாசலபுராணம் மாதகல் சு.ஏரம்பையரால் இயற்றப்பட்டது; கா.அப்பாசாமிஐயர் மற்ருென்ரும் நகுலகிரிபுராணத்தைத் தந்

தார்.[1] திருக்கரைசைப்புராணம் இயற்றிய புலவருடைய பெயர் தெரியவில்லை; காலமும் அறியமுடியவில்லை. வதிரி சி.நாகலிங்கபிள்ளை கதிர்காம புராணத்தை அளித்தார். திருக்கேதீச்சுரப் புராணம் பண்டிதர் ச.இராமச்சந்திரனவர்களால் ஆக்கப்பட்டதாகும். வட்டுக்கோட்டை நா.சிவசுப்பிரமணிய சிவாசாரியர், நல்லூர் கைலாசநாதர் பேரில் ஒரு புராணம் பாடியுள்ளார் என்று கூறுவர்.

ஈழத்துப் புலவர்கள் ஈழத்துத் தலங்கள் பற்றித் தலபுராணங்கள் பாடுவதோடமைந்துவிடவில்லை; தமிழகத்திலுள்ள தலங்கள் பற்றியும் புராணங்கள் பாடியுள்ளனர் கணேச பண்டிதர் பாடிய இளசைப்புராணம், கோப்பாய் சபாபதி நாவலர் இயற்றிய சிதம்பரசபா நாதபுராணம், நீர்வேலி ச. சிவப்பிரகாச பண்டிதர் படைத்த திருக்கழிப்பாலைப்புராணம், பன்னாலை ச.சிவானந்தையர் தந்த புலியூர்ப்புராணம் முதலியன தமிழகத்துத் தலங்களைப் போற்றுவனவேயாம். ஆறுமுகநாவலரவர்களும் நாட்டுக் கோட்டைச்செட்டிகள் சிலருடைய வேண்டுகோளின்படி தேவகோட்டைத் தலபுராணம் ஒன்றினை ஐந்நூறு செய்யுள்வரை பாடினரென்று தாம் கேள்விப்பட்டதாகப் பாவலர் சரித்திர தீபகத்தின் ஆசிரியர் கூறியுள்ளார்.[2] வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியார் தென்கோயிற் புராணம் எனவொரு புராணம் பாடியதாகச் சிலர் கூறுவர்: அந்நூல் வெளிவந்தாகத் தெரியவில்லை. வதிரி சி. நாகலிங்கபிள்ளையவர்களும் தமிழகத்துத் தலங்கள் சிலவற்றின்மேல் புராணங்கள் பாடியதாகப் பகர்வர்.

---

1. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், பக் 266, 505.

2. பாவலர் சரித்திர தீபகம் (1886) பக் 34.

தலங்களைப் பாடிய ஈழத்துப்புலவர் விரதங்களின் மாண்பினை எடுத்துரைக்கவும் புராண வகையைப் பயன்படுத்தியுள்ளனர். சுன்னாகம் அ. வரதபண்டிதர் சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் என்பனவற்றைப் பாடினார்; வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் கந்தசட்டிப்புராணம், ஏகாதசி புராணம், விநாயகசட்டிப்புராணம் ஆகியனவற்றை ஆக்கினார்; மட்டக்களப்பு ச.பூபாலபிள்ளை சோமவாரத்தின் மாண்பினைக் கூறுமுகமாகச் சீமந்தனி புராணம் இயற்றினார்.

ஈழத்துப் புலவர் தெய்வ பத்தியை வளர்க்கும் பொருட்டு பத்தர்களுடைய சரிதங்களையும் புராணமாகப் பாடமுற்பட்டனர். அளவெட்டியைப் பிறந்தகமாகக் கொண்ட வைத்தியநாத தம்பிரான் வியாக்கிரபாத முனிவரின் வரலாற்றைத் தமிழிற் புராணமாகப் பாடினர் என்பர், பாவலர் சரித்திர தீபக வாசிரியர்.வட்டுக்கோட்டை மு.ஆறுமுகம்பிள்ளை சிறுத்தொண்ட நாயனார் புராணமெனச் செய்யுளாலும் வசனத்தாலும் ஒரு புராணம் இயற்றியுள்ளார்.

கிறித்தவர்களும் ஈழத்திலே புராணவகையைப் பயன்படுத்தியுள்ளனர். யோசேப்புப்புராணம், திருவாக்குப்புராணம், ஞானாநந்தபுராணம் ஆகியன கிறித்தவத்தின் மாண்பினை எடுத்துரைக்கும் புராணங்களாம்.

புராணம் என்ற வகை அங்கதப்பான்மையிலும் நகைச்சுவைப் பொருளிலும் ஈழத்துப் புலவர்களாற் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏழாலை வாசராகிய சுப்பையா பாடிய கனகி புராணம் முற்றும் கிடையாத நிலையிலுள்ளபோதும் கிடைக்கும் பாடல்களை நோக்கின் அதனை அங்கதத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்

காட்டாகக் கொள்ளமுடியும். தாலபுராணம், கேலிப் பாடலாகவும் இருக்கலாம் என்று பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் கருதுகிறார். கோட்டுப்புராணம் இழித்தும், பழித்தும் இயற்றப்பட்டதெனப் பாவலர் சரித்திர தீபகம் கூறுகின்றது. வலைவீசு புராணமும் சூது புராணமும் எத்தன்மையுடையனவென்று கூறமுடியவில்லை.

சாதிநிர்ணய புராணத்தில் வல்வை ச.வயித்திய லிங்கபிள்ளை பல்வேறு சாதிப்பிரிவுகளின் நிர்ணயத்திலீடுபடுகிறார் பூதபுராணம், மாபுராணம் ஆகியன வற்றை எவ்வாறு புராணமென்று கொள்ளமுடியாதோ அதே போன்று சாதிநிர்ணய புராணத்தையும் புராணமெனல் பொருந்தாது.

புராணங்கள் என்ற தலைப்பில் ஈழத்திலெழுந்த இருபது புராணங்கள் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன வியாக்கிரபாதபுராணம், யோசேப்புப் புராணம், தாலபுராணம், சூதுபுராணம், கோட்டுப்புராணம், கனகிபுராணம் ஆகியன பற்றிய முழுச் செய்திகளையும் அறியமுடியாத நிலையிலுள்ளோம். கனகிபுராணத்திற்குரியனவாகச் செய்யுள்கள் பல இன்று தெரியவரினும் நூல் முழு உருவத்திற் கிடைக்கவில்லை. சூது புராணம் பற்றி யாதும் கூறமுடியாத நிலையில் இருக்கிறோம். தாலபுராணத்திற்குரியனவாகச் சில செய்யுள்கள் கிடைத்தன, அவற்றையும் ஈண்டு தந்துள்ளோம். கோட்டுப் புராணத்திற்குரியதாக மேலும் இரு செய்யுள்கள் இங்கு இடம்பெறுவதைக் காணலாம்.

இப்பகுதியில் விதந்துகூறப்படாத சில புராணங்களுமுள. வட்டுக்கோட்டை கிழக்கூரினரான க.முத்

துக்குமாரர் வலைவீசுபுராணம்' இயற்றியதாகக் கூறப் படுகின்றது; இதனைப்பற்றி யாதொரு செய்தியும் அறியமுடியவில்லை வல்லுவெட்டித்துறை நா.ஏகாம் பரம் ''புரூரவச்சக்கரவர்த்தி புராணம் என்னும் நூலோடு பல தனிப்பாக்களையும் பாடினராம். புரா ணம் பாடினர் என்ற மட்டிலே அதைப்பாட நினைத் தாரோ, தொடங்கினரோ, முடித்தாரோ அறியேம்.'' என்று பாவலர் சரித்திர தீபகவாசிரியர்[3] கூறுகின் றார். ஆறுமுகநாவலர் பாடத்தொடங்கிய தேவ கோட்டைப்புராணம் பற்றிப் பாவலர் சரித்திரதீபகம் ஒழிய வேறு நூல்கள் யாதும் கூறவில்லை. வட்டுக் கோட்டை நா.சிவசுப்பிரமணிய சிவாசாரியர் இயற் றியனவாகக் கூறப்படும் தென்கோயிற் புராணம், விநாயகசட்டிப்புராணம், நல்லூர் கைலாசநாதர் புராணம் முதலியன வெளிவரவில்லை. நகுலகிரி பற்றி யெழுந்த இரு புராணங்களின் தன்மையோ, அவை வெளிவந்த செய்தியோ தெரியவில்லை. வதிரி சி.நாக லிங்கபிள்ளை இயற்றியனவாகக் கூறப்படும் திருவைகற் புராணம், திருத்திலதைப்பதிப் புராணம், ஆகியன வும் வட்டுக்கோட்டை நா.சிவசுப்பிரமணிய சிவாசா ரியர் இயற்றிய ஏகாதசி புராணமும் அச்சுவாகனம் ஏறியபோதும் கிடைக்குமாறில்லை. இந்தியாவிலே பிறந்து யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவராகக் கருதப் படும் பதுறுத்தீன் புலவர் பாடிய முகியித்தீன் புராணம் அச்சிடப்பட்டுள்ளபோதும் கிடைக்கு மாறில்லை.

---

3. பக் 57

## தட்சிண கைலாச புராணம்

தட்சிண கைலாச புராணத்தினை ஆரியச்சக்கர வர்த்திகளிலொருவரான சயவீரசிங்கையாரியன் (செகராசசேகரன் V) என்பவர் இயற்றினர் என்று கொள்ள இடமுண்டு கா.சிவசிதம்பரஐயரவர்களின் தட்சிண கைலாச புராணப் பதிப்பிலே "இஃது யாழ்ப்பாணத்து மஹாவித்துவான் சிங்கைச் செகராசசேகரன் இயற்றியது" என்று கூறப்பட்டுள்ளது. இதன் பின்பு வெளிவந்த பு.பொ.வைத்தியலிங்க தேசிகரவர்களின் தட்சிணகைலாசபுராணப் பதிப்பிலே "பிரமஸ்ரீ பண்டித ராசரருளிச் செய்த ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம்" என்று உரைக்கப்பட்டுள்ளது. வைத்தியலிங்க தேசிகரின் பதிப்பினைத் தொடர்ந்து மாதங்கள் சில கழிந்த பின் வெளியிடப்பட்ட தமிழ்ப்புலவர் சரித்திரத்திலே சுன்னகம் அ.குமார சுவாமிப்புலவர் 'செகராசசேகரமன்னரவர்' "செய்வித்த நூல்கள் செகராசசேகரமாலை முதலியன. செய்த நூல்கள் தக்கிண கைலாச புராணம் முதலியன" என்று கூறியுள்ளார்.[1] வைத்தியலிங்க தேசிகரவர்களின் பதிப்புக்குச் சாற்றுகவி வழங்கியவரும் சுன்னகம் அ.குமாரசுவாமிப்புலவ

---

1. தமிழ்ப்புலவர் சரித்திரம் கொக்குவில் சோதிடப் பிரகாச யந்திரசாலை (நளவருடம் கார்த்திகை மாதம்) பக் 97, புலவரவர்களின் புதல்வர் கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை 1951 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணம் சைவப் பிரகாச யந்திரசாலையிற் பதிப்பித்து வெளியிட்ட இரண்டாம் பதிப்பிலே "செய்வித்த நூல்கள் செகராசசேகரமாலை, தக்கிணகைலாச புராணம் முதலியன. இவையிரண்டும் முறையே சோமைய ராலும் பண்டிதராசராலும் இயற்றப்பட்டன" என்று வரையப்பட்டுள்ளது (பக். 151); மேலும் 'பண்டிதராசர்' பற்றித் தனியே கூறும் பகுதியும் இரண்டாம் பதிப்பிலே இடம் பெறுகின்றது (பக் 206).

ரின் மாணுக்கரில் ஒருவருமான புன்ஞலேக் கட்டுவன் சி.கணேசையர் தமது ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதத்திலே தட்சிணகைலாச புராண ஆசிரியர் பண்டி தராசரெனவேயுரைத்தார்.[2] இத்தகைய கருத்து மாறு பாட்டைக்கண்ட ந.சி.கந்தையாபிள்ளை 'செகராச சேகரமன்னர்' 'தக்கண கைலாச புராணம்' இயற்றி ஞர் என்று கொண்டபோதும் ''பண்டிதராசர் இயற் றிய பிறிதோர் தக்கண கைலாச புராணமுமுண்டு'' என்றுங் கூறியுள்ளார்.[3]

சிவசிதம்பரஐயரது பதிப்பினையும் வைத்தியலிங்க தேசிகரது பதிப்பினையும் நோக்குவார் அவை ஒரே நூலின் இரு பதிப்புகள் என்பதைத்தெற்றென உணர் வர். எனவே இரண்டு தட்சிணகைலாச புராணங் களுள என்ற கூற்று ஆராயப்பட வேண்டியதில்லை.[4]

நூலாசிரியர் யாரென்பதை நாம் ஆராயவேண் டியுள்ளது. சிவசிதம்பரஐயர் பதிப்பிலே அரசகேசரி பாடியதாக மேல்வருஞ் சிறப்புப் பாயிரம் காணப்படு கின்றது.

---

2. கலைக்களஞ்சியம்: 'செகராசசேகரமன்னர்' என்ற தலைப்பில் ''இவர் பாடிய நூல் தக்கண கைலாச புராணம்'' என்றும், 'திருக்கோணமலை' என்ற தலைப்பில் ''ஈழத்து மன்னன் செக ராசசேகரனுல் பண்டிதராஜர் என்னும் மகாகவியைக் கொண்டு இயற்றுவிக்கப்பட்ட தக்கிணகைலாச புராணம்'' என்றும் கூறுகின்றது.

3. தமிழ்ப் புலவர் அகராதி (இரண்டாம் பதிப்பு, 1960) பக். 192

4. 'திரிகோணுசல புராணம்' இயற்றியவர் திரிகோணமலை முத் துக்குமாரப் புலவர் என்ற செய்தி ஈண்டு குறிப்பிடத்தக்கது (ஈழமண்டலப் புலவர் சரித்திரம், 1922: பக். 11).

மணிநிறக்கண்டன் மாண்புறுகயிலேயி
னணிநிறக்கொடுமுடியாயிரத்தோர்முடி
படவரவொதுங்கப்பறித்தருமிலங்கை
வடகடனடுவண் மாதிரமதிப்ப
வருமுக்கோணமலைதென்கயிலை
பரனருளுருத்திரர்பதினொருபேரு
மொருபதுமுகுந்தருமொன்பதுவிரிஞ்சரும்
வருகடற்கடகம்வழங்கியமீனமுந்
திருமலைதழுவியதெசமுகநிருதனும்
பெருமதமலைகரிப்புரவலர்பலரும்
பூசையோடிறைஞ்சியபுராணநூற்கதையை
ஆசறுதமிழிலறைகுதியென்றன
னருமறையுபநிடமாகச்சோதிடம்
விரிகலைபலவும்விளங்கியகுரவன்
சேயினுந்திறல்வான்சிவநெறித்தவனுளான்
முனினுமினியான்றயாநிதியனையான்
முப்புரிநூற்பயன்மூரியதாமன்
செப்பருஞ்சைவராசபண்டிதன்
அந்தாதித்தொடையடிகொடுதொடுத்து
நந்தாவிருத்தநவையறக்கூறின
னன்னுடைந்தநாரியர்கோமான்
பொன்னுடைந்தபொருவருகாதலன்
மருவலர்தங்களைவானிலத்திருத்திப்
பொருவருபுவியையொருகுடைபுரப்போன்
றென்னிலங்காபுரிதிசைதொறுமருவு
மின்னிலங்கியவேல்மேலாம்புயத்து
பரவாமுடித்தபார்முழுதாண்ட
விடலாண்வயமாவிளங்கியகொடியான்
சிங்காசாரியன்சேதுகாவலன்
கங்கைநாடன்கற்றவர்திலகன்
ஆயுண்மறையுடனரியசோதிடம்
பாய்திரைக்கடலுட்பலவுமுணர்ந்தோன்

ஒப்பிலாமுத்தமிழோர்ந்த
செப்பருஞ்செகராசசேகரனே.

சைவராச பண்டிதன் வேண்டியவாறு செகராசசேகரன் அதர்ப்பட யாத்ததாக இப்பாயிரம் கூறுகின்றது. அரசகேசரியின் சிறப்புப்பாயிரத்தின்கீழ்வரும் மேல் வருஞ் செய்யுளும் செகராசசேகரன் இயற்றியதாகவே கூறுகின்றது.

தேவரும்புகழ்செகராசசேகரக்
காவலன்கருணையிற்கடவுண்மாநதி
மாவுறைதென்கயிலாயமான்மியம்
பாவியறமிழிற்பகர்ந்திட்டானரோ.

அரசகேசரி பாடியதாகச் சிவசிதம்பரஐயர் பதிப்பிற் காட்டப்பட்ட ஆசிரியப்பா மாற்றங்களுடன் கவிவீரராகவர் இயற்றியதாக வைத்தியலிங்க தேசிகர் பதிப்பில் இடம்பெறுகின்றது.

மணிநிறக்கண்டன்வடபெருங்கயிலையின்
அணிநிறக்கொடுமுடியாயிரத்தொருமுடி
படவராவொதுக்கப்பறித்திணிதிலங்கை
வடகடனடுவண்மாருதம்பதிப்ப
வருமுக்கோணமலைதென்கயிலைப்
பரமர்க்குருத்திரர்பதினொருபேரும்
ஒருபதுமுகுந்தருமொன்பதுவிரிஞ்சரும்
வருகடற்கமடம்வழங்கியமீனமும்
திருமலைதழுவியதெசமுகநிருதனும்
பொருமலைமதகரிப்புரவலர்பலரும்
பூசையொடிறைஞ்சியபுராணநூற்கதையைத்
தேசிகன்சொற்படிதென்கலைப்படுத்தி
யந்தாதித்தொடையடைவொடுதொடுத்து
நந்தாவிருத்தநவையறக்கூறினன்
அந்நாட்டரசன்ஆரியர்கோமான்

பொன்னூட்டைந்தருபொருவருகாதலன்
மறுநிலநிருபரைவானிலத்திருத்தி
யுறுநிலமுழுவதுமொருதனிபுரப்போன்
றென்னிலங்காபுரித்திசைதொறுமருவும்
மின்னிலங்கியவேல்மேவலர்புயத்துப்
படவராமுடித்தலைப்பார்முழுதாண்ட
இடபவான்கொடியெழுதியபெருமான்
சிங்கையாதிபன்சேதுகாவலன்
கங்கைநாயகன்கருங்கடற்சேர்ப்பன்
பௌவமேற்றுயில்பராபரன்சூட்டிய
தெய்வமாமுடிச்செராசசேகரன்
அவனதுகாலத்தத்திரிகோணைச்
சிவனதுகோயிற்சிவமறைமுதலோன்
அருமறையுபநிடமாகமஞ்சேர்திடம்
விரிதமிழ்வரையறவிளங்கியகுரவோன்
சேயினுந்திறலான்சிவநெறிதவமுன்
தாயினுநல்லான்றயாநிதியனையான்
முப்பரிநூற்புயன்முளரியந்தாமன்
செப்பரும்பண்டிதராசசிகாமணி
என்னுநாமத்தெங்குருபெருமான்
மன்னுநாற்கவியும்வல்லநாவலனே.

இப்பாயிரம் கவிவீரராகவர் இயற்றியதாக மேல்வரும் வெண்பா கூறுகின்றது.

காஞ்சித் தலத்துக் கவிவீர ராகவனூல்
ஆஞ்சித் தலையென் றளவிட்டோன்-வாஞ்சித்துச்
சேயுயர் முக்கோணச் சிவகதைசெய் தான்விளங்கப்
பாயிரமிங் கோதினனிப் பால்.

கவிராசர் சொன்ன கவியெனப் பிறிதொரு செய்யுள் வைத்தியலிங்க தேசிகர் பதிப்பிலே காணப்படுகின்றது.

நடிக்கும்பரதமியலிசைநாடகநாற்கவிதை
நொடிக்குமுன்பாடப்ரபந்தங்கணிதநன்னூல்சிவ
நூல்
படிக்கநிகழ்த்தப்புராணுகமஞ்சொல்பரம்பரை
யாய்வடிக்குந்தமிழ்வல்லபண்டிதராசன்வரவித்
தையே.

மேல்வருஞ் செய்யுளும் நூலாசிரியர் "பண்டிதவிராசன்" என்று கூறுகின்றது:

திருக்கிளருமச்சகேச்சுரபுராணஞ்செந்தமிழாலெல்
லோருந்தெளியத்தானே
பெருக்கமுடன்கைலாசபுராணமென்னப்பேருமிட்
டுச்சீருமிட்டபெருமைதன்னுற்
சருக்கமெழுவகையாக்கிவிருத்தப்பாக்கள்தானு
மறுநூற்றுமுப்பத்தைந்தாச்செய்தா
னிருக்குமொழிச்சைவசிகாமணியேயென்னவெண்
டிசையெண்பண்டிதவிராசன்றுனே.

சிவசிதம்பரஐயர் பதிப்பிலேயுள்ள சிறப்புப்பாயிரப் பகுதியிலுள்ள செய்யுள்கள் நூலாசிரியரைச்செகராசசேகரன் என்று கூற, வைத்தியலிங்கதேசிகர் பதிப்பிலேயுள்ள சிறப்புப்பாயிரச் செய்யுள்கள் நூலாசிரியர் பண்டிதராசர் என்று கூறுகின்றன.

நூலாசிரியர் யாராயிருப்பினும் நூலியற்றப்பட்ட காலம் சயவீரசிங்கையாரியனது காலம் என்று துணியச் சான்றுகளுள. நூலாசிரியரைப் பண்டிதராசர் என்று கூறும் வைத்தியலிங்கதேசிகர் பதிப்பிலே இடம் பெற்றுள்ள மேல்வருஞ் செய்யுளைக் காண்க.

அம்புயத்துதரத்தண்ணலமைத்தவாரியர்தங்
கோமா
னும்பர்வந்திறைஞ்சுஞ்சேதுவுயர்கரைக்காவல்
வேந்தன்

செம்பொன்மாமவுலிச்சென்னிச்செகராசசேக
ரேசன்
றும்பையஞ்சடையான் சைவந்தோன்றிடத்
தோன்றினுனல்.
(திருநகரச்சருக்கம், 108)

இவ்விருத்தப்பாவிலும் தொடர்ந்து வரும் விருத்தங்கள் சிலவற்றிலும் ஆசிரியர் செகராசசேகரன் காலத்துச் சைவசமய நிலையை விதந்து கூறுவர். அவர் கூற்று தங்காலத்துச் செய்தியைக் கூறுவதுபோன்று அமைந்து கிடக்கின்றது. பதினுன்காம் நூற்றுண்டின் கடைக்கூற்றிலும் பதினைந்தாம் நூற்றுண்டின் முற்கூற்றிலும் வாழ்ந்தவன் சயவீரசிங்கையாரியனும் செகராசசேகரன். அரசகேசரி எதிர்மன்னசிங்கனுகிய எட்டாம் பரராசசேகரன் (1591-1616) காலத்திலும் அவன் காலத்திற்குப் பின்பும் வாழ்ந்தவர். கவிவீரராகவர் என்று கூறப்பட்டவர் அந்தகக் கவிவீரராயின் அவர் காலம் பதினேழாம் நூற்றுண்டாகும்.[5] கவிராசர் காலம் துணிதற்கரியதாகும். எனவே சிறப்புப் பாயிரச் செய்திகளைச் சித்தாந்தமாகக் கொள்வது கடினமாகும். மேலும் அரசகேசரி பாடிய சிறப்புப் பாயிரமும் கவிவீரராகவர் பாடிய சிறப்புப்பாயிரமும் காட்டுகின்ற ஒப்புவமை, ஐயங்கள் பலவற்றைத் தோற்றுவிக்கின்றன. ஒருவரது பாயிரம் வேறு பதிப்பில் வேருெருவர் பாயிரமாகக் காட்சியளிக்கின்றது. இப்பாயிரம் யாரால் முதலில் இயற்றப்பட்டது, யாரைப் பின்பற்றி யார் எழுதினுர் என்பன போன்ற விடயங்களை அறிஞர் ஆராயவேண்டும். அதற்கு முன்

5. எஸ்.சோமசுந்தரதேசிகர்: தமிழ்ப்புலவர்கள் வரலாறு (பதினேழாம் நூற்றுண்டு) மூன்றும் பதிப்பு (1951) பக். 89

பதாகச் சிறப்புப் பாயிரத்தை யடிப்படையாகக் கொண்டு நூலாசிரியர் இன்னார் என்று கூறமுற்படுவது பொருந்தாது.

சிறப்புப் பாயிரங்களை விடுத்து நூலின் அகத்தே ஆசிரியரைக் காண முயலுதல் பயன் தரலாம். சிவசிதம்பரஐயர் பதிப்பிலே மேல்வருஞ் செய்யுள் பாயிரவுறுப்பாக வருகின்றது.[6]

பாரிலங்குகயிலாசபுராணத்திற்கேழ் சருக்கம்பயில் வித்தோங்கு
மாரமுதவிருத்தகவியறுநூற்றுமுப்பத்தீரளவே யாக்கிச்
சீரெழுத்துச் சொற்பொருள்யாப்பலங்காரமுதலிய நூறெறிக்குஞ்சீர்த்திப்
பேரிலங்குசிங்கையந்தார்ச்செகராசசேகரனும் பெருமன்மாதோ.

ஆயினும் வைத்தியலிங்கதேசிகர் பதிப்பிலே பாயிரத்தில் இடம்பெறும் இதே செய்யுள் ஈற்றடியில் மாற்றமுடையதாய்க் காணப்படுகின்றது.

பாரிலங்குகயிலாசபுராணத்திற்கேழ்சருக்கம்பயில் வித்தோங்கு
மாரமுதவிருத்தகவியறுநூற்றுமுப்பானைந்தளவே யாகச்
சீரெழுத்துச்சொற்பொருள்யாப்பலங்காரமுதலிய நூறெறிக்கவல்ல
பேரிகழாவகைபகர்ந்தேன்றென்கயிலைமலைநிலைமை பெரிதுந்தோன்ற.

6. இதனுடன் 'கண்ணகி வழக்குரை'யின் 'அவனிபயில்குடிநயின...' என்னுஞ் செய்யுளையும் வரதபண்டிதரின் அமுதாகரத்திலுள்ள 23ஆம் செய்யுளையும் ஒப்பிடுக.

ஆனால் வைத்தியலிங்கதேசிகர் பதிப்பிலுள்ள மேல் வருஞ் செய்யுள் கவனித்தற்குரியதொன்றாகும்.

தேவையின்மன்செகராசசேகரக்
கோவையினுதித்தசீர்க்குமாரசூரிய
ஞவியுமுடலுமொத்தளித்தகல்வியின்
மேவியகாப்பியம் விமலற்காயதே.

(திருநகரச்சருக்கம், 116)

சிவசிதம்பரஐயர் பதிப்பிலே இடம்பெறாத இப்பாடல் செகராசசேகரனை ஆக்குவித்தோனாக்குகின்றது. இந் நிலையிற் சிவசிதம்பரஐயர் பதிப்பிலே உள்ள பாயிரச் செய்யுளை ஏற்பதா அன்றி வைத்தியலிங்கதேசிகர் பதிப்பிலே இடம் பெறும் திருநகரச்சருக்கத்தின் செய்யுளை (116) ஏற்பதா என்று இடர்ப்பட வேண்டியுள்ளது. செகராசசேகரன் ஆக்கியவனா அன்றி ஆக்குவித்தவனா என்று தீர்மானிப்பது கடினமாகும். முன்னைய பதிப்பாசிரியர்களுக்குக் கிடைக்காத ஏட்டுப் பிரதிகள் கிடைக்கப்பெற்று புதிய பதிப்புகள் வெளி வந்தாலொழிய நூலாசிரியர் பற்றித் தெளிவாகக் கூறுவதற்கில்லை. அக்காலம் வரும்வரை தட்சிண கைலாச புராணத்தின் ஆசிரியர் செகராசசேகரன் எனச் சிலராலும் பண்டிதராசர் எனச் சிலராலும் கருதப்படுவதைத் தடுக்க முடியாது.

பண்டிதராசர் இயற்றியதாக வேறொரு நூலோ செய்யுளோ காணப்படவில்லை. செகராசசேகரன் கண்ணகி வழக்குரை பாடியுள்ளான். தட்சிணகைலாச புராணத்திலே திருநகரச்சருக்கத்தில் இடம்பெறும் பாடல்கள் சில கண்ணகி வழக்குரையில் வரும் பாடல்கள் சிலவற்றை ஞாபகமூட்டுவன. தட்சிணகைலாச புராணவாசிரியர் பற்றிப் புதிய செய்திகள் வெளி வரும்வரை அதன் ஆசிரியரைச் சயவீரசிங்கையாரியனா

கிய ஐந்தாம் செகராசசேகரன் என்று கொள்ளுவதிற் பிழையிருப்பதாகத் தெரியவில்லை.

சிங்கைச்செகராசசேகரன் தனது குரு சைவராச பண்டிதன் வேண்டத் தட்சிணகைலாச புராணத்தை இயற்றினன் என்ற அரசகேசரியின் சிறப்புப் பாயிரச் செய்தியை மேல்வரும் செய்யுள் வலியுறுத்துகின்றது.

வைப்பானவடகயிலைதென்கயிலையென்றிரண்டு
வகைக்குமுன்னாட்
செப்பாதிவடமொழியின்புராணநடைதென்
மொழியாற்செப்புகென்று
ணிப்பாரிலயனுன்குமுகமுமொருமுகமாகியிசைந்த
தன்ன
மெய்ப்பானகுருச்சைவராசபண்டிதனெனுநாலு
வேதநூலோன்.
(பாயிரம், 9)

வடமொழியிலுள்ள மச்சேந்திய புராணம் தட்சிண கைலாச புராணத்திற்கு முதனூல் என்ற செய்தியை மேல்வருஞ் செய்யுள் சுட்டுகின்றது.

மீதுயர்ந்தவுருத்திரரும்விரிபதுமப்பெருமலரின்வி
ரிஞ்சர்தாமும்
பொதுதிருமாதவருமாதவர்க்குளொருபெரியபுனி
தமீனு
மாதரவினிறைஞ்சுகதைகயிலாசபுராணமெனவ
றையலுற்றேன்
மாதுரியமச்சேந்தியவடபுராணத்தியல்புமருவத்
தானே.
(பதிகம், 11)

ஆயினும் திருநகரச்சருக்கத்திலே இடம்பெறும் மேல்வருஞ் செய்யுளுக்கு அப்பாற்பட்டவை; ஆசிரியர் தாமே புதிதாகப் படைத்தனவாம்.

காட்சிதருந் திரேதவுகஞ் சென்றுதுவா
பரயுகமுங்கலந்த வந்நாட்
சேட்கடல்சூழ் புவியனைத்துந் தொழுங்கயிலைப்
பெருமான்பொற்றிகள்பூங் கஞ்சத்
தாட்கருதும் வானவர்கள் மானவர்போல்
வந்திறைஞ்சித் தவஞ்செய் தேகு
நாட்கருதும் வடமொழியின் புராணநடை
யிவ்வளவு நடத்தி னேமால்.7
(17)

தட்சிணகைலாச புராணம் திரிகோணமலையிற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கோணேசப் பெருமானையும் மாதுமையம்மையாரையும் பற்றிக் கூறுந் தலபுராணமாகும். இத்தலத்தின் தோற்றம் முதலுள்ள வரலாறுகளைக் கூறுகின்றது. தலமான்மி பினைக் கூறுமுகமாகப் பலருடைய சரிதங்கள் கூறப் பட்டுள்ளன.

தட்சிணகைலாசபுராணம் பாயிரம் நீங்கலாக ஈழ மண்டலச் சருக்கம், திருமலைச்சருக்கம், புவனோற்பத் திச்சருக்கம், அர்ச்சனவிதிச் சருக்கம், மச்சாவதாரச் சருக்கம், தரிசனமுத்திச்சருக்கம், திருநகரச்சருக்கம் ஆகிய ஏழு சருக்கங்களையுடைத்து. காப்புச்செய்யுள் ஒன்று நீங்கலாகப் பாயிரத்திலே பதினைந்து செய்யுள் கள் காணப்படுகின்றன. ஈழமண்டலச்சருக்கம் முத லாகத் தரிசன முத்திச்சருக்கமீறாக 501 செய்யுள்கள்

---

7. வைத்தியலிங்கதேசிகர் பதிப்பு (1916) செய்யுள் 17.

இடம்பெறுகின்றன. திருநகரச் சருக்கத்திலே சிவ சிதம்பரஐயர் பதிப்பும் வைத்தியலிங்கதேசிகர் பதிப்பும் மாறுபடுகின்றன. சிவசிதம்பரஐயர் பதிப்பிலே 116 செய்யுள்கள் திருநகரச் சருக்கத்திலே காணப் படுகின்றன. வைத்தியலிங்கதேசிகர் பதிப்பிலே இச் சருக்கத்திலே 119 செய்யுள்கள் உள. எனவே சிவ சிதம்பரஐயர் பதிப்பிலே காப்புச்செய்யுள் நீங்கலாக 632 செய்யுள்களும் வைத்தியலிங்கதேசிகர் பதிப்பிலே காப்புச்செய்யுள் நீங்கலாக 635 செய்யுள்களும் காணப்படுகின்றன. மேலும் சிவசிதம்பரஐயர் பதிப் பின் திருநகரச் சருக்கத்திலேயுள்ள 15 முதல் 18 வரை யுள்ள செய்யுள்கள் வைத்தியலிங்கதேசிகர் பதிப் பிலே இடம்பெறவில்லை. வைத்தியலிங்கதேசிகர் பதிப் பின் திருநகரச்சருக்கத்திலேயுள்ள 107 முதல் 112 வரையுள்ள செய்யுள்களையும், 116-ம் செய்யுளையும் சிவசிதம்பரஐயர் பதிப்பிலே காணமுடியாது.

தட்சிண கைலாசபுராணத்திலே நகரச்சருக்கம் ஏனைய புராணங்களிற் பொதுவாகக் காணப்படும் வைப்புமுறையை ஒட்டி நாட்டுச் சருக்கத்தையடுத்து அமைக்கப்பெறவில்லை. வடமொழிப் புராணத்தை அதர்ப்பட மொழிபெயர்த்த ஆசிரியர் தாம் புதிதாகக் கூறவேண்டிய செய்திகளைத்தனியே கூறுவதற்கு நகரச் சருக்கத்தை ஈற்றில் வைத்தார் போலும்.

தட்சிணகைலாச புராணம் சொற்சுவை, பொருட் சுவை செறிந்தது. ஈழமண்டலச்சருக்கம், திருமலைச் சருக்கம், திருநகரச்சருக்கம் முதலிய சருக்கங்களிலே ஆசிரியரின் கற்பனையாற்றல் சிறப்பாக மிளிர்கின் றது. ஈழமண்டலச்சருக்கத்திலே அணியலங்காரம்

மணிமணியாகப்பொலிந்து கிடக்கும் பெற்றியைக் காணலாம். அரிதினுணர்தற் பாலனவாகிய செய்யுள்கள் குறைந்து 'எளிமை' மிக்க பாடல்கள் பொலிந்து கிடக்கும் பெற்றியைச் சுட்டாமல் விடுவதற்கில்லை. திருநகரச் சருக்கத்திலே ஈழநாட்டுச் சரிதம் பற்றிய செய்திகள் சில காணப்படுகின்றன. ஈழமண்டலச் சருக்கத்திலும் திருநகரச்சருக்கத்திலும் ஆசிரியரின் நாட்டுப்பற்று பெருமிதவுணர்ச்சியோடு வெளிப்படுகின்றது.

தட்சிணகைலாசபுராணத்தை, கா.சிவசிதம்பர ஐயர் சென்னையிலிருந்த கலாரத்நாகர அச்சுக்கூடத்திலே 1887 ஆம் ஆண்டு பதிப்பித்தார். இப்பதிப்பிற்குரிய ஏட்டுப் பிரதிகளைப் பதிப்பாசிரியரின் தந்தை யாழ்ப்பாணம் காரைநகர் இயற்றமிழ்ப் போதகாசிரியர் மு.கார்த்திகேயையர் பரிசோதித்தார். பின்பு யாழ்ப்பாணம் புலோலி கிழக்கிற் பிறந்தவரும் மட்டக்களப்புக் காரேறுதீவில் வசித்தவருமாகிய பு.பொ. வைத்தியலிங்கதேசிகர் தட்சிண கைலாசபுராணத்தை அரும்பதப்பொருட் குறிப்புடன் பருத்தித்துறை தும்பைநகர் கலாநிதியந்திரசாலையிலே 1916 ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார். இப்பதிப்பிலே கோணேசர் கல்வெட்டும் இடம் பெறுகின்றது. சிவசிதம்பரஐயரது பதிப்பு யாழ்ப்பாணத்து நமசிவாயம் இயற்றிய சாற்றுகவியினையுடைத்து. வைத்தியலிங்கதேசிகர் பதிப்பிற்குப் புலோலி ம.முத்துக்குமாரசுவாமிக்குருக்கள், பருத்தித்துறை தும்பைநகர் ச.சுப்பிரமணியசாஸ்திரிகள், புன்னாலைக்கட்டுவன் சி.கணேசையர், புலோலி வ.குமாரசுவாமிப்புலவர், மட்டக்களப்பு காரேறு மூதூர் சாமிதாச மயில்வாகனனார், வயாவிளான் சுதேசநாட்டிய மனேசர் க.வேற்பிள்ளை முதலியோர் சாற்றுகவிகள் வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்து வதிரி சி. நாகலிங்கபிள்ளையவர்கள் தட்சிண கைலாச புராண வசனம் எழுதியுள்ளார். இவ்வசன நூலுக்கு முதனூல் பதினெண்புராணங்களுளொன்றாகிய காந்தத்திலுள்ள தட்சிண கைலாச மான்மியமாகும். இந்நூல் விபவ வருடம் வைகாசி மாதம் (1928) யாழ்ப்பாணத்து வதிரி விநாயக சுந்தர விலாசயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

சயவீரசிங்கையாரியன் கண்ணகி வழக்குரையென்னுங் காவியமும் பாடியுள்ளான்.

# வியாக்கிரபாத புராணம்

அளவெட்டியிற் பிறந்து பிற்காலத்திற் சிதம்பரத்தில் வாழ்ந்தவர், வைத்தியநாத தம்பிரானவர்கள். அளவெட்டி வே.கனகசபைப்புலவரவர்கள் இவர் மரபிலுதித்தவர். இவர் ஆறுமுகநாவலரின் மரபில் முன்பு சிறப்புடன் விளங்கிய ஞானப்பிரகாச முனிவரின் காலத்தவர்; பதினேழாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். இவர் கண்டியில் அரசோச்சிய முத்துச்சாமி மகாராசா மீதும் ஒரு பிரபந்தம் பாடிப் பரிசு பெற்றவர் என்ப.

வைத்தியநாத தம்பிரான் வியாக்கிரபாத புராணம் என்னும் புராணத்தினைப் பாடினுர் இப்புராணம் அச்சுவாகனம் ஏறியதாகத் தெரியவில்லை சுன்னுகம் அ.குமாரசுவாமிப் புலவர் தாமியற்றிய தமிழ்ப்புலவர் சரித்திரம் என்னும் நூலிலே மேல்வரும் இரு செய்யுள்களையும் அப்புராணத்திற்குரியதாகத் தருகின்ருர்.

மாதங்க வரைவி லேந்தி
மாலம்பாற் புரங்க ளெய்த
மாதங்க மொருபா லுற்ற
வானவன் மைந்தன் வாழும்
மாதங்க மார்பி னுன்றன்
மருகனுன் மங்கை முக்கண்
மாதங்க முகத்தி னுன்றன்
மலர்ப்பதம் வழுத்து வாமே.

ஏதமில் கார ணத்தாற்
சராசர மெவையு மாகி
ஆதியாய் நடுவா யிறு
யநாதியா யருளா யோங்குஞ்
சோதியோர் வடிவ மாகிச்
சுரர்தொழச் சுடர்சேர் பொன்னின்
போதமார் சபையு ளாடும்
புனிதனைப் போற்றல் செய்வாம்.

வியாக்கிரபாதபுராணம் சங்கதத்திலுள்ள வியாக்கிரபாத மான்மியத்தின் மொழிபெயர்ப்பு என்று கூறுவர்.

# சிவராத்திரி புராணம்

யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர், அ. வரதபண்டிதரவர்கள். இவர் வரதகவிராயர், வரதராசகவிராசர், வரதராச பண்டிதர் எனவும் அழைக்கப்படுவார். இவர் காசியிலிருந்து வந்து சுன்னாகத்திற் குடியேறிய வேதியர் குலத்திலுதித்தவர் என்பது மேல்வரும் அமுதாகரத்தின் சிறப்புப் பாயிரச் செய்யுளின் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

"ஐயமில் மூந்நூற்றிருபத்துமூன்று
செய்யதோர்விருத்தந்தெரிந்துரைசெய்தான்
கங்கை மாநதிசூழ்காசிமாநகரோன்
பங்கமில்பங்கயப்பசுந்துணர்மாலையன்
ஆதிநான் மறைதேரந்தணனுணையுங்
கோதிலாவோதிமக்கொடியுமிக்குடையோன்
கன்னியங்கமுகிற்கயலினங்குதிக்குந்
துன்னியவளவயற்சுன்னைநன்னுடன்"

இவரது தந்தையின் பெயர் அரங்கநாதையர் என்பது மேல்வரும் பிள்ளையார் கதைச் சிறப்புப் பாயிரச் செய்யுளான் அறியலாம்.

"செந்தமிழ் முனிவன் செப்பிய கதையும்
கந்த புராணக்கதையினுள் ளதுவும்
இலிங்க புராணத் திருந்தநற் கதையும்
உபதேசகாண்டத்துரைத்தநற்கதையும்
தேர்ந்தெடுத் தொன்றாய்த் திரட்டியைங் கரற்கு
வாய்ந்தநல் விரத மான்மிய முரைத்தான்
கன்னியங் கமுகிற் கயலினங் குதிக்கும்
துன்னிய வளவயற் சுன்னா கத்தோன்
அரங்க நாத னளித்தருள் புதல்வன்

திறம்பெறு முருகனைத் தினந்தொறும்
வரம்பெற வணங்கும் வரதபண் டிதனே.''

இவரது தந்தையின் தந்தை பெயர் மேல்வரும் அமுதாகரச் செய்யுளாற் புலனாகும்.

இந்தமருந்தின்பெருமையிருபிறப்பொருபிறப்பி
லெய்தாநின்ற
வந்தணர்தங்குலத்துதித்தஜெகநாதனருளரங்கநா
தன்றன்பால்
வந்தருளுஞ்சுதன்வரதபண்டிதன்முத்தலைமுறை
யுஞ்செய்துகண்டு
வந்தமருந்திருநாலுமாநாகங்கடித்திடினும்மாறு
மன்றே. (23)

இவர் அச்சுவேலியிலே மணஞ்செய்து வாழ்ந்தவர். அச்சுவேலிச் சந்தைக்கு அணித்தாய்ப் புலவனார்வளவு என்றழைக்கப்படும் காணியுண்டென்பர்.

இவர் வாழ்ந்த காலம் பற்றி அறிஞர் முரண்படவுரைப்பர். சைமன்காசிச் செட்டியவர்கள் வரத கவிராயர் கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தனர் என்று தமது புலவர் சரித நூலிற் கூறியுள்ளார்.[1] பாவலர் சரித்திரதீபக ஆசிரியர் ''கிறிஸ்தாப்தம் 1700 ம் ஆண்டு வரையில் இருந்தவர்'' என்பர்.[2] அ.குமாரசாமிப் புலவரும்[3] வித்துவான் சி கணேசையரும்[4] வரதபண்டிதர் பதினெட்டாம்

---

1. Tamil Plutarch (1859) பக். 111.
2. பாவலர் சரித்திர தீபகம், பக். 250.
3. தமிழ்ப்புலவர் சரித்திரம் (1916) பக் 168.
4. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம். (1939) பக் 19.

நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கூறுகின்றனர். சிவ ராத்திரி புராணத்திற்குச் சிறப்புப் பாயிரம் பாடியவர் கள் மயில்வாகனப் புலவரும் சின்னத்தம்பிப்புலவரு மாவர். இச்செய்தியை ஆதாரமாகக் கொண்டு வரத பண்டிதர் இவ்விரு புலவர்களினதும் காலமாகிய பதி னெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர் சிலர்.

வரதபண்டிதரவர்கள் சிவராத்திரியின் சரிதையை சிவராத்திரிபுராணமெனப் பாடியுள்ளார். சிதம்பரத் திலுள்ள அறிஞர் வேண்டுகோட்படி தாம் பாடிய தாக வரதபண்டிதர் கூறுவார்.

''கந்தமலர்ப் பொழில்புடைசூழ் தில்லைவனத்
தறிஞர்திருக் கடைக்கணேக்கி
முந்தவுரைத் தனர்பலரு மாயினுநீ யாகம
நூன்மொழிவழாமற்
பந்தமறுத் திடுசிவராத் திரிவிரத சரிதைதனைப்
பாடு கென்னச்
செந்தமிழி னுயர்விருத்தப் பாவதனாற்
றிரட்டியொன்றாச் செப்ப லுற்றேன்.''

(பாயிரம், 1)

மேலும்,

''வீணியிவன் றனதுமடம் வெளிப்படையாச்
செய்தனனுல் வித்தின் பாதி
நாணிலனென் றெனையுலகி னவலர்க
ணகுவரதை நாடிச் சற்றும்
பேணிலனின் மலனிரவின் பெருமையெடுத்
துரைக்குமிந்தப் பேறு கூறு
மேணிலனெற் சிவபதத்து ளிருத்துமெனும்
விருப்புளத்தை யீர்த லாலே.''

(பாயிரம், 2)

என்பதனுலும் பிறிதொரு காரணம் பெறப்படுகின்றது.

சூத முனிவர் நைமிசாரணியத்திலுறையும் மாதவர் வேண்டக் கூறுவதாகப் புராணம் இயங்குகின்றது. சிவராத்திரி விரதத்தின் தோற்றத்தையும் அதனை நோற்றிடும் வகையினையும் கூறிய சூத முனிவர் தொடர்ந்து சிவராத்திரி விரதத்தாற் பலனடைந்த சுகுமாரன், அங்கலன், சவுமினி சன்மாடபாதன், விபரிசன், குபேரன், சாவிகோத்திரன் ஆகியோரின் கதைகளை விரித்துரைக்கிறார்.

காப்புச் செய்யுள் ஒன்றினையும் கடவுள்வாழ்த்துப் பாக்கள் இருபதினையும் பாயிரச் செய்யுள் மூன்றினையும் சிவராத்திரியுற்பவச் சருக்கம் முதலாகச் சாவிகோத்திரச்சருக்கமீறாகவமையும் ஒன்பது சருக்கங்களிலுள்ள 691 பாடல்களையும் கொண்டிலங்குகின்றது, வரதபண்டிதர் பாடிய சிவராத்திரி புராணம்.

விரதமாண்பினை எடுத்தியம்பும் இந்நூலில் ஆங்காங்கே ஆசிரியரின் புலமையைத் துலங்கவைக்கும் பாடல்கள் பல காணப்படுகின்றன.

''துன்று கொன்றையாற் பசுங்கொடி விரவலாற் சுடுதீ
யென்று மேவலாற் சடுவிடப் பணிகளெய் துதலாற்
கன்று மானுகண் டுறைதலாற் கதிர்மணிக் கனக
மன்று ளாடிய பரம்பர னிகர்க்குமவ் வனமே.''

(சிவராத்திரியுற்பவச்சருக்கம், 5)

''குறையில்பொன்னெயிற் குடுமியிற் றொடுத்துயர் கொடிக
ளுறைதி ரைப்புன லகழிசூ ழந்நக ரரிவை
நிறைவ னப்பெதிர் நோக்குறு மாடியா நிலவின்
கறைது டைத்திட நீட்டிய கரங்களிற் கவினும்.''

(சுகுமாரச்சருக்கம், 9).

''கயமலர் துறைத்துக் கரைதவழ் பணிலங்
கான்றிடத் தோன்றுநித் திலத்தை
முயன்மதிப் பிள்ளை யெனப்பகற் காவி
முகைமுறுக் குடைந்துதே னொழுக்கும்
வயன்மருங் கெழுந்த கரும்பினைக் கவரி
முறித்திடத் தெறித்தவெண் மணிமுத்
தயன்முதிர்ந் திடுசூற் றவளைமேற் படநொந்
தாங்கது பொறுத்திடா தரற்றும்.''

(குபேரச்சருக்கம், 3)

வரதபண்டிதரின் சிவராத்திரி புராணத்தை வல்லை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச.வயித்திய லிங்கபிள்ளை 1878 ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார். அவரது இரண்டாம் பதிப்பு சென்னை இந்து யூனியன் அச்சியந்திரசாலையிலச்சிடப்பட்டு விஜயவருடம் (1893) வெளிவந்தது. இப்பதிப்பிற்கு சி.வை. தாமோதரம்பிள்ளை சாற்றுகவி வழங்கியுள்ளார்.

சிவராத்திரி புராணத்திற்கு அச்சுவேலி மயில் வாகனப்பிள்ளையவர்கள் குமாரரும் உடுப்பிட்டிவாசருமாகிய குமாரசூரியப்பிள்ளையவர்கள் பதவுரை இயற்றியுள்ளார். அவர் தமது பதவுரையுடன் கூடிய மூலத்தைப் பருத்தித்துறை (தும்பைநகர்) கலாநிதியந்திர சாலையிற் பிரமாதீச வருடம் ஆவணிமாதம் (1913) அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

நெல்லைநாதர் எனப்பெயரிய புலவரும் சிவராத்திரி புராணமென ஒரு புராணம் பாடியுள்ளார். அதனை யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை நா.சிவசுப்பிரமணிய சிவாசாரியவர்கள் பதிப்பித்துள்ளார்.1

---

1. பாவலர் சரித்திர தீபகம். பக் 201. 250.

சிவராத்திரி மான்மியம் என்ளுெரு வசனநூல் யாழ்ப்பாணம் சி செல்லையாபிள்ளையவர்களாலெழுதப் பட்டு 1908 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டுள்ளது.

வரதபண்டிதரியற்றிய சிவராத்திரி புராணத்தை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்து வட்டுக் கோட்டை க. சுருமூர்த்திஐயரவர்கள் 'சிவராத்திரி புராணம்' என்ளுெரு வசனநூலை எழுதிக் கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை மூலம் யாழ்ப்பாணம் சைவப் பிரகாச யந்திரசாலையில் 1939 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார்.

வரதபண்டிர் ஏனைய நூல்கள் சிலவற்றின் ஆசிரி யராகவும் காணப்படுகின்ளுர். இவர் பாடிய ஏகாதசி புராணத்தை மாயாவாததும்சகோளரி நா. கதிரை வேற்பிள்ளை முதன் முதல் அச்சிற்பதிப்பித்து வெளிப் படுத்திளுர். பண்டிதர் வ.மு.இரத்திநேசுவரையர் தமது குலமுன்னேர்களிலொருவரான வரதபண்டிதர் பாடிய குருநாதசுவாமிகிள்ளைவிடு தூதினை அச்சிட்டு வெளியிட்டார். சுன்ளுக வாசகரும் சங்கரபண்டிதரின் மருகரும் ஏழாலைச்சைவ வித்தியாசாலை ஆசிரியரு மாகிய சி.சுந்தரம்பிள்ளை வரதபண்டிதரின் பிள்ளை யார் கதையை அச்சிடுவித்தனர். வரதபண்டிதரியற் றிய அமுதாகரம் என்னும் வைத்தியநூலானது திருக் கோணமலை வித்துவான் சு. தம்பையாபிள்ளையாற் பார்வையிடப்பட்டு சென்னை விக்டோரியா ஜூபிலி அச்சுக்கூடத்தில் 1892 ஆம் ஆண்டு பதிப்பிக் கப்பட்டது. இவைகளையன்றி வேறுதனிப்பாக்களும் திருவூஞ்சல் முதலியனவும் இவராற் செய்யப் பட்டிருக்கின்றன.

# ஏகாதசிப் புராணம்

யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் அ.வரதபண்டிதர் பாடிய பிறிதொரு புராணமே ஏகாதசிப் புராணமாகும்.

சிவ விரதங்களுட் சிறந்ததாகிய சிவராத்திரி விரதத்தைக் குறித்து ஒரு புராணம் பாடியது போலவே திருமால் விரதங்களுட் சிறந்ததாகிய ஏகா தசி விரதத்தைக் குறித்து இப்புராணத்தைப் பாடி னர்.

சங்கதநூல்களிற் சொன்ன வழிகண்டு தண்டமி ழால் இதனை வகுத்தல் செய்தார் வரதபண்டிதர்.

மின்னுகதிர்த் திகிரியங்கைப் பெருமா
னுள்ளம் விருப்புறுமே
காதசியாம் விரத மேன்மை
மன்னுகடற் புடவிதனில் வடநூல்
சொன்ன வழிகண்டு
தண்டமிழால் வகுத்தல் செய்தான்
றுன்னுபுகழ்ப் பூசுரர்தங் குலத்தில்
வந்து தோன்றுமரங்
கன்சுதனற் சுன்னை நாடன்
பன்னுதமிழ்ப் புலவர்புகழ் வரத
ராச பண்டிதன்மண்
டலமதிக்கும் பாவல் லோனே.

(பாயிரம்)

முன்னுரைத்த புராணங்க டம்மிற்
சொன்ன முறைமையெலா
மாய்ந்தவற்றின் முன்சொன் ஞன்போற்
பின்னுரைத்தா ரிம்முனிவர் சிலகி
ரந்தம் பேசுமிவை
யிரண்டனையும் பேணி யந்நாண்
மன்னுவித்தி யாரணியர் திரட்டி
யொன்ருய் வடித்தெடுத்த
கிரந்தத்தின் வழிநூல் கண்டு
வின்னுதன்மா தவனேகா தசியென்
ருேதும் விரதமான்
மியந்தமிழால் விளம்ப லுற்றேன்.

(காலநிர்ணயச்சருக்கம், 3.)

ஏகாதசிப் புராணம் ஏகாதசி விரத நிர்ணயத்தையும் மகிமையையும் அவ்விரதமனுட்டித்தோர் சரிதங்களையும் கூறுகின்றது. உருக்குமாங்கதன், வீமன், ஆகியோர் சரிதங்களை ஈண்டு காணலாம்.

காப்புச் செய்யுள் ஒன்றினையும் கடவுள் வாழ்த்துப்பாக்கள் ஐந்தினையும் அவையடக்கச் செய்யுள் ஒன்றினையும் பாயிரச்செய்யுள் ஒன்றினையும் காலநிர்ணயச் சருக்கம், உருக்குமாங்கதச் சருக்கம், வீமேகாதசிச்சருக்கம் ஆகிய மூன்று சருக்கங்களிலுள்ள 258 பாடல்களையும் கொண்டு விளங்குகின்றது ஏகாதசிப் புராணம்.

மாயாவாததும்சகோளரி நா.கதிரைவேற்பிள்ளை ஏகாதசிப் புராணத்தை முதன் முதல் அச்சிட்டு வெளியிட்டவராவார். பின்னர் பருத்தித்துறை ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள் பருத்தித்துறை கலாநிதி

யந்திரசாலையில் அரும்பதவுரையுடன் அச்சிட்டார். ச.சோமசுந்தரஐயர் பின்பு ச.சுப்பிரமணியசாஸ்திரிகளும் சிவ.பஞ்சாஷரக்குருக்களும் எழுதிய அரும்பதவுரைகளோடு இதனை இரண்டாம் பதிப்பாக 1947-ஆம் ஆண்டு கலாநிதி யந்திரசாலையிற் பதிப்பித்து வெளியிட்டார்.

யாழ்ப்பாணம் புலோலி ம.தில்லைநாதநாவலர் மாணாக்கர் துன்னாலை தெற்கு ஆ.வேலுப்பிள்ளை உபாத்தியாயர் ஏகாதசிப் புராணத்திற்குப் பதவுரையெழுதி விளம்பி வருடம் ஆனிமாதம் (1958) பருத்தித்துறை கலாநிதியந்திரசாலையிற் பதிப்பித்துள்ளார்.

வட்டுக்கோட்டை நா.சிவசுப்பிரமணிய சிவாசாரியரும் ஏகாதசிப்புராணமென ஒரு புராணம் பாடியுள்ளார் என்ப.

# யோசேப்புப் புராணம்

இயற்பெயர் மறைந்து[1] காரணப்பெயரால் அறிஞரிடையே இடம் பெறுபவர்களிற் கூழங்கைத் தம்பிரானவர்களும் ஒருவர். காஞ்சிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கூழங்கையார் யாழ்ப்பாணத்திலே இசையுடன் வாழ்ந்து இறையடி நீழலையடைந்தார். தஞ்சாவூர் மாவட்டத்திலேயுள்ள ஒரு சைவமடத்திற் கல்வி பயின்று[2] தம்பிரானாகியவர் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை இருப்பிடமாகக் கொண்ட வைத்தியலிங்கச் செட்டியாரின் நண்பராய் ஈழம்வந்து அவராதரவில் ஆரம்பத்தில் வாழ்ந்தார்; தம் வாழ்வின் பிற்பகுதியைச் சுண்டிக்குளியிற் கழித்தார். சங்கதமும் தமிழுமுணர்ந்த கூழங்கையார், இருபாலை நெல்லைநாத முதலியார், இருபாலை சேனாதிராய முதலியார், மாதகல் மயில்வாகனப் புலவர், நல்லூர் ப. கந்தப்பிள்ளை, தேவப்பிரசையின் திருக்கதை இயற்றிய காபிரியேல் பச்சிக்கோ பாதிரியார்[3] முதலியவர்களுக்குத் தமிழிலக்கியமும் இலக்கணமும் கற்பித்தார். பிலிப்பு தெ மெல்லோ பாதிரியாரின் நண்பராய்த் திகழ்ந்

---

1. கூழங்கைத் தம்பிரானது இயற்பெயர் கனகசபாபதியோகி என்று கூறுவர் சிலர்.
2. இம்மடமுள்ள ஊரினை Tiruvatur என்பர் சைமன்காசிச் செட்டி; திருவத்துார் என்பர் அ. சதாசிவம்பிள்ளை; திருப்பனந்தாள் என்பர் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை; திருவாரூர் என்பர் ந. சி. கந்தையாபிள்ளை.
3. சதாசிவம்பிள்ளையவர்கள் வைத்தியலிங்கச் செட்டியாருக்குக் கூழங்கையாரிடம் பாடங் கேட்டுப் பின்பு சொல்லிக் கொடுத்தவர் மாதகல் சிற்றம்பலப்புலவர் என்று கூறுவர். சி. கணேசையரவர்கள் அவ்வாறு சொல்லிக் கொடுத்தவர் மாதகல் மயில்வாகனப் புலவர் என்பர்.

தார். தாமியற்றிய யோசேப்புப் புராணத்திலே[4] மெல்லோ பாதிரியாரைப் போற்றியவர். யாழ்ப்பாணம் ஆங்கிலேயர்வசம் ஒப்புவிக்கப்பட்ட காலத்தினையடுத்த அண்மைக் காலத்திலே இவர் மரணத்திரையால் மறைக்கப்பட்டனர் என்பர் சைமன் காசிச் செட்டி. ''அங்கிலேயர் கையில் யாழ்ப்பாணம் அகப்பட்ட காலத்திற் கிறிஸ்தாப்தம் 1795 ஆம் ஆண்டு இவரது மரண சம்பவம் நடந்தது'' என்பர் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர்.

கூழங்கைத் தம்பிரான் இயற்றிய யோசேப்புப் புராணம் அர்ச்சியேட்டர் யோசேப்புவின் வரலாறு பற்றியதாகும்.

யோசேப்புப் புராணத்திலே 21 படலங்களும்[5] 1023 செய்யுள்களும் இடம் பெறுவதாகச் சைமன் காசிச் செட்டியவர்கள் கூறுவர்.

இப்புராணம் அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. சைமன்காசிச் செட்டி எடுத்துக் காட்டியுள்ள ஆற்றுப் படலத்திலிடம்பெறும் ஐந்து பாடல்களே இன்று நமக்குக் கிடைக்கின்றன. இந்நூலினைச் சேர்ந்த ஏனைய பாடல்கள் வேறு ஆசிரியர்களால் எடுத்தாளப் பட்டுள்ளனவோ என்பது தெரியவில்லை. சைமன் காசிச் செட்டி எடுத்துக் காட்டும் ஆற்றுப்படலச் செய்யுள்கள் மேல்வருவன.

---

4. தமிழ்ப் புலவரகராதி ஆசிரியர் ந. சி. கந்தையாபிள்ளையவர்கள் தேவப்பிரசையின் திருக்கதை யெழுதியவர் கூழங்கைத்தம்பிரான் என்று கூறுவது சைமன் காசிச்செட்டியவர்களின் கூற்றுக்கு முரணுகும்.

5. சைமன் காசிச்செட்டியவர்கள் ஆற்றுப்படலத்தை இரண்டாவது காண்டம் என்று கூறுவதிலிருந்து 21 Cantos என்பது 21 படலங்கள் என்பது தெளிவாகும்.

பயம்புலிக் கருள்பயோ தரமியா
வும்வெண் டிரையாற்
பயங்கொள் வேலையிற் பரந்துவா
ரிதியிடை படிந்து
பயங்க ளானவை பருகியப்
பரவையின் வடிவாய்ப்
பயங்கள் கோரகை கொண்டிடப்
பரந்ததம் பரமேல்.

பரவு மால்கரு பங்களோ
டெட்டொடு வானைப்
புரவு வேந்தராள் புவியினைப்
போர்த்தென விருண்டு
விரவு கின்றது விண்ணெனும்
பந்தரின் கண்ணே
யிரவு நேர்கரும் படாத்தினல்
விதானஞ்செய் தென்ன.

திருவு லாங்கலைப் பிலிப்புமே
லோன்குருச் சிந்தை
மருவு ஞானநல் லொளியென
மின்னிமற் றுன்வாய்ச்
சுருதி யாமெனத் தொனித்தின்னே
னுயிர்க்கரு டொலைமாக்
கருணை யாமெனப் பொழிந்தது
காரிருட் புயலே.

தேவ தேவநம் பராபரன்
சீரணி சிறந்த
தாவி லாத்திரு நாமமே
தயங்குறுஞ் சுத்த

மேவி டுஞ்சியோன் வரைக்குமஞ்
சனப்புரி விதம்போ
லோவி லாமழை பெய்தன
வுலகுளோ ருவப்ப.

இறும்பி னுச்சியிற் பெய்திடும்
புனலெல்லா மிழிந்தே
யெறும்பு சீயம்புல் லிருங்குடா
வடியெலா மீர்த்து
நறும்ப ணைத்தர ளங்களைக்
கொழித்துட னடந்து
வறும்பு னத்திடை யுலாயது கடல்புரை வாவி.

கூழங்கைத்தம்பிரான் நல்லைக்கலிவெண்பா, கூழங்கையார் வண்ணம் முதலியனவற்றைப் பாடியுள்ளார் என்பர் அ.சதாசிவம்பிள்ளை.[6] அ.குமாரசுவாமிப்புலவர், கூழங்கையார் சில தனிநிலைச் செய்யுள்களும் சித்திவிநாயகர் திருவிரட்டைமணிமாலை முதலிய சில தொடர்நிலைச் செய்யுள்களும் பாடியவர் என்பர்.[7] ''மெல்லோப் பாதிரியார் பாடியதாகச் சொல்லப்படும் உவமான விளக்கம் கூழங்கைத் தம்பிரான் படியதாகச் சிலர் கூறுவர்'' என்பர் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை.[8] பவணந்திமுனிவன் நன்னூலுக்கு உரை கண்டவருள் கூழங்கையரும் ஒருவராவர். அவ்வுரை வெளிவந்ததாகத் தெரியவில்லை.

---

6. பாவலர் சரித்திர தீபகம் (1886) பக். 114
7. தமிழ்ப்புலவர் சரித்திரம் (1916) பக். 71-72
8. ஈழமண்டலப்புலவர் சரித்திரம் (1922) பக். 9

# தால புராணம்

யாழ்ப்பாணத்து அச்சுவேலியில் வசித்தவர் காசிநாதப்புலவர்.[1] இவர் சோதிடத்தில் வல்லவராகத் திகழ்ந்தார். இவர் நீலகண்டர் என்பவரது புதல்வர். புலவரவர்கள் 1796 ஆம் ஆண்டு பிறந்து 1854 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார் என்பர் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர்.

காசிநாதப்புலவரியற்றிய நூல் தாலபுராணமாகும். இப்புராணம் 'பனங்காய்ப் பாரதம்' எனவும் வழங்கப்பட்டது. இந்நூல் பனைவரலாறு கூறும் புராணமாய் இருந்ததாதல் வேண்டும். ''பனைப்பெருமை கூறினும், ஓர் பொது ஒருவகைக் கேலிப்பாடலாகவும் இருக்கலாம்'' என்பர் பாவலர் சரித்திரதீபக ஆசிரியர்.

தாலபுராணம் அச்சுவாகனம் ஏறியதாகத் தெரியவில்லை. பாவலர் சரித்திரதீபக ஆசிரியர் ''அப்புராணத்திற் சில விருத்தங்கள் கைக்கெட்டியும் கரலிகித ஏட்டுப்பிரதிகளில் நடபடியாய்ப் புகும் அபத்தங்களினுலோ அன்றி வாய்பாடத் தவருலோ அசை சீர்கள் நேராய் ஓசை சிறப்பாயிராமை பற்றிப் பாடல்

---

1. ந. சி. கந்தையாபிள்ளை தமது தமிழ்ப்புலவர் அகராதியிலே (இரண்டாம் பதிப்பு, பக். 113) ''காசிநாதப்புலவர் (18-ஆம் நூ.) இவர் கும்பகோணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பனையின் பயன்களைக் கூறுவதாகிய தால புராணம் செய்தனர். இது கலிவெண்பா யாப்பிலமைந்தது. நூறு ஆண்டுகளின் முன் தெனண்ட் என்பார் எழுதிய இலங்கை (Ceylon) என்னும் நூலின் இரண்டாம் பகுதியில் இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்புக் காணப்படுகிறது'' என்று கூறியுள்ளார்.

மாதிரிக்காகவேனும் அதனைத் தராதொழிந்தோம்'' என்று கூறுவர். தாலபுராணத்திற்குரியதாக மேல் வருஞ் செய்யுள்கள் வாய்மொழிக் கேள்வியால் வந்தவையாம்.

பாலதுண்டு தவிராது பசியகலப்
பலவமிர்தம் பாலித் தோங்கும்
ஆலமுண்ட கண்டனென நின்னீழ
மண்டலத்தே அன்பாய்க் காய்க்க
தாலமெனும் பாரதத்தைச் சாற்றினன்
வையநிலை தாங்கு வேலி
நீலகண்ட னருள்பாலன் காசிநாதன்
வாணிநகர் வாக்கினனே.

அரிதனை பரப்பி மட்டை
அம்மென நிரப்பி ஆடை
அரிதுகி லுடுத்து தாலம்
அளவிலா துயிரைக் காக்க
அரியது கண்டு வெட்கித்து
அளந்திடு படியை விட்டு
அரியுரு வடிவெடுத்து அவனியிற்
புகுந்தா ரன்றே.

அவனியிற் புகும் போது
அழித்திடும் தாழி பண்ணை
உவன மோடு அரவு தற்பை
ஊறுந்துயில் பாலோ டாடை
அவமிலாப் பதியில் ஆயன்
அங்கையில் வைத்த சங்கும்
தவமது பெற்ற நாரி தன்னையு
மீந்தா ரன்றே.

அவ்வை யுறுகதை அவ்வளவி னிற்க
பவ்வமதிநுதல் பக்குவ மாக
கவ்வை யோடுற்ற கருப்பநீர் காய்ச்சி
செவ்வி தியாய்ப் பனங்கட்டிகள் சேர்த்தார்.

# சூது புராணம்

யாழ்ப்பாணத்து நல்லூர் சிகிவாகன ஐயரின் மகன் அப்புக்குட்டி ஐயர் (1787-1863). இவருக்கு வாலசுப்பிரமணிய ஐயர் என்ற மறுநாமமு முண்டு. அப்புக்குட்டி ஐயரின் தம்பி வேங்கடாசல ஐயரின் மகனே கார்த்திகேயஐயர். இருபாலை சேனாதிராய முதலியாரின் மாணாக்கராகிய கார்த்திகேய ஐயர் வண்ணார் பண்ணையிலே ஆறுமுகநாவலரோடு கூடிச் சைவப் பிரசங்கம் செய்தவர்.

அப்புக்குட்டி ஐயர் இயற்றிய புராணமே சூது புராணமாகும். இப்புராணத்திற்குரிய செய்யுள்களோ அன்றி இவரியற்றிய நல்லூர் சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழுக்குரிய செய்யுள்களோ கிடைக்குமாறில்லை. இவர் பாடிய தனிப்பாடல்கள் கூடக் கிடைக்கவில்லை.

# திருவாக்குப் புராணம்

கனகசபைப்புலவர் யாழ்ப்பாணத்து அளவெட்டியிலே வேலுப்பிள்ளைக்கு மகனாகப் பிறந்தார். இவர் வியாக்கிரபாதமுனிவர் புராணத்தைப்பாடிய வைத்தியநாத தம்பிரான் வழியிலே வந்தவரென்பது அழகர்சாமிக்குப் புலவர் எழுதிய மேல்வருஞ் சீட்டுக்கவியாற் புலனாகும்.

நிறை நிலவு பொழியமுத கிரணசந் திரனென்ன
நின்றிலகு கின்ற தொடையாய்
நேரலர் படைக்கடலை வீரவே கங்கொண்டு
நிருமூல மாக்கு படையாய்
நெடியதரு வைந்துமெழு முகிலுமிணை யல்லவென
நித்தமருள் கின்ற கொடையாய்
நிலவலைய மெங்கணுங் கல்விநிலை பெற்றிலகு
நிகரற்ற சீர்த்தி யுடையாய்
திறைநிலவு தவழுமுயர் பொறைபலவு மெனவெளவு
செங்கையுத் தண்ட தீரா
செயமாது குடிகொண்ட திண்புயா சலவுளந்
திருமா துவக்கு நெறியாய்
தென்னிலங் கேசவெழின் மன்னுமங் கசரூப
திறலழகர் சாமி யென்னுஞ்
சிங்கவே றனையவித் துங்கவுள் ளக்களி
சிறந்திட மகிழ்ந்து காண்க
துறைநிலவு கலைவாரி கரைகண் டுயர்ந்துநின்
றொல்குலத் தரசர் தம்பாற்
றேமிலா நண்புபெற் றோங்குவைத் தியநாத
சுகுணன் குலத்து தித்தோன்

துகளற்ற சீரளவை நகரத்து வருகனக
சபைமிக்க துன்று பக்தி
தூண்டநின் மாபெருமை பூண்டசுமு கம்பெறச்
சோர்விலா தெழுது நிருபம்
முறைநிலவு மிறைமைபெறு முடிமன்னர் திலகநீ
முகமலர்ந் தகமு வந்தே
மூளுமன் பாலணிய நீளுமின் பானவிசை
மெய்த்தமடன் மாலை தரவும்
முகதரிச னங்கண்டு மிகுகரிச னங்கொண்டு
முன்பெய்த வுங்கரு திநின்
முன்னணுகு மென்றனக் கின்னருள் சுரந்தூழ்
மூதுலகி னீவாழியே.

இச்சீட்டுக்கவி கண்டியரசன் மகன் அழகர்சாமியிடம் அவன்மீது தாம் பாடிய மடற்பிரபந்தத்தை அரங்கேற்ற விரும்பியதை எடுத்துக் காட்டுகின்றது. புலவரவர்கள் சென்னையிலே அமரிக்க மிசனரிமாரின் கீழ் அகராதி வேலையிலீடுபட்டிருந்த காலை வேலூரிலிருந்த அழகர்சாமிமீது மடல் பாடினர். விநோதரச மஞ்சரியளித்த வீராசாமிச் செட்டியார் அக்காலை இவருடன் அகராதி வேலையிலீடுபட்டிருந்தார். அவருடைய நரைத்த குடுமியைப் பற்றி மேல்வருஞ் செய்யுளைப் பாடினர்.

நாவலர் வியக்கப் பாவலர் நாவான்
நன்கலை மதிவளர்ந் தோங்கிப்
பாவலர் முகஞ்செய் பதுமமாக் குவிக்கும்
பான்மையோன் மாயனோ டுளந்து
மாவலர் வீரா சாமிவேள் குஞ்சி
மலரயன் றேவிவெண் கஞ்சப்
பூவலர்ந் திருப்ப வதன்மிசை யிருந்த
பொற்பெனப் பொலிந்திலங் குறுமால்.

அழகர்சாமி சமுகத்திலே தாம் அவன்மீது பாடிய மடலை அரங்கேற்றித் திரும்பும்போது வழியிற் சந்தித்த புலவரை நோக்கி விளிப்பதாக,

பூவின் மீதெவரு மெய்ச்சு பாவருளில்
புல்லர் மீதுசொலி நெஞ்சுகால்
புண்கள் பட்டுவரு பாவ லீரெனையொர்
புரவ லன்கொலென வெண்ணலீர்
யாவின் மீதுமுய ரோவில் சீருறு
மிலங்கை நாடர சியற்றுபேர்
இசைவி ளங்குழகர் சாமி யண்ணலரு
ளீகை பெற்றுவரு புலவன்யான்
நாவில் மீதுலவு பாவி னத்தருமை
நன்கு ணர்ந்ததமி ழறிஞன்
நாவ லர்க்குதவு வள்ள லங்கவனை
நண்ணி வின்னபரி செய்துவீர்
மாவின் மீதரச னந்த மத்திமிசை
மருவு பேரரச னந்தநீள்
வைய மீதரச னந்த மென்றுமவன்
வாயின் முன்னரடை யாளமே.

என்னும் புலவராற்றுப்படையைச் சொற்றனர். இவர் சமயத்தாற் கிறித்தவர். இவர் 1873 ஆம் ஆண்டு மரணத்திரையான் மறைக்கப்பட்டனர்.

.வே. கனகசபைப்புலவர் பாடிய புராணம் திருவாக்குப்புராணமாகும். கிறித்து சமய வித்தியாசாலை மாணுக்கரும் பிறரும் சத்தியவேத நூலைக் கற்றுக் கொள்வதற்குபயோகமாகப் புராண நடையில் இந்நூல் பாடப்பட்டது. கிறித்து வேதாகமத்தின் பாகங்கள் சில இப்புராணத்திற் பாடப்பட்டிருக்கின்றன.

காப்புச் செய்யுளொன்றும் கடவுள் வாழ்த்துப் பாக்கள் ஐந்தும் அவையடக்கச் செய்யுள்கள் இரண்டும் பதிகச்செய்யுள்கள் நூற்றுப்பதினென்றும் ஐநந காண்டத்திற்கு முன்பு இடம் பெறுகின்றன. பதிகத்திலே வேதாகமம் முழுவதையும் பாடுவதை நோக்கமாகக் கொண்டிருந்தார் என்று ஊகிக்க இடமுண்டு. ஆயினும் இன்று கிடைக்கும் திருவாக்குப்புராணத்திலே முதற் பாகமே நிறைவுற்றதாகக் காணப்படுகின்றது. இரண்டாம் பாகத்திலே மாதிரிக்காக எடுத்துக்காட்டப்பட்ட சுவிசேடகாண்டத்தின் சுவிசேட வரலாற்றுப்படலத்திலும் யோவானுற்பவித்த படலத்திலும் முறையே இருபத்துநாலு பாக்களும் நாற்பத்து மூன்று பாக்களும் காணப்படுகின்றன. இரண்டாம் பாகம் முழுவதும் அச்சிடப்பட்டதாகவோ அன்றிப் பாடப்பட்டதாகவோ கூறமுடியாமலிருக்கிறது. திருவாக்குப்புராணத்தின் முதற்பாகத்திற் பதிகத்தினைத் தொடர்ந்து ஐநநகாண்டம், யாத்திரைக்காண்டம் என இரு காண்டப் பிரிவுகளிடம்பெறுகின்றன. ஐநந காண்டத்திலே பதினொரு படலங்களும் யாத்திரைக் காண்டத்திலே எட்டுப்படலங்களும் காணப்படுகின்றன. பதிப்பாசிரியர் இரு காண்டங்களிலும் வருணனை பற்றிய கவிகளைப்பிரித்துத் தனியே தந்துள்ளார். இவ்வாறு பதிப்பித்தமைக்குக் காரணம் தெரியவில்லை. உற்பத்திப்படலம் முதலாக யோசேப்புப்படலம் ஈறுகவுள்ள ஐநநகாண்டத்திலே நாற்பது வருணனைக்கவிகளும் 1035 பாடல்களும் காணப்படுகின்றன சிறைபுரி படலம் முதலாகப் பத்துக்கற்பனைப்படலம் ஈறுகவுள்ள யாத்திரைக்காண்டத்திலே இருபத்து மூன்று வருணனைக்கவிகளும் 418 பாடல்களும் இடம் பெறுகின்றன. எனவே ஐநநகாண்டம், யாத்திரைக்காண்டம் ஆகிய இரு காண்டங்களிலும் 1516 பாடல்கள் காணப்படுகின்றன.. இப்பாடற்றொகையுடன் காப்பு முதலாகப் பதிகமீறுகவுள்ள பிரிவிற் காணப்படும்

119 செய்யுள்களையும் சேர்க்கத் திருவாக்குப்புராணத்தின் முதற் பகுதியின் மொத்தப் பாடலெண்ணிக்கை 1635 ஆகும். இத்தொகையுடன் இரண்டாம் பகுதியின் மாதிரிக்காகத் தரப்பட்டுள்ள 67 பாக்களையும் இணைப்பின் இன்று கிடைக்கும் திருவாக்குப் புராணத்திலே 1702 பாடல்கள் காணப்படுகின்றன எனலாம்.[1]

சரிதையாக வமையும் திருவாக்குப்புராணத்திலே கனகசபைப் புலவரின் புலமை ஆங்காங்கே மிளிரக் காணலாம். ஆசிரியர் பண்டைய நூற்பயிற்சியுடையாரென்பதை நாம் பலவிடங்களில் உணரமுடிகின்றது. தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், திருச்செல்வர் காவியம் முதலிய நூல்களைப் பாடிய பெரும் புலவரைப்போன்று கனகசபைப்புலவரும் காவியவுணர்வும் புராணவறிவும் மிக்கவராகக் காணப்படுகின்றார். வேதாகமத்தைப் பொருளாகக் கொண்ட போதும் அப்பொருளை இலக்கிய நயம்பட அமைத்தபெற்றி போற்றற்குரியதாகும். சிறு பிரபந்தங்களும் தனிநிலைக் கவிகளும் மட்டுமன்றி பெருநூலும் பாடவல்லவர் என்பதைத் திருவாக்குப்புராணம் எடுத்துக்காட்டுகின்றது. அன்னாரின் நயம் பொருந்திய பாட்டல்கள் பலவற்றில் ஈண்டு சிலவற்றைக் காண்பாம்:

வெய்யவன் றன்னு லிந்த மேதினிக் குற்ற வெம்மை
செய்யதண் கரங்க ளாலே தீர்த்திருள்
சிதைத்தீ றில்லாத்

---

1. பாவலர் சரித்திர தீபகத்திலே திருவாக்குப்புராணத்தின் பாடலெண்ணிக்கை பற்றித்தரப்படும் செய்திகள் பதிப்பிக்கப்பட்ட திருவாக்குப்புராணத்திற்கு மாறானவையாகக் காணப்படுகின்றன (பக். 92).

துய்யவெம் பெருமான் துன்றுங் கிருபையா
சனம்போற் றேன்றி
மையவான் முகத்தி னூடு மாமதி
எழுந்த தன்றே.

மேயபே ரன்பினேரை மிக்கருள் சுரந்து காக்குந்
தூயவெம் பரனையெண்ணூர் துர்க்குணம்
விடாது பற்றி
மாயவே யன்றியுய்ய வகையினை நோக்கி லாத
தீயவ ருளமா மென்னத் திசையெலா
மிருண்ட வன்றே.

திருவாக்குப் புராணத்தினை சி.சி மெக்காதர் ஐயரவர்கள் யாழ்ப்பாணம் றைப்லி ஸ்ரேங் அச்சகத்திலே 1866 ஆம் ஆண்டிற் பதிப்பித்துள்ளார்.

கனகசபைப்புலவர் திருவாக்குப்புராணமன்றி வேறு நூல்கள் சிலவற்றையும் தனிநிலைக்கவிகள் பலவற்றையும் இயற்றியுள்ளார். இவர் கண்டியரசன் மகனாகிய அழகர்சாமி மீது மடற்பிரபந்தம் பாடியுள்ளார். அப்பிரபந்தம் அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. ''இவர் ஓர் உலாவும் பாடினார் என அறிகின்றேம்'' என்பர் வித்துவான் சி.கணேசையர்.2 சூடாமணி நிகண்டின் பதினோராவது தொகுதிக்குப் பதிலாக 583 செய்யுள் கொண்ட ஒரு நிகண்டும் பாடினார்.3

2. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம் (1939) பக்.63.
3. பாவலர் சரித்திரதீபகம் (1886) பக்.92.

# திரிகோணாசல புராணம்

திரிகோணாசல புராணத்தை மாசிலாமணி முத்துக்குமாருப் புலவர் இயற்றியருளினார். இவர் திரிகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். முத்துக்குமாருப்புலவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே வாழ்ந்தவர். 1879ல் இவர் வாழ்ந்து கொண்டிருந்தாரென்று கூறப்பட்டிருக்கிறது.1

திரிகோணாசல புராணத்திற்கு வடமொழியிலுள்ள மச்சபுராணம் முதனூலென ஆசிரியர் கூறியுள்ளார்:

மச்சபுராணக்கதையுங்கயிலாயபுராணத்தின்
வாய்மைதானு
முச்சகம்போற்றிடுமறிஞர்முன்னுரைத்தமரபு
களின்முறையுந்தூக்கி
மெச்சியசீர்த்தென்கயிலைப்பெரியோர்கள்கூறென
முன்விதியினராய்ந்
திச்சகத்திற்கோணவரைப்புராணமெனத்தமிழ்ப்
பாவினியம்பலுற்றேன்.
(அவையடக்கம். 12)

ஆயினும் இப்புராணம் முழுவதையும் மொழிபெயர்ப்பு எனல் பொருந்தாது. ஏனெனில் ஆசிரியர் பின்னுள்ள குளக்கோட்டன், கயவாகு முதலானோர் வரலாறுகளையும் உரைத்தலான்.

திரிகோணாசலபுராணம் தலத்தின் தோற்றத்தையும் அதன் மாண்பினையும் எடுத்துரைக்கும் தல

---

1. The Yalpana-Vaipavamalai-Translation by C. Brito-1879.

புராணமாகும். இராவணன் இறையமரும் மலை யெடுத்துத் தருக்கழிந்ததையும், மாதவன் மூலம் தலத்தோற்றத்தினையும் மாண்பினையும் அறிந்ததையும் கோணவரைப்படலம் கூறுகின்றது. இராவணன் தன் தாய்க்குக் கன்மாதி செய்த தலம் இதுவெனக் கன் மாதிப் படலம் உரைக்கின்றது. திருக்கைலாயத் திலிருந்து தென்றிசை நோக்கி வந்த அகத்திய முனிவ ருக்கு இறைவன் திருமணக்கோலம் காட்டியருளிய பதி இது வென அகத்தியப் படலம் பகருகின்றது. உலோ பாமுத்திரைக்கு அகத்தியர் மாவலி தீர்த்தத்தின் மாண்பினை யுரைத்துத் தீர்த்தமாடிக் கரசையம்பதி யிலே பூசனை புரிந்தமை புகலுகின்றது, தீர்த்திகைப்பட லம். இராமன் இராவணவதத்தாற் பீடிக்கப்பட்ட பிர மகத்தி தோசம் நீங்கிய தலமெனப்பிரமகத்திப்படலம் செப்புகின்றது. சோணாட்டு வேந்தன் வரராமதேவன் கோணை மான்மியம் கேட்டுத் திரிகோணமலையைத் தரி சித்த தாற்பரியத்தைத் தருகின்றது வரராமதேவர்வரு படலம். அடுத்து ஏழு படலங்களிலே குளக்கோட்டன் வரலாறும் அவன் செய்த திருப்பணிகளும் விதந்தோ தப்படுகின்றன. புறச்சமயத்தவனான கயவாகு தீய நோக்கத்தோடு வந்து பார்வையிழந்ததும் சைவனாகிப் பார்வைபெற்றதும் பூசனை செய்ததும் கயவாகுப் படலம், பூசனைப்படலம் ஆகிய இரு படலகளிலே இடம் பெறுகின்றன. நைமித்திகப் படலத்திலே பர ராசசேகரன் முதலானோர் தரிசித்து நன்மைபெற்ற செய்திகள் காணப்படுகின்றன. தம்பைநகர்ப் படலத் திலே மாருதப்பிரவீகவல்லி வரலாறு விரித்தோதப்படு கின்றது. அவள் செய்த தலயாத்திரை கூறுமுகமாக ஈழத்தின் திருத்தலங்கள் பல எடுத்துரைக்கப்பட் டுள்ளன.

கடவுள் வாழ்த்துப்பாக்கள் பதினாறுக்கு முன்ப தாகக் காப்புச் செய்யுள் ஒன்றும் நூற்பயன்கூறும்

செய்யுள் ஒன்றும் வாழ்த்துப்பாடல் ஒன்றும் காணப் படுகின்றன. கடவுள் வாழ்த்தினைத் தொடர்ந்து பதின்மூன்று பாக்களில் அவையடக்கம் கூறப்படுகின் றது. இதனைத் தொடர்ந்து நூற்பொருளைச் சுருக்கிப் பன்னிரண்டு பாக்களிலே பதிகம் கூறுகின்றது. பதிகத் தைத் தொடர்ந்து ஆற்றுப்படலம் முதலாக தம்பை நகர்ப்படலம் ஈருக இருபது படலங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவ்விருபது படலங்களிலும் 1446 பாக் கள் இடம் பெறுகின்றன. எனவே திரிகோணசல புராணத்தின் முழுப்பாடலெண்ணிக்கை 1490 ஆகும்.[2]

கம்பனுடைய இராமாயணம் பின்னெழுந்த நூல் கள் பலவற்றிற்கு முன்னேடியாக விளங்கியதாகும். உமறுப்புலவர், வீரமாமுனிவர், எச். ஏ. கிருஷ்ண பிள்ளை முதலியோருக்குக்கூட கம்பனுடைய வைணவ காவியம் பல்வேறு முறைகளில் வழிகாட்டிற்று. திரிகோணசலபுராணமுடையாரும் கம்பராமாயணப் பயிற்சி மிக்கவராகக் காணப்படுகின்ருர். ஆற்றுப்பட லம், திருநாட்டுப்படலம், திருநகரப்படலம் முதலிய படலங்களிலுள்ள பாடல்கள் சில கம்பராமாயணத் திலுள்ள பாடல்கள் சிலவற்றை ஞாபகமூட்டுகின்றன. இராமனது மணவினை காண அயோத்தியேகிய மக்க ளின் செய்திகளாகக் கம்பன் அமைத்துக் காட்டும் செய்திகள் சிலவற்றை முத்துக்குமாருப் புலவர் மணம் புரி படலத்திலே அமைத்துக் காட்டுவார். காவியங்களை முன்மாதிரியாகக் கொண்டு ஆசிரியர் நூற்பொருளின் சுருக்கத்தைப் பதிகத்திலே தருகின்ருர். மேல்வரும் அவையடக்கச் செய்யுள் கம்பராமாயணத்தை ஞாபக மூட்டுகின்றது:

---

2. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் தமது ஈழமண்டலப் புல வர் சரித்திரத்தில் (1922): ''அப்புராணம் 1591 செய்யுளு டையது'' என்று கூறியுள்ளார் (பக் 11).

உலகெலாம்போற்றவாடலுவந்தருளொப்பின்
மூர்த்தி
யலகிலாவெழில்பெற்றேங்குமன்னமென்னடையி
ஞேடெங்
குலமெலாமுய்யவந்தகோணமாமலையின்காதை
பலமெலாம்புரியுமென்னுமாசையாற்
பகர்தலுற்றேன் (2)

அவையடக்கம் முதலாகவுள்ள உறுப்புகளிலே ஆசிரியர் ஒவ்வொரு உறுப்பிலும் முதலிற் கடவுள் வணக்கஞ் செய்வது கம்பன் முதலிய பெரும்புலவரைப் பின் பற்றியாம்.

திரிகோணசல புராணத்திலே கவிநயமிக்க பாடல்கள் பல காணப்படுகின்றன; ஈண்டு சிலவற்றைக் காண்பாம்:

புகலியர்கோனூரன்றிருநாவினுக்கரசுபொருவில்
வாய்மை
திகழவருவாதவூரடிகளிவர்திருமுறையாற்
செப்புகின்ற
பகவனுக்கெம்புன்கவியும்பண்பாடுஞ்சடாடவியிற்
பனிவெண்டிங்கள்
வகிரிதழியுடனெலும்புதலைமாலைமகிழ்ந்தணியும்
வகையான்மாதோ (அவையடக்கம்,4)

ஆம்பலம்போதைவாயெனவுமன்றலர்
காம்புறுபங்கயங்கரமதென்னவுந்
தேம்பொழிகுவளைகண்ணெனவுந்தேர்கிலார்
தாம்பகையிதுவெனத்தடிதன்மேயினுர்
(திருநாட்டுப்படலம்,8)

பொன்னிணர்க்கடுக்கையும் புனிதமாநதி
யன்னையுஞ்சூடுமெம்மண்ண ருண்முறை
மன்னியவடியவர்வணக்கமாமெனச்
செந்நெலின்விளை கதிர் சிறந்து சாய்ந்ததே.

(திருநாட்டுப்படலம், 10)

திரிகோணசல புராணத்தை வண்ணார்பண்ணை ஆ.சண்முகரத்தினையர் பரிசோதித்து யாழ்ப்பாணம் திருஞானசம்பந்தர் அச்சுக்கூடத்திற் பதிப்பித்து 1909ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இப்பதிப்பிற்குச் சுன்னுகம் அ.குமாரசுவாமிப் புலவர் 'சிறப்புப் பாயிரம்' வழங்கியுள்ளார்.

# கோட்டுப் புராணம்

யாழ்ப்பாணத்து உடுப்பிட்டியிற் பிறந்து கோப்பாயில் மணஞ் செய்திருந்த வேலுப்பிள்ளையின் புதல்வர் இராமலிங்கம். பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்கூற்றில் வாழ்ந்தவர்.

இவர் பாடியநூல் கோட்டுப் புராணமாகும். ''நீதித்தலஞ் சென்று வியாச்சியம் நடத்தும் வாதி பிரதிவாதிகளுக்கு நேரிடும் பணநஷ்டம், கஷ்டம், அல்லல், தொல்லைகளையும், அந்நீதிஸ்தலங்களில், 'உதரநிமித்தம் வெகு சிருது வேடம்' எனப் பிழைப்பின் பொருட்டுத் தந்திர வேடம் போட்டுத் தமனகனைப் போல் இருதிறத்தவரையும் மூட்டிவிட்டுப் பணம் பறிக்கும் கோட்டுப்புருக்களையும், வாதி பிரதிவாதிகளுக்காகத் தனித்தனி ஏற்பட்டும் இருபுறமுங் கைநீட்டும் நியாய துரந்தரர்களையும் இழித்தும், பழித்தும் கோட்டுப் புராணம் எனும் பெயர்சூட்டி ஒரு பாடல் இயற்றினர்'' என்பர் அ.சதாசிவம்பிள்ளையவர்கள்.[1]

கோட்டுப் புராணத்திற் பாடல்கள் சிலவே அகப்பட்டமையினுல் அதன் அமைப்பு முறை பற்றி ஒன்றுஞ் சொல்ல முடியாமலிருக்கின்றது. மேல்வருஞ் செய்யுள்கள் இப்புராணத்திற்குரியனவாக வழங்குகின்றன.

கோடொருகளரியதிலுறுந்துரையோகூத்துப்
பார்த்திருந்திடுமுப்பு
ஆடுறுங்குரங்கோவழக்கர்களாவாரவையிடைய
வைகளைக்கொண்டு

---

1. பாவலர் சரித்திர தீபகம் (1886) பக். 41

நாடொறுமாட்டுங்கயிறுதான் வழக்குநட்டுவப்
பணிக்கஞேதரணீ
வாடிடுவயிறு வளர்ப்பதற்கெடுத்தவ ஞ்சனேவேட
மென்றுணரே.

நாட்டிலென்பட்டிமாடுநாசமாய்ப்போச்சு
தேதான்
வீட்டிலென்மனேயாட்கென்னவில்லங்கம்விளேந்த
தோதான்
சீட்டிலேயெழுதியல்லாற்செலவுக்குங்கதி
வேறில்லேக்
கோட்டிலேவந்தநாளாய்க்குளறுறேன்
குளறுறேனே.

பத்தியமென்னவென்ருற் பட்டினிகிடக்க
வேண்டாம்
நித்தமும்நடக்கவேண்டும் நினேவுவேருென்றுமாகா
சத்திரமதனிற்சோறுசாப்பிடல் நஞ்சதாகும்
சித்தத்தைச் சிவன்பால்வைத்துச் சிவசிவாவென்று
சொல்லே.

# இளசைப் புராணம்

யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலே வேதியர் குலத்திலே தோன்றியவர் கணேசபண்டிதர். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே வாழ்ந்தவர். திருவண்ணாமலையாதீனத்து வித்துவானாகத் திகழ்ந்தவர்.

கணேசபண்டிதர் பாடிய புராணம் இளசைப் புராணமாகும். பாண்டிய நாட்டு இளையாற்றங்குடியிற் றங்கியிருந்த காலை அந்நகர வணிகர் கேள்விப்படி இளசைப் புராணத்தைத் தமிழில் அதர்ப்படப் பெயர்த்து விருத்தப்பாவால் யாத்தனர்.

அப்பெரு மான்மி யத்தை யரவணி சடையி னார்தஞ்
செப்பரு முகத்தில் வந்த சீர்கெழு குரவன் றானும்
எப்பெரும் புகழும் வாய்ந்த விளசைமா நகரத்
தாரும்
தப்பருந் தமிழின் பாவாற் பாடியே தருக
வென்றார்.

என்னுஞ் செய்யுள் காண்க.

இத்தலபுராணத்திற்கு முதனூல் வடமொழியாலியன்றதாம்.

அன்னமூ வாறி னுள்ளு மகிலநா யகனு மீசன்
றன்னுயர் புராணம் பத்துச் சாற்றிய வவற்று
ளொன்றா
முன்னரும் பிரமாண் டப்பே ருத்தம புராண
மாங்கண்
மன்னிய விளசை மேலா மான்மியம் வகுக்கப்
பட்டே.

என்னும் பாயிரச் செய்யுள் இளைசைமான்மியம் பிரமாண்ட புராணத்துள்ளதெனக் கூறிற்று.

இளைசைப்புராணம் பாயிரம் நீங்கலாகத் திருநாட்டுப்படலம், திருநகரப்படலம் முதலாம் பதினான்கு படலங்களையுடையதென்றும் 1090 செய்யுள்களைக் கொண்டதென்றுங் கூறுவர்.

இளைசைப் புராணம் மன்மத வருடம் சித்திரை மாதம் (1895) அச்சாயிற்று.

# கனகி புராணம்

யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணை மேளகாரப் பகுதியைச் சேர்ந்தவர் சுப்பையா. இவர் 'நட்டுவச் சுப்பையன்' என்றும் அழைக்கப்பட்டார். சுப்பையா ஏழாலையிலே மணஞ்செய்து அவ்வூரைத் தம்முறை பதியாக்கினார். பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் அ.சதாசிவம்பிள்ளையின் காலத்தவர்.

சுப்பையா பாடிய நூல் கனகி புராணமாகும். இந்நூல் 'கனகி சயமரம்' என்றும் அழைக்கப்பட்டதாகப் பாவலர் சரித்திர தீபகம் மூலம் அறிகிறோம். வண்ணார்பண்ணைச் சிவன்கோயிற் தாசிகளிலொருத்தியாகிய கனகி என்பவள்மீது பாடப்பட்டது, கனகி புராணம்.

சித்திர மறையோர் வீதி சிறந்திடும் வண்ணையூர்க்குக்
கத்தனும் வைத்தீசர்க்குக் கனத்ததோர் நடனஞ் செய்யும்
குத்தர மனத்த ளாகுங் கொடியிடை கனகி நூற்குப்
பித்தனு யுலாவு மராலிப் பிள்ளையான் காப்ப தாமே.

என்னுங் காப்புச் செய்யுள் காண்க.

கனகி புராணம் பற்றிக் கூறவந்த அ. சதாசிவம் பிள்ளை "அப்பாடலில் முன்பின் நானூறு விருத்தங்கள் உண்டென்று கேள்விப்பட்டோம்" என்பர்.1 நூலமைப்புப்பற்றி அவர் யாதும் கூறவில்லை. பாடல்

---

1. பாவலர் சரித்திர தீபகம் (1886) பக். 156

மாதிரிக்குத் தமது ஞாபகத்திலிருந்த மேல்வரும் விருத்தத்தைத் தந்தார்:

காட்டுக்குயிலைக் கடிதோட்டிக் கனத்த நாவினெய்
தடவி
மாட்டு மினிய சொல்லாளே மானேதேனே
கனகமின்னே
ஒட்டைக்காதினுட னிருந்தங்குவந்தே புடைவை
விற்கின்ற
நாட்டுக்கோட்டைச் செட்டிகளுள்
நல்லாண்டப்பனிவன் காணே.2

யாழ்ப்பாணத்து நவாலியூர் ந. சி. கந்தையா பிள்ளை நீர்வேலி வாசராகிய சீ. சிற்சபேசன் தமது ஞாபகத்திலிருந்து எழுதியளித்த செய்யுள்களைத் தொகுத்துத்தந்துள்ளார். "கனகி புராணம் (தெரிகவிகள்)" என 1937 ஆம் ஆண்டு வெளிவந்த இத் தொகுப்பு சென்னை (தியாகராய நகர்)ஒற்றுமை ஆபீஸ் வெளியீடாக சென்னை (புரேட்வே) சத்தியநேசன் பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது.

கந்தையாபிள்ளை காப்புச்செய்யுளையடுத்து நாட்டுப்படலம் (16 செய்யுள்கள்), சுயம்வரப்படலம் (11 செய்யுள்கள்) வெட்டைகாண்படலம் (ஒருசெய்யுள்) என உட்பிரிவுகளையமைத்துத் தருகின்றார். கனகி புராணம் முற்படக் கிளந்த படலங்கள் மூன்றினை மட்டுமே கொண்டது என்றோ அன்றி வேறு படலங்களையும் உடைத்தாகவிருந்ததென்றோ இன்று கூறமுடியாத நிலையிலுள்ளோம். வட்டுக் கோட்டை

2. இப்பாடலை பிரதிபேதங்களுடன் ந. சி.. கந்தையாபிள்ளையும் மு. இராமலிங்கமும் 'சுயம்வரப்படலத்'திற்கு உரியதாகக் கொண்டனர்.

மு. இராமலிங்கம் பதிப்பித்த கனகி புராணத்திற்கு முன்னுரை வழங்கிய க.ச. அருணந்தி, கந்தையா பிள்ளையின் பதிப்பில் நாட்டுப்படலத்திலுள்ள பதினறு செய்யுள்களும் சுப்பையனுர் அவர்களுடையனவல்ல என்றும் அவற்றின் ஆசிரியர் நீர்வேலி சி. சிற்சபேசனே என்றுங் கூறியுள்ளார். இராமலிங்கம் பதிப்பிலே கந்தையாபிள்ளை நாட்டுப்படலத்திலே சுப்பையனுருடையனவாகக் கொண்ட மேல்வரும் பதினறு செய்யுள்களும் இடம்பெறவில்லை.

புற்றில் வாழர வம்புனை யுங்கதிர்க்
கற்றை வார்சடைக் கண்ணுத றன்னருள்
பெற்ற வண்ணைப் பெரும்பதி தன்னிலங்
குற்ற நாட்டுவள முரைசெய் குவாம்.

பார்கெழு வெம்மை நீங்கப் பரந்துயர் தருக்களெல்லாஞ்
சீர்கெழு செழுமை பூப்பச் செப்புநல் வளங்களோங்கக்
கார்கெழு பருவம் வாய்ப்பக் கடைசியர் களிகொண்டாட
நீர்கெழு மாரியாறு நிவந்தது கரை புரண்டே.

நீர்பெருக் கெடுத்த லாலே நெல் விளைத்திடுவார் தங்கள்
ஏருடைத் திடுமென் றஞ்சி யெங்கெங்கு மணைசெய் காட்சி
சீருடைச் செல்வி பிட்டுத் தின்று தின்றடைக்குங் கங்கை
யாறுடைச் சடைகொ ளண்ண லாயிரர் நிற்ப போலும்.

புல்லை மேய்ந்தங்கு நின்று திமிர்புரி யிடபக் கன்று
முல்லை சார்வழி யதாக முடிமிசைக் குடைகைக்
கொண்டு
செல்லுவார் தம்மைக் கண்டு சினந்து வாலெடுத்து
மூசிக்
கல்லையுங் கயிற்றி னேடு காட்டிடை யிழுத்துச்
செல்லும்.

இரவியி னிரத மீர்த்திடு மெழு
புரவிகள் தெற்றடி புகையுளை பாய
வருண னதற்கிடை வருவ னென்றஞ்சித்
துரவி லிறைத்த துலாக்கொடி விட்டார்.

அல்லைக் காட்டிய கருங்குழ லரிவையர் புருவ
வில்லைக் காட்டியே விழிக்கணை
தொடுத்திடும் விரகை
முல்லைக் காட்டிடை மொய்யளி முரன்றெழு
முகையாம்
பல்லைக் காட்டியே பழித்திடும் பார்புகழ் புறவம்.

உப்பளத் துறையுந ருப்புட னூர்புகுந்
திப்புறத் தவர்தமக் கீந்துபின் வயலிடைத்
தப்பறக் களைபறித் திரவிசாய் போதுகாய்
முப்பழத் தோடுபல மூலமுங் கொள்வரே.

ஆனிரை முன்செலப் பின்செலு மாயர்கள்
வேனில் வெப்பாறவே கைதைவெண் மலருடன்
தேனிடைப் பெய்தவீச் சங்களிச் செய் யலூன்
தானளிப் பார்கடல் சார்ந்துவாழு நருமே.

தாலத்திஞேலே சாத்தித் தங்கிளே பரப்பி நின்ற
வேலொத்த முட்க ளோங்கி மென்குழை விரித்து
வீசி
ஞாலத்தின் மலர்சிவந்த நலம்பெற விளங்க லாலே
கோலத்தின் மாதர் போலக் குலவின முருக்கின்
சாலம்.

## மகளிர் புனலாடச் செல்லல்

நஞ்சன விழியாரும் வஞ்சிநல் லிடையாருந்
துஞ்சிடை யுடையாருந் துவரிதழ் வாயாரும்
பஞ்சின் மெல்லடியாரும் பலதுறை படிவாரும்
அஞ்சன மிடுவாரும் அடியடி பெயர்வாரும்.

கொண்டலே நிகர்வாரும் குயிலொடு பயில் வாரும்
வண்டுறை யணேவாரும் வரைபொரு முலேயாருஞ்
செண்டுகளணி வாருஞ் செங்கனி மலர்வாருங்
கண்டு கண்டு களிப்பாரும் கடைவிழி நோக்காரும்.

குங்கும மணிவாருங் கோதைகள் புனேவாரும்
திங்களே யிகழ்வாருந் தென்றலோடெதிர் வாரும்
தங்கிய வழகாருந் தளிர்பலர் கொய்வாரு
மங்கள நடையாரு மனங்களொ டெதிர்வாரும்.

கயல்களு மயர்ந்தன காவி சோர்ந்தன
புயல்களு மறுகின புறவும் பூவையும்
அயலுற நடந்தன வன்னந் தன்ஞெடு
குயில்களு மயில்களுங் கூவி யோடின.

செக்கர் மேலேச் செறிந்தது கண்டுவான்
புக்க மாடப் புறவொடு பூவைகள்
தொக்க தன்னினந் துன்னி விரிபொழிற்
பக்க மெய்திப் படர்கிளே மேவுமே.

ஆவி யாய வருக்க னகன்றனன்
வாவி வாழ்கம லங்கள் வருந்தலீர்
கூவியேகொழு நற்குறிப் பேனெனத்
தாவியே சிறைச் சேவல் தழங்குமே.

தெங்கு வாழை பூகஞ் செறிந்துமேல்
மங்கு றன்னினம் வந்து வீழ்தலால்
தங்கு கோதை மாமஞ்ஞை தன்னினம்
எங்கு மாடிடு மியல்பு கொண்டதே.

கந்தையாபிள்ளை பதிப்பிலே சுயம்வரப் படலத்திலே இடம்பெறும் பதினெரு பாடல்களிலே பத்துப்பாடல்கள் இராமலிங்கமவர்கள் பதிப்பிலே பிரதி பேதங்களுடன் காணப்படுகின்றன. இராமலிங்கமவர்கள் அனுபந்தமாகக் கந்தையாபிள்ளை பதிப்பிலே இடம்பெறும் பதினெரு பாடல்களிலே பத்துப் பாடல்களைத் தந்துள்ளார். கந்தையாபிள்ளையின் சுயம்வரப்படலத்திலே பதினேராவது பாடல் பாதிச் செய்யுளாகவே காணப்படுகின்றது. அப்பகுதி மேல் வருகின்றது;

.................................................................
.................................................................
பாமரு மாலை பாடிட வல்லோன் பகர்ந்திடும்
மதனநூல் கற்றேன்
காமரு கோப்பா யுறையு மூத்தப்பு கன்னிநீ
காணுதி யென்ருள்.

கனக. செந்திநாதனவர்கள் எழுதிய 'கனகிபுராணத்தில் சிலபாடல்கள்' என்னுங் கட்டுரையிலே இப்பாடல் முழு உருவத்துடன் காணப்படுகின்றது.[3]

---

3. கலைச்செல்வி (ஆனி, 1960)

தாமரை குமுதம் மலையுடன் அகிலும் தண்முகம்
வாய்தனங் கூந்த
லாமென உவமை படைத்திடு கனகே
அனநடைவாய் மொழிக்குயிலே
பாமருமாலே பாடிட வல்லோன் பகர்ந்திடு மதன
நூல் படித்தோன்
காமரு கோப்பாய் உறையு மூத்தப்பு கன்னிநீ
காணுதி யென்றாள்.

வட்டுக்கோட்டை மு. இராமலிங்கமவர்கள் சிவங் கருணலய பாண்டியனாருடைய உரையுடன் கனகி புராணத்தைக் கொழும்பு சுதந்திரன் அச்சகத்திற் பதிப்பித்து 1961 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இப்பதிப்பிற்கு மூலாதாரமான கையெழுத்துப் பிர தியைக்கொடுத்துதவியவர் வவுனியா நகரசபைத் தலை வராக விளங்கிய காலஞ்சென்ற முகாந்திரம் பி. தர்மலிங்கம் அவர்கள். இப்பதிப்பிலும் பிள்ளை யார் காப்பினைத் தொடர்ந்து நாட்டுப்படலம் (2), சுயம்வரபடலம் (19), வெட்டை காண்படலம்(3) என உட்பிரிவுகள் மூன்று இடம்பெறுகின்றன.

இராமலிங்கமவர்கள் பதிப்பிலே நாட்டுப்படலத் திற்குரியனவாகச் செய்யுள்கள் இரண்டு தரப்பட்டுள் ளன. இவை இரண்டும் கந்தையாபிள்ளையவர்கள் பதிப்பிலே முகவுரையில் இடம்பெற்றுள்ளன. இவ்விரு பாடல்களுள் முதற்பாடல் மேல்வருகின்றது:

தடித்தடி பரந்திட் டெழுந்து பூரித்துத்
தளதளத் தொன்றோ டொன்றமையா
தடர்த் திமையாத கறுத்த கணதனால்
அருந்தவத் தவருயிர் குடித்து

வடத்தினு ளடங்கா திணைத்த கச்சறுத்து
மதகரிக் கோட்டினுங் கதித்துப்
படத்தினும் பிறங்குஞ் சுணங்கணி பரந்து
பருமித்த துணைக் கனதனத்தாள்.

இப்பாடல் நாட்டுப்படலத்திற்கு உரியது என்று திடமாகக் கூறமுடியாது. கனகி பற்றியதாயின் வேறொருபடலத்திற்குரியதாகலாம். மற்றைய பாடல் கா.சுப்பிரமணியபிள்ளையவர்களின் உரையுடன் வழங்கும் தனிப்பாடற்றிரட்டு இரண்டாம்பாகத்தில் இடம் பெறுகின்றது. அப்பாடல் கனகிபுராணத்திற்குரியது தானாவென்பது ஆராயத்தக்கது. சுயம்வரபடலத்திற் கந்தையாபிள்ளையவர்கள் பதிப்பிற் காணப்பட்ட பத்துப்பாடல்களுடன் மேலும் ஒன்பது செய்யுள்கள் இராமலிங்கமவர்கள் பதிப்பிலிடம்பெறுகின்றன.4 வெட்டைகாண் படலத்திலே கந்தையாபிள்ளை பதிப்பிற் கண்ட பாடலுடன் மேலும் இரு பாடல்கள் இராமலிங்கமவர்கள் பதிப்பில் இடம் பெறுகின்றன. இவ்விரு பாடல்களுள் இரண்டாவது பாடல் கந்தையாபிள்ளையின் பதிப்பில் முகவுரையிற் காணப்படுகின்றது. கா. சுப்பிரமணியபிள்ளையின் உரையுடன் வழங்கும் தனிப்பாடற்றிரட்டு இரண்டாம் பாகத்தில் வேதநாயகம் பிள்ளையின் பாடலாக இது காணப்படுகின்றது.

---

4. இவ்வொன்பது செய்யுள்களுள் இரண்டொழிந்தவை (16,21) கனக. செந்திநாதன் எழுதிய 'கனகி புராணத்தில் சில பாடல்கள்' என்ற கட்டுரையிற் பிரதி பேதங்களுடையன வாகக் காணப்படுகின்றன.

கனக. செந்திநாதனவர்கள் 'கனகி புராணத்தில் சில பாடல்கள்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் மேல்வரும் பாடல்கள் கனகிபுராணத்திற்குரியனவாகக் கூறுவர்:

கன்னங் கருங்குயில் வல்லிதன் மார்பிற் கதித்
தெழுந்து
தென்னங் குரும்பையின் சாயல் கண்டூர்
திரண்டோடி விம்மி
பொன்னங் கலசங்கள் போலே இருந்த நற்
பூந்தனங்கள்
இன்னந் தளர்ந்திடு மென்றே மனங்
கிடந்தேங்குவதே.

அங்கவர் சூடும் மாலையே காலை ஆதவன் போல
மற்றங்கு
தங்கிய வணிகர் சிறுர்முக மெல்லாந் தடவரைக்
குவளையே போன்ற
பங்கமே கிடைத்த தென்றெண்ணிப்
பாதகிதனக்கு நாமிப்போ
எங்கெதைச் செய்வோம் என்று கொண்டெண்ணி
ஏங்கினர் இதயமும் வேருய்.

நன்னி சின்னையனோடே நலங் கிள ருடுவிலானும்
கன்னனே யனையகாசி நாதர்தங் காளைதானும்
இன்னிவர் நால்வரோடே ஏற்றிளஞ்
சிங்கமென்னப்
பன்னகம் போலச் சீறிப் பதைத்தனர்
வணிகமைந்தர்.

நன்னியர் உறியறுத்தார் நடுவிலார் பூண்டு
கொண்டார்
சின்னியோ டொன்றி விட்டார் செங்கை
யொன்றில்லாச் சொத்தி
முன்னுளோர் கதையைக் கேட்டு முத்தரும் அகஞ்
சலித்தார்
நன்னிய கனகி பாடும் நடுராசி யாச்சுதன்றே.

நட்டுவன் ஒருவனலே நாடகசாலை வந்தாள்
செட்டியில் ஒருவன் பட்டான் சேணியர் இருவர்
பட்டார்
மட்டுவில் குருக்கள் பட்டார் கொக்குவிற் சுப்பன்
பட்டான்
மட்டிகள் இவரைப் போலப் பட்டவர் பலபேர்
அந்தோ.

அங்கதமாக எழுதப்பட்ட பழைய தமிழ் நூல்களில் ஒன்ருகிய கனகிபுராணம் முழு உருவத்துடன் பேணப்பட்டிருந்தால் இன்று நாம் பெருமைப்பட்டிருக்கலாம். ஆனல் ஈழத்து இலக்கியத்தின் சிறப்பை எடுத்துரைக்க, உரைகல்லாக அமையக்கூடிய இவ்வரிய செல்வம் சிதைந்த வடிவிலேயே காணப்படுகின்றது. சிதைந்த நிலையிலும் அதன் மாண்பு அறிஞராற் போற்றப்படத் தக்கது என்பதைக் கூறவேண்டுவதில்லை.

# சாதி நிர்ணய புராணம்

வல்லை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச.வயித்தியலிங்கபிள்ளை யாழ்ப்பாணத்தின் வடபாலுள்ள வல்வெட்டித்துறை (வல்லுவெட்டித்துறை, வல்லிபட்டித்துறை) என்னும் ஊரினர். சங்கரநாதன் என்பவர் இவர் தந்தையென்பது, சி.வை. தாமோதரம்பிள்ளை நாற்கவிராசநம்பியின் அகப்பொருள் விளக்கவுரைப் பதிப்பிற்களித்த மேல்வரும் சாற்றுகவியாற் புலனுகின்றது.[1]

மண்ணுலகுபுகழ்கதிர்காமன்றனயன்சபாபதி
வேள்வல்லைநாடன்
நண்ணருநாற்கவிராசநம்பியகப்பொருள்விளக்க
ஞாலத்தோங்கத்
தண்ணறுஞ்சொற்சுவைபெருகத்தருகவுரையென
வகுத்தான்றமிழ்நூல்வல்ல
பண்ணவன்வைத்தியலிங்கபண்டிதன்சங்கரநாதன்
பயந்தோனன்றே.

இவர் உடுப்பிட்டி அ.சிவசம்புப்புலவரின் மாணுக்கர். தமது ஆசிரியரைக் கொண்டே சிந்தாமணி நிகண்டிற்கும் நாற்கவிராசநம்பியின் அகப்பொருள்விளக்கத்திற்கும் சிறப்புப்பாயிரம் பாடுவித்துள்ளார். இவர் 'சைவாபிமானி' என்ெருரு பத்திரிகை நடத்திவந்தார். தமது ஊரிலே ஒரச்சியந்திரத்தை நிறுவித்துத்தமது பத்திரிகையையும் நூல்களையும் பிறரியற்றிய நூல்களையும் அச்சியற்றினுர். இவர் சுபகிருது வருடம் மாசி

---

1. சங்கரக்குரிசில் என்பர் வித்துவான் சி. கணேசையர்

மாதம் (1843) பிறந்து வாழ்ந்து சர்வாரி வருடம் ஆவணி மாதம் (1900) மரணத்திரையான் மறைக்கப்பட்டார்.

இவர் பாடிய நூல்களிலொன்றே சாதிநிர்ணய புராணமாகும். சாதிநிர்ணயபுராணம் என்னும் நூலானது புராணமெனப் பெயர்பெற்ற போதினும் புராணவிலக்கணங்கள் அமைந்த நூலல்ல. இந்நூல் 'சாதிபேதம்' என்று பெயர் பெறுவதே பொருத்தமெனத் தோன்றுகின்றது. ஆசிரியர் தாமும்,

நலம்பயிலுமைகண்காணநாகமும்புலியும்போற்ற
நிலம்பயிலுயிர்கள்பாசநீங்கிடநீங்காக்கங்கை
யலம்புசெஞ்சடைகடாழவம்பலத்தாடுமையர்
சிலம்பணிகமலம்போற்றிச்செப்புவன்சாதிபேதம்
(காப்பு 2)

எனவும்,

வேதநால்வகைதெரித்தவியாதனுருரைத்தநூலும்
காதலார்மிருதியும்வைகாசனமென்னுநூலுஞ்
சூதசங்கிதையுமெங்கோன்சுப்பிரபேதமென்றே
யோதுமாகமமுங்கொண்டேயுரைப்பன்யான்
சாதிபேதம். (3)

எனவுங் கூறியுள்ளார். உலகநீதியியற்றிய உலகநாதன் என்பவர் சாதிபேத விளக்கம் எனவொரு நூலியற்றியுள்ளதாக அறிகிறோம். வயித்தியலிங்கபிள்ளையவர்களும் தமது நூலில்,

''புவனியிற்கலியின்வன்மைபொருந்தலிற்
சாதிபேதத்
தவர்தமவொழுக்கங்குன்றுதறநெறியொழுகுமாறு
தவநெறியுலகநாதன்றமிழினூற்றருகவென்னச்
சிவனருள்கருதியானுஞ்செப்பிடத்
தொடங்கினேனால்'' (2)

எனவும்,

அலகிலாச்சாதிபேதத்தவர்நெறியோங்கிவாழி
பலகலையாகமங்கள்பார்மிசைதழைத்துவாழி
திலகமாய்புவியனைத்துஞ்சிவமயமாகவந்த
வுலகநாயகன்றன்கீர்த்தியுலகினில்வாழிவாழி (86)

எனவும் உலகநாதன் ஒருவரைப் போற்றியுள்ளார். சாதிபேத விளக்க ஆசிரியரையே வல்லை வயித்திய லிங்கபிள்ளையவர்கள் சுட்டுகிருர் என்று கருத இடமுண்டு.

சாதிநிர்ணய புராணமென்னும் நூலிலே வயித்தியலிங்கபிள்ளையவர்கள் பல்வேறு சாதிப்பிரிவுகளின் நிர்ணயத்திலீடுபடுகிருர். ஆயினும்,

பண்டையநூலிற்கூறும்பன்னருஞ்சாதிபேதத்
தொண்டுளபெயர்களிந்நாட்டுன்றுதலின்மையாலே
கண்டுளசிலவற்றைத்தாங்கருத்தினிலுணர்ந்
துரைத்தா
மண்டியவனைத்தும்யாரேவகுத்திடவல்லாரன்றே.

என்று கூறியுள்ளார்.

இந்நூல் காப்புச்செய்யுள்கள் இரண்டினையும் 86 ஏனைய செய்யுள்களையுங் கொண்டு விளங்குகின்றது.

சாதிநிர்ணய புராணம் வயித்தியலிங்கபிள்ளை மாணுக்கர் பொ. ஞானசபாபதிப்பிள்ளையியற்றிய சாதி விளக்கம் என்னும் வசனநூலுடன் சேர்த்து அச்சிடப்பட்டுள்ளது.

வயித்தியலிங்கபிள்ளை ஏனைய நூல்கள் சிலவற்றின் ஆசிரியராகவும் உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் காணப்படுகின்ருர். இவரியற்றிய சிந்தாமணி நிகண்டு உரையுடன் சென்னைத் தண்டையார்ப் பேட்டைபு.சு.கிருஷ்ணசுவாமிபிள்ளையவர்கள் இலஷ்மீ

விலாஸ அச்சுக்கூட்டத்திலே தாது வருடம் சித்திரை மாதம் (1876) பதிப்பிக்கப்பட்டது. செல்வச்சந்நிதி முறை, வல்லை வயித்தியேசர் பதிகம், வல்லை வயித்யேசர் ஊஞ்சல் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளாரெனத் தெரிகின்றது. நாற்கவிராச நம்பியின் அகப்பொருள் விளக்கமூலமும் "அதன் பழையவுரை வாக்கியங்களுட் பலர்க்கும் பயன்படற்குரியவற்றைத் தழுவி வெளிப்படையாக்கி" வயித்தியலிங்கபிள்ளையவர்கள் இயற்றியவுரையும் வல்லை க. சபாபதிப்பிள்ளையவர்களாற் சென்னையில் 1878ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. இப்பதிப்பிலே பொய்யாமொழிப்புலவர் பாடிய தஞ்சைவாணன் கோவையும் இணைக்கப்பட்டுள்ளது. இவர் சின்னத்தம்பிப் புலவரின் கல்வளையந்தாதிக்கு எழுதியபதவுரை பாரதீநிலைய முத்திராட்சரசாலையிலே சர்வசித்து வருடம் ஆவணி மாதம் (1887) வெளியிடப்பட்டது. இவர் கந்தபுராணத்திலே அண்டகோசப்படலம், தெய்வயானை திருமணப்படலம், வள்ளியம்மை திருமணப்படலம், சூரபன்மன்வதைப்படலம் ஆகிய படலங்களுக்கு உரையெழுதியுள்ளார். கந்தரலங்காரத்திற்கும் இவருரையெழுதியுள்ளார். வரதபண்டிதரின் சிவராத்திரி புராணத்தை 1878ஆம் ஆண்டிலச்சிட்டார். சூடாமணி நிகண்டின் முதற்பத்துத் தொகுதிகளையும் சென்னைத்தண்டையார்ப்பேட்டை பு.சு.கிருஷ்ணசுவாமிபிள்ளையவர்கள் இலஷ்மீ விலாஸ அச்சுக்கூடத்தில் யுவ வருடம் ஆவணி மாதம் (1875) பதிப்பித்துள்ளார். திருக்குறள், நல்வழி, மூதுரை ஆகியனவற்றின் மூலமும் இவராற் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

வயித்தியலிங்கபிள்ளையவர்கள் சி. வை. தாமோதரம்பிள்ளை எழுதிய சைவமகத்துவம் என்னும் நூலுக்கெழுந்த கண்டனங்களை மறுத்தெழுதியவர்களிலொருவராவர். சைவமகத்துவத்தையும் அதனை ஆதரித்தும்

எழுந்த நூல்களையும் கண்டித்து சைவமகத்துவதிக்காரம், சைவமகத்துவதிமிரபானு, சைவமகத்துவத்திக்காரநிக்கிரக எதிரேற்று முதலிய கண்டனங்கள் எழுந்தன. சைவமகத்துவத்தை ஆதரித்தும் அதனைக்கண்டித்த நூல்களை மறுத்தும் சைவமகத்துவதிக்காரமகத்துவம், சைவமகத்துவபானு, சைவமகத்துவபா[illegible]பாலம் பனவியாபாதனம், இருள்மதியடுசுடர், சைவமகத்துவா பாசவிளக்கமறுப்பு, சைவமகத்துவதிக்காரநிக்கிரகம் முதலிய நூல்கள் எழுந்தன. வயித்தியலிங்க பிள்ளை சைவமகத்துவபானு எழுதினார். அஃது மூன்று பாகங்களையுடைத்து.

# சிதம்பரசபாநாத புராணம்

யாழ்ப்பாணத்துக் கோப்பாயென்னும் ஊரில் சுயம்புநாதபிள்ளையின் புதல்வராய் அவதரித்தவர் சபாபதிநாவலர். சமயத்தோடு தமிழ்த் தொண்டும் செய்த சபாபதிநாவலர் தமது ஐம்பத்தெட்டாவது வயதிற் சிதம்பரத்திலே 1903 ஆம் ஆண்டிலே இறைவனடி சேர்ந்தார். கோப்பாய் ஜெகந்நாதையர், நீர்வேலி சங்கரபண்டிதர், ஆறுமுகநாவலர், வித்துவசிரோமணி ந.ச.பொன்னம்பலப்பிள்ளை முதலியவர்களிடம் கல்வி பயின்றார். சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே தமிழாசிரியராக அமர்ந்து வருடங்கள் சில சென்றபின் திருவாவடுதுறையை அடைந்து அவ்வாதீனத்தில் அருளுபதேசம் பெற்று வித்துவானுகத் திகழ்ந்தார். திருவாவடுதுறையாதீனத்தில் நாவலர் பட்டமும் மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மகாவித்துவான் பட்டமும் பெற்றவர். சென்னையிற் சித்தாந்த வித்தியானுபாலன யந்திரசாலை நிறுவியவர். ஞானமிர்தம் என்னும் பத்திரிகையை நடத்தியவர்.

சபாபதிநாவலரவர்கள் இயற்றிய புராணம் சிதம்பரசபாநாத புராணமாகும். இப்புராணம் சிதம்பர மான்மியம் ஐந்தினுள் ஒன்றான ஏமசபாநாத மான்மியத்தின் மொழிபெயர்ப்பாயுள்ளது.

அருள்பெருக்கு மேமசபா நாதமான் மியமதனை
யாய்ந்து நீநற்
பொருள்பெருக்கு முயர்தமிழாற் புராணமுறை
கூறுகெனப் புலமை சான்ற

தெருள்பெருக்கு நடராசன் றிருவடிக்கன்
புடைமறையோர் செப்பு மாற்ற
லொருவழிப்பட் டெழுமாசை நனிதூண்டத்
தமியேனீ துரைக்க லுற்றேன்.

என்னும் அவையடக்கச் செய்யுள் காண்க.

சிதம்பரசபாநாத புராணம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியனவற்றின் சிறப்புரைக்கும் தலபுராணமாகும் தலபுராணமாகிய இந்நூலிலே ஆசிரியர் சைவாகமங்களின் நுண்பொருள்களை வகுத்து வேண்டியவாறு போதிக்கும் பெற்றியைக் காணலாம். சோழநாட்டின் மாண்பினையும் தில்லையின் சிறப்பினையும் திருநாட்டுப் படலம், திருநகரப்படலம் ஆகியவற்றிலே விதந்தோதிய நாவலரவர்கள் அடுத்து நைமிசாரணிய வனத்திலேயுள்ள மாதவருக்கு மாமுனிவர் கூறுமாறு போன்று நூலை அமைக்க விரும்பி நைமிசைப்படலம், புராண வரலாற்றுப்படலம் ஆகியனவற்றை அமைத்துள்ளார். பிச்சாடனப்படலம் முதலாக யாத்திரோற்சவப் படலமீறாக மாமுனிவர் கூற்றாகத் தில்லையின் மாண்பு விரித்துரைக்கப்படுகின்றது. பாயிரம் நீங்கலாகப் பதின்மூன்று படலங்களையுடைய சிதம்பரநாத புராணத்தில் 893 செய்யுள்களுள என்பர்.

சிதம்பரநாதபுராணம் பார்த்திப வருடம் வைகாசி மாதம் (1886) அச்சாயிற்று.

சபாபதிநாவலரவர்கள் வசனமாகவும் செய்யுளாகவும் நூல்கள் பலவற்றை இயற்றியுள்ளார். இந்நூல்களிற் சில மொழிபெயர்ப்பு நூல்களாம். சில கண்டன நூல்களாம். நூலாசிரியராக விளங்கியதோ டமையாது பதிப்பாசிரியராகவும் நாவலர் திகழ்ந்தார்.

இவரியற்றிய வசனநூல்கள் திராவிடப்பிரகாசிகை (1889), சிவகர்ணாமிர்தம் (1885) சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் (1876), இலக்கணவிளக்கப் பதிப்புரை மறுப்பு (1894), வைதிக காவிய தூஷணமறுப்பு, ஞானாமிர்தம் முதலியனவாம். இவற்றுள் சிவகர்ணாமிர்தம், சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் ஆகியன வடமொழியிலுள்ள நூல்களின் மொழிபெயர்ப்பாம். பாரததாற்பரிய சங்கிரகம் (1884) இராமாயணதாற்பரிய சங்கிரகம் (1884), யேசுமதசங்கற்பநிராகரணம் (1882), திருச்சிற்றம்பல யமகவந்தாதி (1876), திருவிடைமருதூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி (1889), ஞானசூடாமணி, மாவையந்தாதி, சிதம்பரபாண்டியநாயக மும்மணிக்கோவை, வடகோவைச்செல்வவிநாயகர் இரட்டை மணிமாலை, நல்லைச் சுப்பிரமணியக்கடவுள் பதிகம், வதிரிநகர்த்தண்டபாணிக்கடவுள் பதிகம், புறவார் பனங்காட்டூர்ப் புறவம்மை பதிகம் முதலியன செய்யுள் நூல்கள். இவற்றுள் பாரததாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம் ஆகியன மொழிபெயர்ப்பு நூல்களாம். யேசுமதசங்கற்ப நிராகரணம், இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு, வைதிக காவியதூஷண மறுப்பு முதலியன கண்டன நூல்களாம். நாவலர் தமது அச்சியந்திரசாலையிற் சிவஞானமுனிவரின் சிவசமவாத உரை மறுப்பினைப் பதிப்பித்து (1893) வெளியிட்டனர்.

# திருக்கழிப்பாலைப் புராணம்

**யா**ழ்ப்பாணத்து நீர்வேலியென்னும் ஊரினர் ச. சிவப்பிரகாசபண்டிதரவர்கள். நீர்வேலி சிவசங்கர பண்டிதரின் (1829-1870) சிரேட்ட புத்திரராவர். மறைசைக்கலம்பகம் பாடிய ச. பீதாம்பரப்புலவரின் மருகராவர். விஞ்ஞானவர்த்தனி என்னும் பத்திரிகையை வித்துவான் சபாபதிப்பிள்ளை, சு. சி. சுந்தரம் பிள்ளை என்பவர்களோடு நடாத்திக் கொண்டிருந்த சிவகுருநாதபிள்ளையின் தமையனாராவர். நீர்வேலியிலே சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவியவர் தந்தையின் அச்சிடப்பெறுதிருக்கும் நூல்களைப் பதிப்பித்தற்கும் சிவதல யாத்திரை செய்தற்குமாக இந்தியா சென்று தலங்கள் பலவற்றைத் தரிசித்து வேதாரணியத்தில் வாசஞ்செய்திருக்குங்கால் ஆனந்த வருடம் மார்கழி மாதம் (1914) மரணத்திரையான் மறைக்கப்பட்டனர். மேல்வருஞ் செய்யுள்களிலே சிவபிரகாச பண்டிதரவர்கள் தமக்கு சிவதீக்கை புரிந்தவரையும் சங்கதமும் தமிழும் போதித்தவர்களையும் போற்றுகிறார்.

அடியேற்குச் சிவதீக்கை புரிந்தே யாண்ட
வருணமச்சி வாயதே சிகர்தாள் போற்றி
அடியேனைப் பரிவி னொடு பெற்றுப் பத்தோ
டைந்துவய தின்றுணையும் வளர்த்து நின்றே
அடியேனுக் கடியேதந் தல்லு மெல்லு
மாரியமுஞ் செந்தமிழுஞ் சிறிதே யூட்டி
அடியேனைச் சபையேற வைத்த ரன்ரு
ளங்கடைந்தசங் கரபண்டி தன்றாள் போற்றி.

விரவிளைய பருவத்தே சிறியனேனை
 விளக்கறிவை வளர்த்தருளென் றந்தை யான
குரவனவன் பரமனடி யடைந்தானாகக்
 குலவுதமிழ் மலைவுசில தீர்த்து வைத்த
பரவுபுகழ் மருவுறுசம் பந்தநாம
 பண்டிதனோ டாறுமுக நால லப்பேர்
உருமருவு குரவனெனு மிருவர்தாளு
 முலவாதென் னுளமீதி லுளவா நன்றே.
(திருக்கழிப்பாலைப் புராணம்,
கடவுள் வாழ்த்து, 15 - 16).

மேல்வருஞ் செய்யுளிலே தனக்குப் பண்டிதப்பேரளித்த பெரியாரைப் போற்றுகிறார்.

ஈசனார் கயிலை சேர்பரம் பரையா யிலகுகோ
 கழியில்வீற் றிருந்து
மாசபை யடியேன் பேசுப நியாச மகிழ்ந்துகேட்
 டுயர்ந்தபண் டிதப்பேர்
தேசறத் திருவாய் மலர்ந்தருள் செய்த திப்பிய
 சுப்பிரமணிய
தேசிகர் சன்னி தானமெய் வாக்குச் சேர்மன
 நேர்படப் போற்றி.
(திருக்கழிப்பாலைப் புராணம்,
கடவுள் வாழ்த்து, 17).

சிவப்பிரகாச பண்டிதர் இயற்றிய புராணமே திருக்கழிப்பாலைப் புராணமாகும். இப்புராணம் இந்திரகீலபுரப்பெயர்த் திருக்கழிப்பாலைப் புராணம் எனவும் அழைக்கப்படும். இதனைப் பாடுவித்தவர் திருக்கழிப்பாலைக்கோயிலின் தருமகருத்தராகிய சி. பழநியப்ப முதலியாரவர்கள். சிவப்பிரகாச பண்டிதர் சிதம்பரத்திற் றங்கியிருந்தகாலை, 1912ஆம் ஆண்டளவில் இப்புராணத்தைப் பாடினார் என்ப. சிதம்பரம் புகைவண்டி நிலையத்தின் தென்கிழக்கு மட்சாலை வழியாக இரண்டு மைல் சென்று சிவபுரியை

(திருநெல்வாயில்) அடைந்தால் அத்தலத்திற்குத் தென்புறம் திருக்கழிப்பாலைத்தலங் காணப்படும். திருக்கழிப்பாலை தேவாரம்பெற்ற பதிகளுள் ஒன்றாகும். இப்புராணத்திற்கு முதனூல் ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திர மான்மிய உத்தரகாண்டம் என்பர். மேல்வருஞ் செய்யுள் அம்முதனூலை சுட்டுவதாகும்:

இந்திர கீல நாம மிசைதிருக் கழிப்பா லைப்பேர்
வந்திரு சிவத்த லத்தின் மான்மிய மாரி யத்தின்
முந்துநூல் வழியே யானு மொழிபெயர்த்
திசைக்க வெண்ணல்
உந்தியைக் கரத்தி னீந்த வுன்னலே போலு மன்றே
(அவையடக்கம், 1).

இத்தலபுராணம் நைமிசாரணியத்திலுள்ள மாதவர் வேண்டச் சூதமுனிவர் கூறுவது போல அமைக்கப்பட்டுள்ளது.

கிளத்து மிந்திர கீலமா மத்தலங் கெழுமு
வளத்து மான்மியம் வழுவற முழுவதும்
வகுத்தெம்
உளத்து மாலற வுணர்த்தியின் றருளுவை
யுறுகார்க்
களத்து மாபதி கழன்மற வாவருட் கடலே
(புராணவரலாறு, 14).

திருக்கழிப்பாலைப்புராணத்தின் நூலமைப்பு கவனித்தற்குரிய தொன்றாகும். காப்பு, கடவுள்வாழ்த்து, அவையடக்கம், திருச்சோழநாட்டுச் சிறப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து புராணவரலாறு கூறப்பட்டுள்ளது. புராணவரலாறு என்னும் பிரிவு பின்வரும் புராணப்பிரிவுகளுக்குத் தோற்றுவாயாக விளங்குகின்றது. அத்தோடு சங்கதநூலிற் கண்ட அமைப்புக்கு

இணைந்ததாகலாம். ஆயினும் சிவப்பிரகாசபண்டிதர் முன்னைய பெருநூல்களில் நாட்டு வருணனை கூறும் பகுதியிருப்பதை மனங்கொண்டு தமது புராணத்திலும் அதனை அமைத்துள்ளார். சோழநாட்டின் மாண்பினையும், காவேரியின் சிறப்பையும், சோணாட்டார் பெருமையையும் கூறிய ஆசிரியர்,

> ''இந்தநற் சோழ நாட்டி லினிதருள் சிவத்த
> லங்கள்
> வந்த பற்பல வவற்றுள் வரசிதம் பரத்தின்
> கீழ்பால்
> இந்திர கில நாம மிசைதிருக் கழிப்பா லைக்கு
> முந்துமா ரியபு ராண மொழிபெயர்த் தினிதி
> சைப்பாம்''

எனத் திருச்சோழநாட்டுச் சிறப்பு எனும் பகுதியை முற்றுவித்தலையுங் காண்க. காப்பு முதலாகத் திருச்சோழநாட்டுச் சிறப்பு ஈறுகவுள்ள பகுதியிலே 77 பாக்கள் இடம்பெறுகின்றன. புராண வரலாறு, தலவிசேடம், தீர்த்தவிசேடம், கபிலன்றவநிலை, இந்திரகிலநாமகரணம், கபிலனருட்பேறு, முடிபுரை என்னும் ஏழு பிரிவுகளிலே 199 பாக்களுள. எனவே திருக்கழிப்பாலைப் புராணத்தின் மொத்தப் பாடலெண்ணிக்கை 276 ஆகும்.

சிவப்பிரகாச பண்டிதர் பாடிய திருக்கழிப்பாலைப் புராண அவையடக்கத்திற் காணப்படும் மேல்வருஞ் செய்யுள்கள் கவனித்தற்குரியன.

> அற்றெனுஞ் சிவஞா னப்பே ரருமுனி புரிவி ருத்தி
> குற்றமென் றிற்றை ஞான்று குறைத்தொரு
> விருத்தி முற்றுங்

குற்றமே பற்றச் செய்யுங் குணமிலர்க் கிணையா
கேனுன்
மற்றத னிற்கற் றோர்தாம் வசைமொழி யிசையா
ரென்பால்
(3)

அல்லதா னுடைய பிள்ளை யாதியர் தமக்குப்
போல
நல்லரு ணமக்குண் டென்று நமதுதே வார
மென்றுஞ்
சொல்லிய புல்லர் போலத் தொடர்செருக்
குடையே னல்லேன்
வெல்லரும் பழிபா வங்கள் விரவிடா வதனு
லென்பால்
(4)

மறைவகை யறியார் சற்றும் வடகலை படியார்
முற்றும்
முறைதமி ழறிவே பெற்று முதல்வனு லதினு
மற்றுப்
புறமதத் தினர்நூல் போற்றும் புந்திசே ரந்த
ணுளர்
பிறரழுக் காற்ரு லின்னூற் பிழைசொல வீழைகு
வாரே
(6)

தங்காலத்துச் சம்பவங்சள் சிலவற்றை ஆசிரியர் ஈண்டு அமைத்துத் தந்துள்ளார். அவையடக்கப் பாடல்களிற் பொதுவாக இத்தகைய இயல்பு காண்ப தரிதாகும்.

திருக்கழிப்பாலைப் புராணத்தினைத் திருக்கழிப் பாலை தேவஸ்தான நிர்வாகியாகிய சிவசங்கர சின்னைய

முதலியாரவர்கள் சிதம்பரம் கிராஸ்வேடு பிரஸ்ஸில் அச்சிடுவித்து ஜயவருடம் (1954) வெளியிட்டனர்.

சிவப்பிரகாச பண்டிதரவர்கள் சிறப்புக்கவிகளும் கையறுநிலைச் செய்யுள்களும் பிறவுமாகப் பல பாடல் பாடியவர். இவர் வண்ணை சுவாமிநாத பண்டிதரது சிவஞானபோதமாபாடியப் பதிப்புக்கும் உரையாசிரியர். ம.க.வேற்பிள்ளையவர்களது வேதாரணிய புராணப் பதிப்புக்கும் சாவகச்சேரி ச. பொன்னம்பலபிள்ளை எழுதிய கந்தபுராண மார்க்கண்டேயப்படல விரிவுரைக்கும் கொடுத்த சிறப்புக்கவிகள் சிறந்த பொருளமைதியும் ஓசையுமுடையனவாய் விளங்குகின்றன. இவர் சங்கதத்திலும் பல வகைக் கவிகளியற்றியவர்.

•

பாலர்கள் படித்தற்கேற்றவாறு தமிழிற் பால பாடங்கள் சில எழுதிய சிவப்பிரகாச பண்டிதர் பாலாமிர்தம் என்னுமோர் வசனநூலியற்றியுள்ளார். கொக்குவில் சோதிடப் பிரகாச யந்திரசாலையிற் சுபகிருது வருடம் மாசி மாதம் (1903) பதிப்பிக்கப் பட்ட இந்நூலிலே தமிழ்க்கல்வி, சமஸ்கிருதம், தமிழ்ச் சங்கங்கள், போசன்கதை, தமிழ் இலக்கணங்கள், தமிழ் இலக்கியங்கள், வாசன புத்தகங்கள் முதலிய தலைப்பிற் கட்டுரைகள் பல காணப்படுகின்றன. சிறுவருக்கேற்ற முறையிலெழுதப்பட்டுள்ளன, இக்கட்டுரைகள். பாலாமிர்தத்தின் அனுபந்தமாக இயற்றமிழ் இலக்கண சாரமும் வாக்கிய நிருபணமும் இணைக்கப் பட்டுள்ளன. இயற்றமிழிலக்கண சாரத்திலே ஐவகை இலக்கணமும் இடம்பெறுகின்றன.

சிவப்பிரகாச பண்டிதர் உரையாசிரியராகவுந் திகழ்ந்தவர். திருச்செந்தூர்ப்புராணவுரை, கிருட்டிணன் தூதுச் சருக்கவுரையென்பன தமிழ் நூல்களுக்கு

இவர் எழுதிய உரைகளாம். சங்கத நூல்கள் சிலவற்றிற்கும் இவர் தமிழுரை கண்டுள்ளார். சிவானந்தலகரி தமிழுரை, நகுலேசுரமான்மியத் தமிழுரை, சைவாசௌசதீபிகைத் தமிழுரை ஆகியன காண்க.

தமது தந்தையின் சைவப்பிரகாசனம், மிலேச்சமதவிகற்பம், சிவதூஷணகண்டனம், சத்தசங்கிரகத்தின் பூர்வார்த்தம், தாதுமாலை முதலிய நூல்களைச் சிவப்பிரகாசபண்டிதர் அச்சிடுவித்துள்ளார்.

# புலியூர்ப் புராணம்

யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழையைச் சார்ந்த பன்னாலையென்னும் ஊரினைப் பிறப்பிடமாகக் கொண்டவர் வித்துவான் சிவானந்தையர். இவர் 1873 ஆம் ஆண்டு வரையிலே சபாபதிஐயர் மகனாக இப்பூவுலகிலே அவதரித்துத் தமது நாற்பத்து மூன்றும் வயதில் நளவருட மார்கழி மாதம்(1916) மரணத்திரையால் மறைக்கப்பட்டனர். சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடம் தமிழினையுஞ் சங்கதத்தையுங் கற்றவர். சிதம்பரம் பச்சையப்பன் ஆங்கில கலாசாலையிற் சில ஆண்டுகள் தமிழாசிரியராக விருந்தார்.

சிவானந்தையர் தமிழ் நாட்டிலேயுள்ள சிதம்பரத்தின் மான்மியத்தைப் புராண முறைமையிலே அமைத்துத் தந்த நூலே புலியூர்ப் புராணமாகும். இதற்கு முதனூலாகக் கொள்ளப்பட்டவை சூதசங்கிதை, வாசிட்டலிங்கம், பவிடியோத்தர புராணம், காந்தம் ஆகிய சங்கத நூல்களாம்.

ஓத நின்றபத் தொன்பதாம் படலங்க ளுள்ளுஞ்
சூத சங்கிதை யுட்படு முற்படச் சொல்லு
மேதந் தீர்வுறு மீரறு படலமு மென்பார்
மூதக் கோர்புகழ் வாசிட்ட லிங்கம்பன்
மூன்றே (பாயிரம், 2)

மன்று ளாடுவா ரூர்த்துவ தாண்டவ மாண்பு
நின்றி டும்பவி டியோத்தர புராணத்து நிகழ்ச்சி
நன்று பன்னைந்து காந்தத்து நவின்றது நயப்பா
டொன்று மேனைய நான்குமப் புராணத்து
ளூறுமால் (பாயிரம்,3)

என்னுஞ் செய்யுள்கள் காண்க.

புலியூர்ப்புராணம் தோன்றுவதற்குக் காரணமா யமைந்தவர் தெல்லிப்பழை க.தம்பையபிள்ளையவர் களென அவையடக்கத்தால் உணரலாம். மேலும்,

கருங்கடற் பரவை யாய கடுந்துயர்ப் பிறவி நீங்கி
வருங்கரை யாமெய் வீட்டுள் வைகவும் பெறுவே
னென்ன
நெருங்குறு மார்வந் தூண்ட நெடுமதிற்
புலியூர்ச் செல்வ
ரருங்கதை புராணஞ் செய்வா னறிவிலேன் முயன்ற
வாறே
(அவையடக்கம், 6)

என்பதனாலும் ஒரு காரணம் பெறப்படுவது காண்க.

புலியூர்ப் புராணத்தின் நூலமைப்பு கவனித்தற் குரியதொன்றாகும். காப்பு, கடவுள் வாழ்த்து, அவை யடக்கம், நாட்டுப்படலம், நகரப்படலம் ஆகியன வற்றை அமைத்து நகரப்படத்திறுதியிலே,

எத்திறத்து மிந்நகரத் தியன்முழுது
மெடுத்துரைக்குஞ்
சத்திபெற லெளிதேயோ சதகோடி நாக்கொண்டு
வித்தகர்பல் லோர்சொலினும் விஞ்சுமெழி
னகர்கடந்தாம்
பொத்தியபே ரருடெளிக்கும் புராணமினிப்
புகல்கிற்பாம் (154)

என்று கூறிய ஆசிரியர் அடுத்து நைமிசாரணியப் படலம் அமைத்து,

மடக்கொடி யிடப்பான் மருவுற மகிழ்ந்தோன்
வகுக்குநான் மறைப்பொருள் வாய்மை
திடப்படு காதை தெளிக்குநற் புராணஞ்
சேரமுன் பன்முறை தெளித்தாய்

கடப்படு மடியேந் தெளியவண் புலியூர்க்
காதையு மொழியெனக் கழற
முடப்படு மதியக் கண்ணியான் றிருத்தாண்
முன்னியச் சூதனு மொழியும் (31)

என அதனிறுதியிற் கூறிப் பின்பு பாயிரம் அமைக்கிறார். காப்பு முதலாகப் பாயிர மீறுகவுள்ள பகுதியிலே 373 செய்யுள்கள் காணப்படும். பாயிரத்தைத் தொடர்ந்து சிவலிங்கபூசனைப் பயனுரைத்த படலம் முதலாக திருவாதிரை விரதப்படலமீறுகப் பதினேழு படலங்களிலே 850 செய்யுள்கள் காணப்படுகின்றன. எனவே நாட்டுப்படலம், நகரப்படலம், நைமிசாரணியப்படலம் ஆகிய பிரிவுகள் யாவும் புலியூர்ப் புரணத்தின் புறம்பான பகுதிகளாம். நைமிசாரணியப் படலம் பின்வரும் படலங்களுக்குத் தோற்றுவாயாக அமைகின்றது. எனவே அதனையாசிரியர் பேணியமைத்தார். ஆனல் நாட்டுப்படலமும் நகரப்படலமும் இன்றியமையாத பகுதிகளல்ல. அவ்வாறிருப்பினும் ஆசிரியர் இவ்விரு படலங்களையும் அமைப்பதற்கு காரணமாயமைவது இலக்கிய மரபாகும். சீவகசிந்தாமணி முதலான காவியங்களிலும் கந்தபுராணம் முதலிய புராணங்களிலும் நாட்டு, நகர வருணனை அமைந்திருப்பதையுணர்ந்த ஆசிரியர் சங்கத நூல்களை மொழிபெயர்த்து அவற்றின் அமைப்பிற் பாடமுற்பட்ட போதும் இலக்கிய மரபைப்பேணி இவ்விரு படலங்களையும் அமைத்தார். பாயிரத்தை நைமிசாரணியப் படலத்திற்கும் சிவலிங்கபூசனைப் பயனுரைத்த படலத்திற்குமிடையில் வைத்தமை போன்று வேறு நூல்களில் வைப்புமுறை யிருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும்,

"வழுக்கொண்டு புகன்று பின்னை வழுவமை
தியுங்கொண் டாங்கு
மழுக்கொண்ட புலியூர்க் கூத்தன்வரன் முறைப்
புராணந் தன்னுட்

குழுக்கொண்ட வென்சொற் குற்றங் கொள்ளினுங் குணமாக்கோட
லிழுக்கன்று மரபே யாகு மிலக்கணப் புலமை யோர்க்கே''
(அவையடக்கம், 10)

என்று சிவானந்தையர் கூறுவது போன்று அதனை வழுவமைதியாகக் கொள்ளலாம். ஏனெனின் ஆசிரியர் பாயிரத்தையிடையே வைத்து நூலினை அகமாகவும் புறமாகவும் பகுக்க விரும்பினர் போலும்.

கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இருபதில் ஒன்பது பாடல்களில் அகத்தியர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனர், மாணிக்கவாசகர், சண்டேசுரர், தில்லைமூவாயிரவர், ஏனையநாயன்மார் ஆகியவர்கள் போற்றப்பட்டுள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த திரிசிரபுரம் மகாவித்துவான் மீனட்சிசுந்தரம்பிள்ளையின் நூல்கள் சிலவற்றிலே கடவுள் வாழ்த்துப் பிரிவு நீண்டதாக அமைந்திருக்கும். அவரும் ஏனைய புலவர் சிலரும் கடவுள் வாழ்த்திலே நாயன்மார் முதலியவர்களையும் போற்றும் மரபை வலுவாக்கினர். சிவானந்தையர் அவ்வழியிலே நின்று கடவுள் வாழ்த்தினை அமைத்துள்ளார்.

நாற்கவிராசநம்பியின் அகப்பொருள் விளக்கத்தைப் பதிப்பித்த சிவானந்தையருடைய புலியூர்ப் புராணத்து நாட்டுப்படலத்திலே அவரது பொருள் இலக்கண அறிவு தெளிவாகத் தெரிகின்றது.

ஒன்ற முற்றிய வுரிப்பொரு ளவற்றினு முயர்வா
லென்று முற்படு புணர்ச்சிகைக் கொண்டமைக் கேற்ப
மன்ற மேம்படு மைவகைத் திணையுளு மாட்சி
குன்று ருநடு நாயக மாய்து குறிஞ்சி
(50)

உளம்படு புணர்ச்சிப் பின்ன ருறுமுறைப் பிரிவு
கொண்டு
களம்படு பொலிவுக் கேற்பக் காமரு புணர்ச்சி
கொண்டு
வளம்படு மலைக்கு றிஞ்சி மரீஇப்புறஞ் சூழ்ந்து
மாறாத்
தளம்படு வளங்கள் சாலத் தழைப்பது பழிப்பில்
பாலை
(62)

அன்பேறப் புணர்கொழுந ரகன்றவழி
யணங்கனையார்
வன்பேற விருத்தறமீஇ வயுங்குமுறை
மைக்கேற்பத்
துன்பேறு பிரிவேகொள் சுரஞ்சூழ்ந்து
புறங்கிடப்ப
தின்பேறு மாமாய னிருப்பேறு மலர்ப்புறவம்
(70)

முந்துமுறை யழிபிரிவான் முனிந்தூடன்
முறைதழுவி
நந்துமுறை மைக்கேற்ப நல்லார்த நண்பொருவா
வுந்துமுறைப் படுபிரிவா லுகந்திருத்த
லுறுமுறைமை
தந்துபொலி வளமுல்லை சார்ந்த மருந்
தடமருதம்
(84)

ஊடியு முணர்ந்துங் கூடா தொழிந்தவர்க் குறுமி
ரக்க
நீடிய முறைமைக் கேற்ப நெறிப்படு மூடல்
கொண்டு

பீடியல் வளம்ப முக்கும் பெரும்பணை மருதஞ்
சூழ்ந்து
நாடிய நயம்ப டைக்கு நளிகட னெய்தல் வேலி
(128)

ஐந்திணையையும் விளக்குமுகமாக நாட்டுப்படலத்தில் அமையும் பாடல்களிற் சில கற்பனை நயஞ் சிறந்து காணப்படுகின்றன.

வேங்கை யென்றுகொ லாரழற் கொழுந்தென
வெருவிப்
பாங்கு பூத்துகு கனிமலர் கைப்படப் பற்றா
தோங்கு மாமழை யுடுத்தெழு மாமலை யுச்சி
தூங்கு மாலைவெள் ளருவிநீர் கருமந்தி தூவும்
(54)

புறத்தவரு ணினுந்தமது புல்லியவூண்
புனிதமென
நெறிப்படுவார் பொருள்பறித்து நெடும்பதியுட்
புகுந்தலைத்து
மறத்துறைநில் லாமறவர்க் கறிவுகொளுத்
துவபோன்று
சிறைப்புறவம் பரன்மடுக்குஞ் செவ்வியது
திருத்துசுரம்
(66)

துள்ளியசிற் றன்கன்று தொறுவத்துட்
டொழுவியர் கைக்
கொள்ளுமணிப் பாற்குடந்தாய் கொழுஞ்
செருத்தலெனக் குறித்துத்
தள்ளியிடித் துடைத்தோடத் தடம்புறவந்
தொறுஞ்சாயும்
வெள்ளியபால் வழுக்கேறி விழுந்தழுங்குங்
குறியமுயல்
(74)

களம்படு கழைக்க ரும்பு கானற்பூங் கதிர்வேல்
காட்டத்
தளம்படு கந்தி வெண்பூஞ் சாமரை யெடுத்த
சைப்பக்
குளம்படு கமலப் போது கொழுஞ்சுடர்
விளக்கங் காட்ட
வளம்படு மருத மங்கை வைகலு மரசி ருக்கும்.
(92)

மலைகடுக்கும் புயப்பரவர் மறுபுலம்போ
நெடுவங்க
மலைகடற்பூம் புனலமுவத் தாங்ககன்று
மறைதோறு
நிலைபடக்கண் டுயிர்தாங்கு நேரிழையார்
முகக்கமலங்
கொலைபடுவேல் விழியுருக்குங் கொழுங்கடலுண்
மறைவாகும்.
(138)

புலியூர்ப்புராணத்தைத் தெல்லிப்பழை க த. பவளநாயகி அம்மையார் விரும்பியவாறு ஏழாலை ஐ. பொன்னையபிள்ளையவர்கள் தமது மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலையிலே தாது வருடம் சித்திரை மாதம் (1936) பதிப்பித்தனர். இப்பதிப்பிற்குச் சிறப்புப் பாயிரம் பாடிய புன்னாலைக்கட்டுவன் வித்துவான் சி. கணேசய்யரவர்கள் இந்நூற் பதிப்பிற்கு உதவியாக அமைந்திருந்தனர்.

பாயிரத்தினையும் அதற்கு முற்பட்ட பிரிவுகளையும் விட, சிவலிங்க பூசனைப்பயனுரைத்த படலமுதலாகப் பத்தொன்பது படலங்களாக இப்புராணம்

வகுக்கப்பட்டதெனப் பாயிரமூலம் அறிகிறோம். ஆனால் பதிப்பிக்கப்பட்ட நூலிற் சிவலிங்கபூசனைப் பயனு ரைத்தபடல முதலாக திருவாதிரைவிரதப்படலமீறு கப் பதினேழு படலங்களே காணப்படுகின்றன முக வுரையெழுதிய ஐ.பொன்னையபிள்ளையவர்கள் ''அவற் றுள் இருபடலங்கள் பிழையற எழுதப்படாமையினாலே பதிக்காமல் விடப்பட்டன'' என்று கூறியுள்ளார்.

வித்துவான் ச. சிவானந்தையரவர்கள் ஏனைய நூல்கள் சிலவற்றின் ஆசிரியராகவும் உரையாசிரிய ராகவும் பதிப்பாசிரியராகவும் காணப்படுகின்றார். புலியூரந்தாதி, சனிதுதி, நவக்கிரக கவசம் என்னும் நூல்களை இவர் இயற்றியுள்ளார். இவர் தருக்கசங் கிரக நூலுரைகளான நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம் பட்டீயம், அதனுரை நீலகண்டீயம் என் பனவற்றை மொழிபெயர்த்து கொக்குவில் சோதிடப் பிரகாசயந்திரசாலையிற் சாதாரண வருடம் (1910) பதிப்பித்தனர் திருக்குறளின் முதற் பத்ததிகாரங் களுக்குப் புத்துரையெழுதியுள்ளார்.[1] இவர் நாற்கவி ராசநம்பியின் அகப்பொருள் விளக்கத்தைப் பழைய வுரையுடன் கொக்குவில் சோதிடப்பிரகாச யந்திர சாலையிற் பராபவ வருடம் பங்குனி மாதம் (1907) பதிப்பித்தார். தசகாரியமும் இவராற் பரிசோதிக்கப் பெற்று வெளிவந்தது. சனிதுதியும் நவக்கிரககவசமும் நூலாசிரியர் காலத்திலேயே வெளிவந்துவிட்டன. புலியூரந்தாதி பற்றிய செய்திகள் அறிய முடியவில்லை.

---

1. புலியூர்ப்புராணம்: நூலாசிரியர் வரலாறு—பண்டிதர் ப. இரத் தினசாமி ஐயர் எழுதியது.

# சீமந்தனி புராணம்

வித்துவான் ச. பூபாலபிள்ளை மட்டக்களப்புப் புளியந் தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது தந்தை பெயர் சதாசிவப்பிள்ளையாகும். வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வயித்தியலிங்கபிள்ளையின் மாணுக்கராவார். மதுரைத்தமிழ்ச் சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு பூண்டு அதன் அங்கத்தவராகவும் பண்டித பரீட்சைக் குழு அங்கத்தவராகவுந் திகழ்ந்தவர் மதுரைத்தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையிலே கட்டுரைகள் பல வரைந்தவர். 1856 ம் ஆண்டளவிற் பிறந்த பூபாலபிள்ளையவர்கள் 1921 ம் ஆண்டு மரணத்திரையான் மறைக்கப்பட்டனர்.

வித்துவான் பூபாலபிள்ளை இயற்றிய நூலே சீமந்தனி புராணமாகும் சோமவாரவிரதத்தின் மேன்மையை எடுத்துரைக்கும் முகமாய்ச் சீமந்தனி வரலாறு கூறப்படுகின்றது. சித்திரவர்மனின் குமாரியாகிய சீமந்தனி சிறுவயதில் மங்கலநாண் இழப்பதைக் தவிர்ப்பதற்காகச் சோமவார விரதத்தை அனுட்டித்தனள். நிடததேச மன்னனும் சந்திராங்கதனை மணந்தவள். யமுனையில் நீராடும்போது பிலத்துவாரவழியே நாகலோகஞ் சென்றனன் சந்திராங்கதன். கணவன் மறைந்ததும் மங்கலநாணும் நீக்கப்பட்டது. ஆனுல் மீண்டு வந்த சந்திராங்கதன் புனர்வாழ்வளித்தனன்.

பொருவிறவ வியாசன் முன முரைப்பக் கேட்டுப்
புராணமுனி புகன்றசில தகதைடதம்மிற்
சுருதிமுத லாகமங்க ளனைத்துங் கூறுஞ்
சுடர்மதிநாள் விரதமதை மேனு ணேற்றுப்

பெருகுநலம் படைத்தவரிற் பெரும்பே
றுற்றபெட்புயர்சீ மந்தனியின் பிறங்கு காதை
வருமுறைமற் றறிந்தளவி லுரைப்பாங் கேண்மின்
வையகத்தீர் மங்களம்பெற் றிதமாய் வாழ்வீர்.
(பாயிரம், 10)

என்னும் பாவாற் சூதமுனி கூறிய கதையை அடிப்படையாகக் கொண்டு பூபாலபிள்ளையவர்கள் புராணத்தினை விரித்துரைக்கின்றார் என்பது புலனாகின்றது.

காப்புச் செய்யுள் ஒன்றும் பாயிரச் செய்யுள்கள் பத்தும் நீங்கலாகச் சீமந்தனி புராணத்திலே ஆரியவர்த்தச் சருக்கம் முதலாக பாவனைச் சருக்கம் ஈறுக அமைந்துள்ள பத்துச் சருக்கங்களிலே 789 செய்யுள்கள் காணப்படுகின்றன.

சீமந்தனி புராணத்திலே இன்பம் பயக்கும் பாக்கள் பொலிந்துள்ளன. நூலாசிரியரின் காவியப் பயிற்சியும் புராணவறிவும் நூலின் கண்ணுள்ள செய்யுள்கள் பலவற்றிலே தெளிவாகக் காணப்படுகின்றன. ஏனைய விரத மான்மியங்களைக் கூறும் புராணங்கள் சிலவற்றைப் போலன்றி இந்நூல் நலன்கள் நிறைந்து காணப்படுகின்றது

கொல்லும் வேல்விழிக் கோதைய ரோரையில்
வெல்ல வீசிய கந்துகம் விண்ணுறீஇச்
செல்லும் வெங்கதிர்க் கூவிரச் சில்லெற்றச்
சில்லொன் றெஞ்சச் சிதைந்தன போலுமால்.
(ஆரியவர்த்தச் சருக்கம், 27)

ஓடக் காண்பதங் கொள்ளிய தண்புனல்
வாடக் காண்பது வல்லியர் நுண்ணிடை

தேடக் காண்பது தெள்ளிய வண்புகழ்
பாடக் காண்பது பண்ணுயர் கீதமே.
(ஆரியவர்த்தச் சருக்கம், 32)

சீமந்தனி புர்ாணம் வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வயித்தியலிங்கபிள்ளையாற் பரிசோதிக்கப்பட்டு சென்னை - இட்டா நாராயண சாமி நாயுடு அவர்களது ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்தில் 1894 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. இந்நூற்பதிப்புக்கு வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வயித்தியலிங்கபிள்ளை, திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை, பூவை அட்டாவதானம் கலியாணசுந்தர முதலியார், அவர் மாணுக்கர் வல்லை சண்முகசுந்தர முதலியார் ஆகியோர் சிறப்புப் பாமிரம் பாடியுள்ளனர்.

வித்துவான் பூபாலபிள்ளை வேறு சில நூல்களின் ஆசிரியராகவும் விளங்குகின்றுர். நூலாசிரியராக விளங்கிய தோடமையாது இவர் உரையாசிரியராகவும் காணப்படுகின்றுர். பூபாலபிள்ளையியற்றிய விநாயக மான்மியமெனுஞ் செய்யுணூல் அவரது குமாரர் பூ.செ இராசரத்தினமவர்களால் 1905 ஆம் ஆண்டு கொழும்பு மீனும்பாள் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. திருமயிலாப்பூர் சே.வெ.ஜம்புலிங்கம் பிள்ளையவர்கள் வித்துவான் பூபாலபிள்ளை இயற்றிய தெய்வ சம்பந்தமான சிறு பிரபந்தங்கள் இருபதினைத் தெரிந்து முதற்பாகமாகப் பத்து நூல்களைத் தொகுத்துத் தோத்திரக் கோவை (முதற்பாகம்) எனத் தலைப்பிட்டு சென்னை கம்மர்ஷியல் பிரஸில் 1923 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார். இத்தொகுப்பில் கணேசர் கலிவெண்பா, சிவதோத்திரம், யாழ்ப்பாணத்து அரசடி விநாயகர் அகவல், சிவமாலை, பெரிய துறைத் திருமுருகர் பதிகம், மட்டக்களப்புப்

புளியநகர் ஆனைப்பந்திச் சித்தி விக்கினேசுரர் பதிகம், கண்டிநகர்க் கதிரேசர் பதிகம், மட்டுநகர்ச் செல்வ விநாயகர் பதிகம், கண்டிநகர்க் கதிரேசர் பதிகம், மட்டு நகர்க் கொத்துக் குளத்து மகாமாரி அம்மன் அந்தாதி, நல்லிசை நாற்பது ஆகிய பத்து நூல்கள் காணப்படு கின்றன. இத்தொகுப்பிற்கு ஐம்புலிங்கம் பிள்ளை எழுதிய முகவுரை மூலம் இந்நூல்கள் எழுந்த காலங்களையறிய முடிகின்றது. காப்புக்கலி விருத்த மொன்றும் ஆசிரிய விருத்தம் பத்து மடங்கிய பெரிய துறைத் திருமுருகர் பதிகம் 1882 ஆம் ஆண்டு பாடப் பெற்றது. காப்பு வெண்பா ஒன்றும் பத்து ஆசிரிய விருத்தங்களுமடங்கிய மட்டக்களப்புப் புளியநகர் ஆனைப்பந்திச் சித்தி விக்கினேசுரர் பதிகம் 1905 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. காப்புக் கலி விருத்தம் ஒன்றினையும் ஆசிரிய விருத்தம் பத்தினையும் 354 அடி களையுடைய ஆசிரியப் பாவொன்றினையும் பத்து எழுசீர் விருத்தங்களையும் கொண்ட சிவதோத்திரம் 1906 ஆம் ஆண்டளவிற் பாடப்பட்டது. காப்பு வெண்பா இரண் டையும் காப்பு ஆசிரியப்பா ஒன்றையும் ஆசிரியப்பா பத்தினையும் வாழிவிருத்தம் இரண்டையும் வாழி வெண்பா ஒன்றையுமுடைய கண்டிநகர்ச் செல்வ விநாயகர் பதிகமும், காப்புவெண்பா மூன்றும் ஆசிரிய விருத்தம் பத்தும் வாழி வெண்பா மூன்றும் இடம் பெறுகின்ற கண்டிநகர்க் கதிரேசர் பதிகமும் 1913 ஆம் ஆண்டு பாடப்பட்டவை. காப்பு வெண்பாக்கள் இரண்டும் நிந்தாஸ்துதியாகிய நாற்பது வெண்பாக் களும் வாழி வெண்பாக்கள் இரண்டும் இடம் பெறு கின்ற நல்லிசை நாற்பது 1919 ஆம் ஆண்டு இயற் றப்பட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பத்திரிகையிற் பிரசுரமானது. 82 அடிகளையுடைய யாழ்ப் பாணத்து அரசடி விநாயகரகவல் 1920 ஆம் ஆண்டு செய்யப்பட்டது. காப்பகவல் ஒன்றும் அகர

முதல் ஔகாரமீறுயுள்ள பன்னிரு எழுத்துக்கள் முதலில் வர அந்தாதியாகப் பாடப்பட்ட பன்னிரு விருத்தங்களும் வாழி விருத்தமொன்றும் தன்னகத்தே கொண்ட சிவமாலை 1921 ஆம் ஆண்டு இயற்றப் பட்டது. காப்புஉள்ளிட்டு 116 கலிவெண்பாக்களை யுடைய கணேசர் கலி வெண்பாவும், காப்பு வெண்பா ஒன்றினையும் நூறு கலித்துறையினையும் கொண்ட மட்டுநகர்க் கொத்துக் குளத்து மகாமாரி அம்மன் அந்தாதியும் 1922 ம் ஆண்டு பாடப்பட்டன. தோத் திர மஞ்சரியின் இரண்டாம் பாகம் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

வித்துவான் ச.பூபாலபிள்ளை எழுதிய தமிழ் வரலாறு என்னும் வசன நூல் 1920 ஆம் ஆண்டுக்குச் சரியான சித்தார்த்தி வருடம் பங்குனி மாதம் வெளி வந்தது. இந்நூல் இராமநாதர் அருளம்பலம் என்ப வரால் மட்டுநகர் சுத்தாத்வைத யந்திரசாலையிற் பதிப் பிக்கப்பட்டது. பாடையியல், இலக்கணவியல், இலக் கியவியல், ஒழிபியல் என நான்கு இயல்களிற் தமிழ் வரலாற்றைப் பூபாலபிள்ளை கூறுவர். இதே ஆண்டில் வெளிவந்த ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்களின் தென் மொழி வரலாறும் பூபாலபிள்ளையவர்களின் தமிழ் வரலாறும் சபாபதிநாவலரின் திராவிடப் பிரகாசிகை என்னும் தமிழ் வரலாற்றைப் பின்பற்றுகின்றன.

நவநீதகிருஷ்ண பாரதியார் இயற்றிய உலகியல் விளக்கம் என்னும் நூலுக்குப் பூபாலபிள்ளையவர்கள் அரியதொரு உரையெழுதியுள்ளார். பண்டிதர் மயில் வாகனம் (சுவாமி விபுலாநந்தர்) இந்நூலினையும் பூபால பிள்ளையியற்றிய உரையினையும் 1922 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கிளவ் அச்சியந்திரசாலையிற் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

# கந்தசட்டிப் புராணம்

நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் யாழ்ப் பாணத்து வட்டுக்கோட்டையைப் பிறந்தகமாகக் கொண்டவர். அடைக்கலங்கோவை, இராமேசர் வெண்பா, அருச்சுனன் நாடகம், சுபத்திரை நாடகம் முதலிய நூல்களையியற்றிய இ. நாகேசையரவர்களின்[1] மகனாக 1849 ஆம் ஆண்டளவிற் பிறந்தனர் என்ப. நாகேசையரவர்களின் தந்தையாகிய சு. இராமசாமி ஐயரவர்கள்[2] அல்லிநாடகம் முதலியவற்றை இயற்றி யவராவார். வட்டுக்கோட்டை மு. சிதம்பரப்பிள்ளை ஆசிரியரின் மாணாக்கராவர் சிவசுப்பிரமணியசிவாசாரி யர்[3]. கந்தசட்டிப் புராணத்திற்குச் சாற்றுகவி பாடி யவர்களிற் சிதம்பரப்பிள்ளையாசிரியரும் ஒருவராவர். சிவசுப்பிரமணியசிவாசாரியர் 1929 ஆம் ஆண்டு மர ணத்திரையான் மறைக்கப்பட்டனர்.

முருகனை வேண்டியியற்றப்படும் கந்தசட்டி விர தத்தின் மாண்பினையும் அவ்விரதத்தை நோற்கும் முறையினையும் அவ்விரதத்தாற் பயன்பெற்றோர் சரிதைகளையும் இந்நூலிற் காணலாம். சூராதிகள், பார்க்கவி, இந்திரன், அகத்தியர், தெய்வயானை முத லியவர்களின் சரிதங்கள் ஈண்டு இடம்பெறுகின்றன.

---

1. பாவலர் சரித்திர தீபகம். பக். 197–198.

2. ,, ,, ,, பக். 38.

3. ஈழகேசரி 12. 7. 1936 'என் காலம் போய்விட்டது' (15) முருகரம்மான் (மு. இராமலிங்கம்); மு. சிதம்பரப்பிள்ளையாசி ரியர் பின்பு வில்லியம் நெவின்ஸ் எனப்பெயர்பெற்றார்.

சிவசுப்பிரமணியசிவாசாரியர் இப்புராணத்தினைச் சூத முனிவர் மாதவருக்கு உரைப்பது போன்று நடத்திச் செல்கிறார்.

ஆதியாயனுவாயறிவாயொளிர்
சோதிதாள்பணிசூதமுனிவரன்
மாதவத்தர்மனமகிழ்வெய்தவே
நீதிசால்கந்தசட்டிநிகழ்த்துவான்

(கந்தசட்டிச் சருக்கம், 1)

என்னும் பாவினைப் போன்ற பாக்கள் பல இவ்வியல் பினை உணர்த்தி நிற்கின்றன. ஆசிரியர் புராணத்திற்கு முதனூலாகக் கொண்டனவற்றை மேல்வருஞ் செய் யுள்கள் விளம்பாநிற்கின்றன.

அருள்பொழிசவுனகாதியருந்தவர்க்குவந்துசூதன்
தெருள்வழிந்தொழுகச்சொற்றதிருவளர்
புராணமாகும்
பொருள்வழிகாந்தத்துள்ளும்பொருவில்
பல்லாகமத்தும்
இருளழியடியார்கோட்டியிசைத்திடு
பனுவலுள்ளும்.

கருதரும்விரதராசங்கவுத்துபமாதியாக
விரிபலவிரதங்கூறுமேன்மைசானூல்களுள்ளுங்
குருகுலாமவுணற்செற்றகுமரவேள்கந்தசட்டித்
தெரிகதைநியதியாவுந்திரட்டிநன்பொருள்
செறித்தே.

(முகவுரை 1-2)

இந்நூல் அரங்கேறிய காலத்தை மேல்வருஞ் செய்யுள் சுட்டுகின்றது.

புண்ணியகந்தசட்டிப்புராணமாயிரத்தொ
டெண்ணூ
றெண்ணியசகாத்தமேழிலிசைமீனமத்தநாளில்
வண்ணநீளிலங்கைவட்டூர்வளர்தெக்கிணு
லயத்துக்
கண்ணலிங்கேசர்முன்னர்க்கவின்ற
ரங்கேறிற்றன்றே.
(முகவுரை, 7)

கந்தசட்டிப்புராணத்திலே காப்புச் செய்யுளொன்றும் வாழ்த்துச் செய்யுளொன்றும் கடவுள்வாழ்த்துப் பாக்கள் மூன்றும் முகவுரைப் பாடல்கள் ஏழும் நீங்கலாகக் கந்தசட்டிச் சருக்கம் முதலாககந்தசட்டி வரைவுறுத்த சருக்கம் ஈருகவுள்ள எட்டுச் சருக்கங்களிலே 998 செய்யுள்கள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை வே. சதாசிவப் பிள்ளையவர்கள் கந்தசட்டிப் புராணத்தைச் சென்னையிலே தாம்சன் கம்பனியாரின் வெ. நா. ஜுபிலி யந்திரசாலையில் 1895 ஆம் ஆண்டுபதிப்பித்துள்ளார்.

சிவசுப்பிரமணிய சிவாசாரியர் நூல்கள் பலவற்றையும் தனிப்பாடல்கள் பலவற்றையும் பாடியுள்ளார் எனத் தெரிகின்றது4. நூலாசிரியராக விளங்கியதோடமையாது பதிப்பாசிரியராகவும் இவர் காணப்படுகிருர். தென்கோயிற் புராணம், விநாயக சட்டிப்புராணம், ஏகாதசிப்புராணம் முதலிய புராணங்களையும் இவர் பாடியுள்ளார். தென்கோயிற் புராணம், விநாயகசட்டிப்புராணம் ஆகியன அச்சிடப்பட்ட

4. ஈழகேசரி 12. 7. 1936 "என்காலம் போய் விட்டது."– முருகரம்மான் (மு. இராமலிங்கம்).

தாகத் தெரியவில்லை. ஏகாதசிப் புராணம் அச்சிடப் பட்டதாகக் கூறப்படுகிறது. ஆயினும் அந்நூற் பிரதிகள் கிடைக்குமாறில்லை நல்லூர் கைலாசநாதர் பேரில் ஒரு புராணம் பாடியுள்ளார் என்று கூறுவர். அந்நூலும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. மேலும் சைவமகாபுராணத்தை மொழிபெயர்த்துப் பாடத் தொடங்கி முற்றுவிக்காது தமது எண்பதாவது வயதில் இறையடியடைந்தார் என்பர். புராணங்களேயன்றி வேறு நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவர் பாடிய சிவமாலை இவருடைய குமாரர் அனந்த சுப்பிரமணியஐயரால் யாழ்ப்பாணம் விவேகானந்த அச்சியந்திரசாலையில் சார்வரி வருடம் ஆடிமாதம்(1900) பதிப்பிக்கப்பட்டது. வட்டுக்கோட்டை வே.சதாசிவம் பிள்ளை சென்னை ஸ்கொட்.டிஸ் அச்சியந்திரசாலையிலே இவரது வெள்ளிக்கிழமை விரதம் என்னும் நூலை சுபானு வருடம் ஆவணி மாதம் (1883) பதிப்பித்தார். இவரது சுப்பிரமணியர் தோத்திர விருத்தம் எண்பத்துநான்குசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தமாகப் பாடப்பட்டு அச்சிடப்பட்டது. தமது தந்தையைப் போன்றும் பேரனைப் போன்றும் இவர் நாடகத் தமிழிலும் ஈடுபாடுடையவர். இரத்தினகூடவிலாசம், ருக்மாங்கதவிலாசம், வலைவீசுவிலாசம் முதலியனவற்றை இவர் இயற்றியுள்ளாரென அறிகிறோம். இவற்றோடு கோயில்கள் பலவற்றிற்கு ஊஞ்சற்பாக்களும் ஆசிரியவிருத்தங்களும் பாவிகற்பங்கள் கொண்ட சரமகவிகளும் பாடியுள்ளார்.

நெல்லைநாதர் பாடிய சிவராத்திரி புராணத்தைச் சிவசுப்பிரமணிய சிவாசாரியர் ''பலஏட்டுப் பிரதிகளை ஆதாரமாய்க் கொண்டு திருத்திச் சென்னபட்டணத்தில் அச்சிடுவித்தனர்'' என்பர் பாவலர் சரித்திர தீபகம் எழுதிய அ. சதாசிவம்

பிள்ளை[5] அப்பதிப்பிலே பாயிர அத்தியாயம் உட்பட வுள்ளஐந்து அத்தியாயங்களுக்கும் 303 விருத் தங்கள் உண்டென்பர் சதாசிவம்பிள்ளை.

யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் 1910 ஆம் ஆண்டு வே.சதாசிவம்பிள்ளையவர்களால் இரண்டாம் பதிப்பாகச் சிவராத்திரி புராணம் ஒன்று பதிப்பிக்கப் பட்டுள்ளது. இந்நூலாசிரியர் யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டை நா.சிவசுப்பிரமணிய சிவாசாரியர் எனக் கூறப்பட்டுள்ளது.

வட்டுநகர் வாழ்சுப்ர மண்யசிவா சாரியனுஞ்
சிட்டன் கவிதையாற் செய்தளித்தான்-
இட்டமொடு
செய்ய வடசொற் சிவராத் திரிபுராணம்
வையகத்திற் செந்தமிழின் மாட்டு

எனச் சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் சாற்றுகவி பாடியுள்ளார். இப்பதிப்பிலே பாயிரத்திலே ஏழு செய்யுள்களும் சிவநிசிச்சருக்கம் முதலாகச் சிவநிசி நிரூபணச் சருக்கம் ஈறாகவுள்ள ஆறு சருக்கங்களிலே 294 பாக்களும் காணப்படுகின்றன. எனவே பாயிர முட்பட இப்பதிப்பிலே 301 செய்யுள்கள் உள.

அ.சதாசிவம்பிள்ளை கூறிய சிவசுப்பிரமணிய ஐயரின் பதிப்பில் ஐந்து அத்தியாயங்களில் 303 பாடல்கள் காணப்பட வே.சதாசிவப்பிள்ளை கூறிய சிவசுப்பிரமணியசிவாசாரியார் நூலிலே ஏழு அத்தி யாயங்களிலே 301 செய்யுள்கள் காணப்படுகின்றன.

---

5. பக். 201; பக் 250

வே. சதாசிவப்பிள்ளை பதிப்பித்த இரண்டாம் பதிப்பிற்குரிய சிவசுப்பிரமணிய சிவாசாரியரின் சிவ ராத்திரி புராணத்தின் முதற் பதிப்பு கிடைக்கவில்லை. கிடைத்திருப்பின் அம்முதற் பதிப்புக்கு சிவசுப்பிர மணிய சிவாசாரியர் ஆசிரியரா பதிப்பாசிரியரா வென்பது தெளிவாகும்.

ஈழகேசரியிலே(12 7. 1936) மு இராமலிங்கமவர் கள் ''நெல்லைநாதர் சிவராத்திரி புராணத்தை இவர் அதிகரித்து அச்சிடுவித்தார்'' என்று கூறியுள்ளார். பாடலெண்ணிக்கை அதிகரித்ததாகத் தெரியவில்லை. சருக்கங்களே அதிகரித்துள்ளன. போலும். பாவலர் சரித்திரதீபக ஆசிரியர் எடுத்துக் காட்டும் இரண்டு பாக்களை வே. சதாசிவப்பிள்ளை பதிப்பிலே காண முடியவில்லை. அப்பாடல்கள் மேல்வருகின்றன.

மறைதொழுஞ்சிவராத்திரிமான்மியம்
அறிவின்மிக்கவருந்தலர்க்காரிய
முறைசொல்சூதன்மொழிந்தனனற்றமிழ்த்
துறையிலோதினன்சூழ்நெல்லைநாதனே

அண்டரண்டமழித்துலகேழையும்
கொண்டலேழுங்குரைகடலேழுமே
மண்டியேறிமலைந்தபின்மாதவன்
பண்டுபோலப்படைக்கவென்றெண்ணினன்.

சிவராத்திரி புராணத்திற்குச் சிவசுப்பிரமணிய சிவா சாரியர் நூலாசிரியரா அல்லது பதிப்பாசிரியராவென் பது கவனித்தற்குரியதாகும். சிவராத்திரி புராணத்தை

வசனரூபமாகச் செய்த வட்டுக்கோட்டை க. குருமூர்த்தி ஐயரவர்கள் நெல்லைநாதநாவலர் இயற்றிய சிவராத்திரி புராணத்தை ஏனைய சிவராத்திரி விரத மகிமை கூறும் நூல்களுடன் கூறுகின்றாரேயொழிய தமது ஊரினர் சிவசுப்பிரமணிய சிவாசாரியர் இயற்றியதாக வே. சதாசிவப்பிள்ளை கூறும் சிவராத்திரி புராணத்தைக் கூவில்லையென்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது.

# கதிர்காம புராணம்

யாழ்ப்பாணத்து வதிரி என்னுமூரினர் நாகலிங்கம் பிள்ளை. சின்னத்தம்பியின் புதல்வராகிய இவர் வதிரி சி.தாமோதரம்பிள்ளையின் தம்பியாவார். இந்தியா விலே சில ஆண்டுகள் வாழ்ந்தவர். 'ஞானசித்தி' என் னும் பத்திரிகையை தமையனாரின் வியோகத்திற்குப் பின்பு தொடர்ந்து நடத்தியவர். வதிரியிலே அச்சி யந்திரசாலையொன்றினை நிறுவி தமது பத்திரிகையை யும் நூல்களையும் ஏனைய நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டவர். 1882ம் ஆண்டிலே பிறந்த நாகலிங் கம்பிள்ளையவர்கள் 1952 ம் ஆண்டிலே வியோகமடைந் தார் என்பர்.

வதிரி சி. நாகலிங்கம்பிள்ளையவர்கள் பாடியதே கதிர்காமபுராணமாகும். ஈழத்தின் தென்பகுதியிலே கதிர்காமம் என்னும் தலத்திலே கோயில்கொண்ட முருகப்பெருமானின் மாண்பினை எடுத்துரைப்பது கதிர்காமபுராணம். பதினெண்புராணங்களுளொன்றா கிய காந்தத்திலுள்ள தட்சிணகைலாச மான்மியத் தைத் தழுவிக் கதிர்காமபுராணம் பாடப்பட்டுள்ளது என்பதை மேல்வரும் புராணவரலாறு கூறும் செய் யுள்களால் அறியலாகும்.

பரமனார் பார்ப்ப திக்குப் பகர்ந்தது பரிவி னந்தி
வரமுடன் சனற்கு மார மாமுனிக் குணர்த்த
வன்னான்
அருளூறு வியாதற் கோத வவன்கிடை
யாகுஞ்சூதன்
தெருளுட னுணர் மூவாறு தொல்கதை
தன்னுண்மாதோ.

பலர்புகழ் காந்த மாகுநற் புராணம்
பகருந்தெக் கிணகயி லாச
நலம்பெறு கின்ற மான்மிய மேலா
நவில்கதிர் காமமா புகழை
யுலகினிற் றமிழை யுணர்வுறு மாந்த
ருணர்ந்திடு மாற்றினி னீடிக்
குலவுசெந் தமிழாற் கூறுகே னெஞ்சிற்
குலவிய விருப்புடன் மன்னோ.

முற்கிளந்த பாடல்கள் இரண்டும் கதிர்காமபுராணம், தட்சிண கைலாசமான்மியத்தின் மொழிபெயர்ப்பு என்று கொள்ள இடந்தரினும் அவ்வாறு கொள்வதினும் கதிர்காமபுராணம் தட்சிணகைலாச மான்மியத்தைத் தழுவி இயற்றப்பட்டதென்று கூறலே பொருத்தமாகும். சூதமுனிவர் செய்தியுடன் தொடங்கும் நைமிசப்படலத்திற்கு முன்பதாக நூலாசிரியர் ஆற்றுப்படலம், திருநாட்டுப்படலம், திருநகரப்படலம் என்பனவற்றை அமைத்துள்ளார். இம் மூன்று படலங்களும் தமிழ்மொழியிலெழுந்த தலபுராணங்களை நோக்கி அமைக்கப்பட்டனவாம். சங்கதமொழியிலுள்ள புராணங்கள் இவ்வாறு அமைக்கப்படவில்லை என்று கூறுவர். தமிழ் நாட்டுத் தலபுராணங்களைப் பின்பற்றி ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப் படலம் அமைத்த நூலாசிரியர் தொடர்ந்து வருகின்ற நைமிசப்படலத்திலே சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்கு, அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கிக் கதிர் காமத்தின் மாண்பினை எடுத்துரைக்கும் பான்மையில் நூலை வழி நடத்துகிறார். மேல்வருஞ் செய்யுள்கள் காண்க.

பலவகை யறங்கள் யாவையு முன்னம் பான்மையி
னுணர்ந்தநம் பெரியோய்
நலமலி புராணம் யாவையு நின்பா னன்குற
முன்னமே கேட்டோம்

நிலமிசை யினிமேற் கேட்பதே தென்று
நினைத்திடின் யாதொன்றுமில்லை
யலகிலாப் பெருமை வாய்ந்துள தாகி யணிபெறு
மிருகயி லாசம்.
(நைமிசப்படலம், 18)

உளவென முன்ன முரைத்தனை நீயவ் வுயர்வுறு
மிரண்டினி லொன்று
வளமலிந் துளதென் கைலையா மென்ன வகுத்தனை
யங்கதிற் செவ்வேள்
பளகறு புகழின் பெருமையைப் பகரும் பகுதியைக்
கேட்குறு மாசை
யளவதான் கடந்தோ டுற்றதங் கதனை யருள்செய
வேண்டுமென் றிரந்தார்.
(நைமிசப்படலம், 19)

நைமிசாரணிய வாசிகளின் வேண்டுகோளுக் கிணங்கி சூதமுனிவர் நைமிசப்படலத்திலே கதிர்காம புராணத்தினைச் சுருக்கியுரைக்கின்றார். அச்சுருக்கத் தின் விரிவே தொடர்ந்து வரும் படலங்களாம்.

மன்னியநான் மறைத்தவர்கள் மற்றதுகேட்
டுளமகிழ்ந்து
மின்னுபுக ழோய்தொகுத்த கதைவிரித்துக்
கூறுகெனத்
துன்னுகளிப் பாற்சூத முனிவரன்சொன்
னனதனைப்
பன்னுதமி ழானன்கு மொழிபெயர்த்துப்
பாடலுற்றேன். (41)

என்பது நைமிசப்படலத்தின் ஈற்றுச் செய்யுளாம். பாயிரம் அல்லது பதிகம் போல் விளங்கும் நைமிசப்

படலத்தைத் தொடர்ந்து திருவவதாரப் படலம் முதலாக மாதர் அருள்பெறுபடலம் ஈறுக பதினுலு படலங்கள் இடம் பெறுகின்றன. எனவே ஆற்றுப் படலம் முதலாக மாதர் அருள்பெறுபடலம் ஈறுக பதினெட்டுப்படலங்கள் காணப்படுகின்றன. இப்பதி னெட்டுப்படலங்களிலே 720 செய்யுள்களுள. ஆற்றுப் படலத்திற்கு முன்பதாக 22 செய்யுள்களுள. இச் செய்யுள்களிலே விநாயகர் காப்பு, கடவுள் வாழ்த்து, புராணவரலாறு, நூற்பயன், அவையடக்கம் ஆகியன கூறப்படுகின்றன.

கதிர்காமபுராணம் பருத்தித்துறை சரஸ்வதியந் திரசாலையிலே 1932 ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது. இப்பதிப்பிற்கு புலோலி ம.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், அல்வாய் க.சின்னத்தம்பி உபாத்தியாயர் முதலியோர் சாற்றுகவி வழங்கியுள்ளனர்.

வதிரி சி.நாகலிங்கம்பிள்ளையவர்கள் தட்சிண கைலாச புராணம் (1928) என்னும் வசன நூலையியற்றி யுள்ளார். திருநெல்வாயிற்புராணம் (1934), திருவை கற்புராணம் (1942), திருத்திலதைப்பதிப் புராணம் முதலிய புராணங்களையும் இயற்றியுள்ளார்.

# திருநெல்வாயிற் புராணம்

வதிரி சி. நாகலிங்கம்பிள்ளையவர்கள் பாடிய புராணங்களுளொன்றே திருநெல்வாயிற் புராணம்.

தேவாரம் பெற்ற திருநெல்வாயில் என்னும் தலம் சிவபுரி என்று வழங்கப்படுவதாகும்.

திருநெல்வாயிற் புராணம் நைமிசப்படலம் முதலாகத் தீர்த்த விசேடப்படலம் ஈறுகப் பதின்மூன்று படலங்களை உடைத்து. இப்பதின்மூன்று படலங்களிலே 540 செய்யுள்கள் இடம்பெறுகின்றன. நைமிசப் படலத்திற்கு முன்பதாக இருபத்தாறு செய்யுள்களிலே காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம் ஆகியன கூறப்படுகின்றன.

நைமிசப்படலத்திலே நைமிசாரணியத்தின் மாண்பினை எடுத்தோதிய ஆசிரியர்,

> அத்தகு திருநெல் வாயி லரியமான் மியத்தை யீங்கே
> யுத்தம வன்பி னுலே யுரைக்குதுஞ் சுருக்கி முன்னர்த்
> தத்துவ முணர்ந்த கேள்வித் தவமுனி வரரே யென்றுன்
> வித்தக ருய்ந்தோ மென்றுர் விளம்புவன் சூதன் மன்றே (24)

எனச் சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளின் வேண்டுகோளுக்கிணங்கி திருநெல்வாயில் மான்மியத்தைக் கூறத்தொடங்குவதாகக் கூறுவர். இதனைத் தொடர்ந்து வருகின்ற படலத்தை ஆசிரியர் 'பதிகம்' என்றே

பெயரளித்து அழைக்கின்ருர். ஏனெனில் பதிகத்திலே திருநெல்வாயில் மான்மியத்தின் சுருக்கம் கூறப்பட்டுள்ளது. அதன் விரிவு அடுத்து வரும் தலவிசேடப் படலம் முதலாகத் தீர்த்த விசேடப்படலம் ஈருகக் கூறப்பட்டுள்ளது. சங்கத மூலத்தோடு ஒட்டிய அமைப்பினை ஆசிரியர் திருநெல்வாயிற்புராணத்திலே பின்பற்ற முயன்றுள்ளார் என்று கூற இடமுண்டு. கதிர்காமபுராண அமைப்பினையும் திருநெல்வாயிற் புராண அமைப்பினையும் ஒப்பு நோக்குவார்க்கு இவ்வுண்மை புலனுகும்.

திருநெல்வாயிற் புராணம் நூலாசிரியராலே தமது கரவெட்டி வடக்கு ஞானசித்தியந்திரசாலையிலே 1934ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது. இப்பதிப்பிற்கு அச்சுவேலி ச.குமாரசுவாமிக்குருக்கள் முதலியோர் சாற்றுகவி வழங்கியுள்ளனர்.

# திருக்கரைசைப் புராணம்

திருக்கரைசைப்புராணம் செய்தவர் யாவரென்பது புலப்படவில்லை. பாயிரத்திலே இடம்பெறும் மேல்வருஞ் செய்யுள்களை ஆதாரமாகக் கொண்டு நூலாசிரியர் பற்றிக் கருத்துரைப்பர்.

அண்டர்பிரானடமாடுந்தில்லைமணிமன்ற
தனிலகலாதென்றும்
விண்டசிவசித்தாந்தவேதாந்தப்பொருள்
விளக்கும்விளக்கமாகித்
தொண்டறியாநாயேனுக்கருள்புரிந்துகிளைமுழுதுந்
தொழும்புகொண்ட
எண்டகுசீரீசானச்சிவன்மலர்த்தாண்
மறவாதென்னிதயந்தானே.
(10)

அக்கணமேதாபனஞ்செய்தல்விறைக்குச்
சூதமுனியருளிச்செய்த
மிக்கதிரும்வடபாடைப்புராணத்தைத்தென்
கலையின்விருத்தப்பாவாற்
றிக்கிசையவருந்தொண்டர்செய்தியெனவென்
னறிவுஞ்சிறிதுசேர்த்தி
ஒக்கவுரைத்தனன்கொற்றங்குடிவாழும்பிரான்
சரணத்துறுதிகொண்டே.
(13)

திருக்கரைசைப் புராணத்திற்குப் பொழிப்புரை கண்ட சுன்னாகம் அ.குமார சுவாமிப்புலவரவர்கள், ''ஈசானச் சிவன் என்றது உமாபதி சிவாசாரியரைப் போலும். சங்கற்பநிராகணப்பாயிரத்திலே உமாபதி சிவாசாரியர் சிதம்பரத்திலே தேர்மண்டபத்திலிருந்து மாயாவாதி முதலிய சமயிகளை வாதஞ் செய்துவென்று

வேதசிவாகமப் பொருளைத் தாபித்தார் எனப் பெறப் படுதற்கேற்ப இங்கே 'மன்றதனிலகலாதென்றும், விண்டசிவசித்தாந்த வேதாந்தப்பொருள் விளக்கும் விளக்கமாகி" எனக் கூறுதலானும் பின் புராண வர லாற்றிலே 'கொற்றங் குடிவாழும் பிரான் சரணத் துறுதிகொண்டே' எனக் கூறுதலானும் பெறப்படும். பெறவே இந்நூல் செய்தோர் அவர் சீடர் என்பாரு முளர்" என்றுரைத்தார். இப்புராணத்தின் பதிப்பா சிரியர் திரிகோணமலை வே.அகிலேசபிள்ளையவர்கள் நூலாசிரியர் பற்றிக் கூறுமிடத்துச் "சிலர், உமாபதி சிவாசாரியர் பரம்பரையினுள்ளார் ஒருவர் என்பர்" எனப் பகர்ந்தார். இந்நிலையில் நூலின் காலமும் புலப்படுமாறில்லை.

திருக்கரைசைப் புராணததுறகு முதனூல வட மொழியிலுள்ளது என்ற செய்தி முன்பு குறித்த பாயிரத்திலுள்ள 13 ஆம் செய்யுளாற் புலனுகின்றது. 'சூதமுனியருளிச்செய்த மிக்கதிரும்வடபாடைப் புரா ணத்தைத் தென்கலையின் விருத்தப்பாவால்' பாடி யமை கூறுகின்ற ஆசிரியர் அம்முதனூற் பெயரைச் சுட்டவில்லை.

இப்புராணம் திரிகோணமலைக்குச் சமீபமாய் மாவலிகங்கைக்கரையிலுள்ள 'அகத்தியத்தாபனம்' என்று வழங்கப்படுகின்ற கரைசையம்பதியில் எழுந் தருளியிருக்குஞ் சிவலிங்கப் பெருமானுடைய மகத்து வங்களை விரித்துக் கூறுகின்றது. சிவபெருமானின் திருக்கல்யாணத்தைக் காணத் தேவரும், முனிவரும், சித்தரும், இயக்கரும், கந்தருவரும் பிறரும் திருக்கை லாசமலையை அடைந்தார்கள். இதனுல் வடபூமி தாழவும் தென்பூமி சமனில்லாமலுயரவும் ஏது ஏற் பட்டது. இந்நிலையை மாற்ற, இரு பூமியும் சமனிலை யடையச் செய்ய அகத்தியர் தென்றிசை ஏகினுர்.

விந்திய மலையைக் கடந்து திருக்காளத்தி, திருவேகம்பம், சிதம்பரம், திருவாவடுதுறை, திருவாரூர் மதுரை, திருநெல்வேலி, தென்காசி முதலிய தலங்களையெல்லாம் தரிசித்துப் பொதியமலையில் அகத்தியர் வந்து தங்கினார். அக்காலை அகத்திய முனிவர் சிவபிரான் திரிகோணமலையின்கண்ணே மகிழ்ச்சியோடும் அமர்ந்து அடியார் செய்யும் பூசையை அங்கீகரித்ததை அறிந்தார். திரிகோணமலையிலிறைவனைத் தரிசித்து வாழ்ந்த அகத்தியமுனிவர் மாவலிகங்கையிற் றீர்த்தமாடுகையில் இறைவன் அசரீரியாகத் தீர்த்தத்தின் மாண்புரைத்துச் சிவலிங்க பிரதிட்டை செய்தற்கு இடமுங் குறித்தார். இறையாணைப்படிக் கரைசையம்பதியிலே அமைக்கப்பட்டதே 'அகத்தியத்தாபனம்'. அகத்தியர் பொதியமலையிடத்தே மீளவுஞ் சென்று அநேக காலஞ் சென்றதன் பின் இலக்குமி இத்தலத்திலே பூசித்து மங்கலத்தன்மை பொருந்திய செல்வத்தைப் பெற்றாள். இதற்குப் பின்பு சூரியகுலத்துதித்த அயோத்தியாபுரி வேந்தன் சிங்கபுயன்[1] நாடிழந்து, நகரிழந்து, படையிழந்து அவலநெஞ்சத்தோடு ஈழம் வந்தடைந்தான். அவன் ஈழத்திற் கதிபதியாகி நன்னிலையடைந்து வாழ்ந்தமைக்கு இத்தலத்திலே அவன் செய்த பூசனை முக்கிய காரணமாகும். இவ்வாறு கங்கைச் சருக்கமும். தாபனச் சருக்கமும் தலவரலாறு கூறுகின்றன பூசைச்சருக்கம் இலக்குமியும் சிங்கபூதனும் பூசனை செய்து பெற்ற அருஞ்செல்வத்தைச் சுட்டுகின்றது.

திருக்கரைசைப் புராணத்திலே காப்புச் செய்யுள் நீங்கலாகப் பாயிரத்திலே பதினான்கு செய்யுள்கள் இடம் பெறுகின்றன. பாயிரத்திலே கடவுள் வாழ்த்து,

---

1. இவன் சிங்கபூதரன் எனவும் சிங்கபுயபூதரன் எனவும் நூலின்கண் பிற இடங்களிற் சுட்டப்படுகிறான்.

குருவணக்கம், புராண வரலாறு, அவையடக்கம் ஆகியன கூறப்பட்டுள்ளன. நூலின்கண் இலங்கைச் சருக்கம், கங்கைச்சருக்கம், தாபனச்சருக்கம், பூசைச் சருக்கம் ஆசிய நான்கு சருக்கங்களுள. இந்நான்கு சருக்கங்களிலும் 155 செய்யுள்கள் காணப்படுகின்றன. எனவே காப்புச் செய்யுளுடன் இந்நூலின் பாடலெண்ணிக்கை 170 ஆகும்.

தலபுராணமாக விளங்கும் இப்புராணத்திலே ஆசிரியரின் புலமையை விளக்கிக் காட்டும் பாடல்கள் பல இடம் பெறுகின்றன. கங்கைச் சருக்கத்திலே இடம்பெறும் மாவலிகங்கை வருணனை கூறும் பிரிவிலே சிலேடையணியைத் திறம்பட அமைத்துள்ளார் ஆசிரியர்[2]. நயம் பொருந்திய பாடல்கள் பலவற்றில் ஈண்டு சிலவற்றைக் காண்பாம்.

பணிலம்வெண்டிரையினூர்ப்பப்பவளமுந்த
வளமுத்தும்
மணிகளுஞ்சாந்தும்பூவும்மாலையும் பிறவும்
வேய்ந்தும்
திணிமதிக்குடைகவித்துத்திரைக்குழாங்கவரி
காட்ட
அணிமணிவீதிதோறுமாழியுமுலாவுமாமால்.
(இலங்கைச்சருக்கம், 24)

ஊட்டுசெஞ்சுடர்மணியினைத்தடியெனவுகந்து
காட்டுத்தம்மிருபதங்களாற்கவர்கின்றகங்கந்

2. செய்யுள். 25-28.

தோட்டுத்துண்டங்கொண்டுண்பதற்காமெனத்
துணிந்து
கூட்டில்வைத்தனபறந்தனவாதரங்கூர்ந்து
(இலங்கைச்சருக்கம், 27)

ஆடுகின்றபாலன்னங்கள்பெடையுடனணைகின்ற
செயலேநோக்கித்
தேடுகின்றவான்களைகடியாதுளந்திகைத்து
நிற்பனகண்டு
காடுகொண்டபூங்கருங்குழற்கடைசியர்கனத
னத்திடையே
நாடுமள்ளர்கள்குவளைகொண்டெறிதரநகைத்தன
வரக்காம்பல்
(தாபனச்சருக்கம், 3)

மேல்வரும் பாடல்களிலே ஆசிரியர் ஈழநாட்டின் வளத்தையும் மக்களின் மாண்பினையும் விதந்தோதுகின்றார்.

காடெலாங்களிநல்யானைகரையெலாம்
பவளக்குப்பை
நாடெலாமிரத்னராசிநகரெலாம்நல்லோர்சங்கம்
வீடெலாஞ்செம்பொற்கூரைவெளியெலாஞ்
செந்நெற்குன்றங்
கோடெலாம் மஞ்ஞையீட்டம் குழியெலாங்
கழுநீர்ப்போது
(இலங்கைச்சருக்கம், 21)

இதத்தசெந்தமிழறிவினாற்சங்கரையேய்ப்பார்
விதத்தயாழிசைப் பாடலால்விஞ்சையர்
நிகர்வார்

குதித்ததேன்சுவைக்கவிதையாற்குறுமுனிபோல்
வார்
மதித்தநீர்வளப்பண்ணைசூழப்பதிமாக்கள்
(இலங்கைச்சருக்கம், 33)

கொலைபடைப்பனதண்ணளியரம்பைகள்கூர
அலைபடைப்பனவெண்டிரைவேலைகளறைவார்
நிலைபடைப்பனவெண்ணிறப்படாகைகணிலமே
விலைபடைப்பனவறுமையும் பொய்ம்மொழி
யெவையும்.
(இலங்கைச்சருக்கம், 37)

திருக்கரைசைப் புராணத்தைத் திரிகோணமலை வே. அகிலேசபிள்ளையவர்கள் பரிசோதித்து மயிலிட்டி மு. நல்லையாபிள்ளையுடைய வச்சிரயந்திரசாலையிற் பதிப்பித்து விகிர்தி வருடம் ஆனி மாதம் (1890) வெளியிட்டார். இப்பதிப்பு யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் எழுதிய பொழிப்புரையினைக் கொண்டிலங்குகின்றது.

## ஆசிரியரின் பிற நூல்கள்

எண்ணெய்ச் சிந்து

ஈழமுந் தமிழும்

இலங்கைச் சரித்திரம்

போர்த்துக்கீசர் காலம்

ஒல்லாந்தர் காலம்

ஆங்கிலேயர் காலம்

ஈழத்து நாடோடிப் பாடல்கள்

மட்டக்களப்பு மான்மியம்

கண்ணகி வழக்குரை

ஆசிரியரின்

அடுத்த நூல்

★

ஈழத்தில் எழுந்த

பிரபந்த நூல்களின்

வரலாறு கூறும்

## ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு

பாகம் இரண்டு

★

விரைவில் வெளிவரும்

this edition
first published
in ceylon 1970
by
m. a. rahman
of
arasu publications
and
printed in ceylon by
rainbow printers
231 wolfendhal street colombo 13